
"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

ஆடி - ஆவணி - புரட்டாதி 1999

# கலசம்
# KALASAM



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00


JAS
South Indian Instruments
Khol D174
Mirdangam D171
Tavil D178
S130S S130L
Nathaswaram
Uduku D181
Violin
Khanjira D179
JAS Musicals Limited
Manufacturers, importers, exporters, distribut and restorers
Tel: 0181-574 2686 Fax: 0181-571 7445
musicals.com
©Copyright

மணி 8 ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம் ஒலி 27

கலசம்

KALASAM

ஆடி – ஆவணி – புரட்டாதி 1999

# சைவம் என்பது உணர்வா? உணவா?

இரண்டாயிரம் வருடம் வரமுன்பு வருகின்ற இதழ் இக் கலசம். கலசத்தின் கடந்தகாலத்தைத் திரும்பிப் பார்த்தபோது எமக்கே வியப்பாக இருக்கின்றது. எத்தனை பாராட்டுகள்! எத்தனை காழ்ப்புணர்வுகள்! இவைகளையெல்லாம் தாண்டி தனக்கேயுரித்தான தைரியத்தோடு கலசம் நிமிர்ந்து நிற்பதைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கின்றது.

இம்முறை கலசம் பல புதிய விடயங்களைத் தாங்கி வருகின்றது. மீண்டும் சொல்கிறோம் கலசம் இன்னொரு பஞ்சாங்கமல்ல. இறை உணர்வினை மக்கள் மத்தியில் தோன்றவிடாது தடுத்துக் கொண்டிருக்கும் முட்களை அகற்றுவதும் முரண்பாடான கருத்துக்களை மோதவிட்டுச் சரியான கருத்துக்களை மக்களுக்குத் தெரிவிப்பதுமே கலசத்தின் தலையாய பணி.

கேரள மாநிலத்தைச்சேர்ந்த நித்ய சைதன்ய யதி என்பவரின் நேர்காணல் ஒன்று வருகின்றது. பல புதிய அணுகுமுறைகளை இப்பேட்டியில் நீங்கள் காண்பீர்கள். அத்தோடு வேத சிவாகமங்களைப் பற்றிய சிந்தனைக்குரிய கட்டுரைகள் பல உள்ளன.

திருக்கோவில்களில் அர்ச்சனை சம்பந்தமாக எழுப்பப்பட்ட வாதவிவாதங்கள் செம்மையாக கலசக்களத்தில் நடைபெறுகின்றன. இம்முறை பூசைகள் சமஸ்கிருதத்திலேயே நிகழ்த்தப்படவேண்டுமென வலியுறுத்தி முனைவர் ஒருவர் எழுதிய கட்டுரை வருகின்றது.

அடுத்து சைவன் ஒருவனின் இலட்சணமென்ன என்ற தலைப்பில் எழுப்பப்பட்ட பிரச்சினை கலசக்களத்தில் மட்டுமல்ல வெளியுலகத்திலும் காரசாரமாக நடைபெற்று வருகின்றது. இதுசம்பந்தமாக சேக்கிழார் அடிப்பொடி இராமச்சந்திரன் அவர்களின் கருத்துக்களை அடுத்த கலசத்தில் தரவுள்ளோம்.

ஒருவர் உண்கின்ற உணவு அவரைச் சைவரா அல்லது சைவரல்லாதவரா என்பதைத் தீர்மானிக்கின்றதா அல்லது சைவர் என்கின்ற இறை உணர்வின் எல்லையினை அல்லது அளவினைத் தீர்மானிக்கின்றதா என்ற வகையில் இப்பிரச்சினையைச் சிந்திக்கவும்.

கனடாவில் நடைபெற்ற சைவ மாநாட்டின் போது ஒரு பேராசிரியர்(வெள்ளையங்கிரி) 63 நாயன்மார்களில் அரைவாசிக்குமதிகமான நாயன்மார்கள் மாமிசம் உண்டதாகவும் இன்றும் காஸ்மீர் பகுதி பிராமணர்கள் மாமிசம் உண்பதாகவும் பகிரங்கமாகக் கூறினார். இவைகளெல்லாம் சிந்தனைக்குரியவை.

ஆகவே நாம் குதர்க்கவாதமாக இதனை எடுத்துக் கொள்ளாமல் சரியான ஆக்கபூர்வமான சிந்தனையாக எடுத்து முன்நகர்வதுதான் சாலச் சிறந்தது என்று நினைக்கின்றேன்.

ஒரு சில மனிதர்களின் சுயநல சிந்தனைகளாலும் அறிவுப் பூச்சியத்தாலும் காலங்காலமாக வாழக்கூடிய கருத்துக்கள், சிந்தனைகள் அடிபட்டுப்போகக் கூடாது என்பதில் கலசம் மிகவும் விழிப்பாக இருக்கின்றது என்பதனை அடக்கத்தோடு தெரிவிப்பதில் கலசம் மகிழ்வெய்துகின்றது.

ஓம் நமசிவாய!

-ஆசிரியர்-

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

**கலசம் - 27**

ஆடி- ஆவணி- புரட்டாதி 1999

# உள்ளே...............

| | பக்கம் |
|---|---|
| மந்திரம், இசை மௌனம் | 3,4,5 |
| வேத சிவாகமங்களின் | |
| தோற்றமும் வழிபாடும் | 6 |
| திருக்கோவில்களின் அர்ச்சனை | 7,8,9,10 |
| விளம்பரம் | 11,48 |
| திருமூலரும் சைவசித்தாந்தமும் | 12,13 |
| ஆறுமுகநாவலர் | 14 |
| துளிர்கட்டும் | 15,26,27 |
| வேதார்ந்த சித்தாந்த அணுவிஞ்ஞானம் | 18,19,20 |
| எங்கள் ஆலயம் | 29 |
| வாசகர் கடிதம் | 30,31 |
| பெண்கள் உலகம் | 32,33 |
| முருகப்பெருமான் | |
| தோற்றமும் ஏற்றமும் | 34—37 |
| ஆலய செய்திகள் | 42,47 |
| பிச்சர் நச்சரவர் | 38—41 |
| சிவசக்தியை கொண்டாடும் நவராத்திரி | 43 |

ஆசிரியர் : திரு. மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர்: திரு க. ஜெகதீஸ்வரன்
நிர்வாகம்: திரு வ. இ. இராமநாதன்
உதவி நிர்வாகம்: திரு சிவ. அசோகன்
நிர்வாகக்குழு:
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன்
திரு. சி. அற்புதானந்தன்
திரு. தர்மலிங்கம்
Dr. N.நவநீதராசா
திரு இ. சிவானந்தராசா
தொடர்பு முகவரி:
***42 Stoneleigh Road, Clayhall, Ilford,***
***Essex IG5 0JD***
***Tel: 0181 550 4233***
***Fax: 0181 550 4233***

கலசத்தில் வரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளராவர். கட்டுரைகளை நிராகரிக்கவோ திருத்தவோ ஆசிரியர் குழுவுக்கு உரிமை உண்டு. பெயர், முகவரி இல்லாது வரும் கட்டுரைகளோ மற்றும் கடிதங்களோ கவனத்திற் கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

இலங்கையில் தொடர்பு:
Mr. K. Balasubramanium, 131 Sangamitha Mawatha, Colombo 13, Colombo

ஜேர்மனியில் தொடர்பு:
Mr. K. Parameswaran, Alte-Aakob Str 134, 10969 Berlin, Germany Tel: 030 251 0209

டென்மார்க்கில் தொடர்பு:
Mr R. Rajendran, Bjergmarken 21, St TV 4300 Holbeck Denmark

கனடாவில் தொடர்பு:
Mr. Siva Thirunavukarasu, 25 Thunder Grove, Apt 1512 Scarborough,Ontario Tel: 416 412 3883

மதிப்புக்குரிய துன்னையூர் ராம் லோகேஸ்வரக் குருக்கள் அவர்கள் மனமுவந்து இலங் கையில் கலசத்துக்கான பொறுப்புக்களை ஏற்றுக் கொண் டுள்ளார். கட்டுரைகள் அனுப்பு வோர் சந்தாதார—ராக விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**428 R.A. De Mel. Mawatha, Colombo 3**
**Tel: 576283**

# மந்திரம், இசை, மௌனம்

## நித்ய சைத்தன்ய யதியுடன் உரையாடல்

### தொகுப்பு : ஜெயமோகன்

நவீன கேரளத்தின் சிற்பியான நாராயண குருவின் மாணவர்களில் பலர் சமூகச் சீர்திருத்த இயக்கத்திலும் சுதந்திர போராட்டத்திலும் பெரும் பங்காற்றியுள்ளனர். கலை இலக்கியத் துறைகளிலும் அரசியல் பொருளாதாரத் துறைகளிலும் மறுமலர்ச்சிக்கு வழிகோலியுள்ளனர். வரலாற்றாய்விலும் இதழியலிலும் முன்னோடிகளாக விளங்கியுள்ளனர். அந்த அலை இப்போது மூன்றாவது தலை முறையாகத் தொடர்ந்து வருகிறது. இவ்வியக்கத்தை எவ்வளவு கறாராக மதிப்பிட்டாலும் அசாதாரணமான ஆளுமைகள் என ஐம்பது பெயர்களையாவது குறிப்பிட வேண்டியிருக்கும். ஆயினும் அவர்களில் மூவர் முதன்மையான–வர்களாகக் கருதப்படுகின்றனர். மறுமலர்ச்சிக் கவிஞரான மகாகவி குமரன் ஆசான் இலக்கியத்திலும், புரட்சிக்காரரும் சமூகச் சீர்திருத்த வாதியுமான சகோதரன் அய்யப்பன் சமூகப் பணியிலும், நடராஜகுரு ஆன்மிகத்திலும் நாராயண குருவின் பணியை முன்னெடுத்துச் சென்றனர். நடராஜகுருவின் தந்தை திரு. பல்பு ஈழவச்சாதியில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்றவர். அன்றைய திருவிதாங்கூர் அரசு அவருக்கு வேலை தரமறுத்தது. அவர் மைசூருக்குச் சென்று சிறிய வேலை ஒன்றில் அமர்ந்து, படிப்படியாக மிக உயர்ந்த பதவியை அடைந்தார். மைசூரில் காலரா பரவியபோது தைரியமாகப் பணி புரிந்து மகாராஜாவின் நம்பிக்கையையும் மக்களின் பெரு மதிப்பையும் பெற்றார். சுவாமி விவேகானந்தர் மைசூருக்கு வருகை தந்தபோது, அவருடன் உரையாடும் வாய்ப்பு டாக்டர் பல்புவுக்குக் கிடைத்தது. கேரளம் சென்றிருந்த போது அங்கு நிலவிய சாதி வெறியைக் கண்ட விவேகானந்தர் கேரளம் ஒரு மன நோய்விடுதி என்று கூறியிருந்தார். அந்த நிலைமையை எவ்வாறு மாற்றலாம் என்று டாக்டர் பல்பு விவேகானந்தரிடம் கேட்டார். உங்கள் நாட்டில் தன்னலமற்ற துறவி ஒருவர் இருந்தால் அவரை முன்னிறுத்தி சமூகச் சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கும்படி விவேகானந்தர் ஆலோசனை கூறினார். **துறவியின் சொல்லே இந்திய சமூகத்தில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தும் என்றார்.**

ஊர் திரும்பிய டாக்டர் பல்பு நாராயணகுருவைச் சந்தித்தார். நாராயண குரு தம் நாடோடி வாழ்வை விட்டு விட்டு, திருவனந்தபுரம் அருகே அருவிக் கரை எனும் ஊரில் ஆசிரமம் ஒன்றை நிறுவி வாழ்ந்து வந்தார். **ஒரு ஜாதி ஒரு மதம் ஒரு தெய்வம்** என்று அவர் முப்பது வருடங்களுக்குப்பின் அறிவித்த ஆதாரமான கொள்கையை அப்போதே தன் ஆசிரம முகப்பில் பொறித்திருந்தார். மரபார்ந்த, ஞான நூல்களில் ஆழ்ந்த கல்வி அறிவு அவருக்கு இருந்தது. டாக்டர் பல்புவின் முயற்சியால் ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன சபா (SNDP) நிறுவப்பட்டு ஈழவர்களை கல்வியிலும் பொருளாதார நிலையிலும் மேம்படுத்தும் சமூகச் சீர்திருத்தப் பணி துவங்கப்பட்டது. முப்பது வருடத்தில் அது பெரும் அறிவியக்கமாக வளர்ந்து கேரளத்தின் முகத்தையே மாற்றியமைத்தது.

டாக்டர் பல்புவின் இரண்டாவது மகனாக நடராஜகுரு 1895ல் பெங்களூரில் பிறந்தார். சென்னை பல்கலைக் கழகத்தில் நிலவியலில் முதுகலைப்பட்டம் பெற்றார். சுவிட்சர்லாந்து சென்று அங்குள்ள சர்வதேசக் கல்வி நிறுவனமொன்றில் பேராசிரியரானார். பின்னர் பாரிஸ் சென்று சார்போன் (Sorbonne) பல்கலைக் கழகத்தில் புகழ்பெற்ற தத்துவ ஞானியான ஹென்றி பெர்க்ஸனின் மாணவரானார். கல்விமுறை பற்றி ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றார். பின் ஊர் திரும்பி நாராயண குருவின் மாணவரானார். துறவறம் பூண்டு இந்தியா முழுக்க சுற்றியலைந்தார். 1923 இல் ஊட்டியில் ஃபெர்ன் ஹில் எனும் பகுதியில் பழைய தேயிலைத் தொழிற்சாலை யொன்றை அன்பளிப்பாகப் பெற்று நாராயண குருகுலத்தைத் தொடங்கினார். 1940 இல் தத்துவ சிந்தனையாளரான ஜான்ஸ்பியர்ஸ், நடராஜகுருவின் மாணவரானதும் அவருடைய விருப்பத்திற்கேற்ப நூல்களை எழுதியும், உலகப் பயணங்கள் மேற்கொண்டும், நாராயணகுருவின் உபதேசங்களை உலகமெங்கும் பரப்பத் தொடங்கினார். பல உலகநாடுகளில்

குருகுலத்தின் கிளைகள் அமைக்கப் பட்டன. 1973இல் தன் 78 வயதில் உயிர் நீத்தார்.

நித்திய சைதன்ய யதி நடராஜ குருவின் மாணவர், இயற்பெயர் ஜெயச்சந்திரன். 1924 இல் பிறந்தவர் வசதியான ஈழவர் குடும்பம். தாயின் பெயர் காமாட்சி அம்மா. தந்தை ராகவப் பணிக்கர்: ஆசிரியர், கவிஞர், விமரிசகர், குழந்தையிலக்கியவாதி. அவர் எழுதிய ரத்னவல்லி என்ற கவிதைநூல் குமரன் ஆசானின் முன்னுரையுடன் வெளிவந்தது. சுமார் 12 நூல்களை எழுதியிருக்கிறார். நித்ய சைதன்ய யதி பள்ளியிறுதிவரை பந்தளத்தில் படித்தார். ஆலுவா யூனியன் கிறிஸ்டியன் கல்லூரியில் எ∴ப். ஏ. படிப்பை முடித்தபின் திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியில் பி.ஏ. (ஹானர்ஸ்), எம்.ஏ. பட்டங்களைப் பெற்றார். பம்பாய், டாடா இன்ஸ்டிட்யூட் ஆ∴ப் சோஷியல் சயன்ஸ் இல் டாக்டர் பட்டத்திற்காகப் பார்வையற்றோரின் உளவியல் பற்றி ஆய்வு செய்தார். பட்டப் படிப்பில் தத்துவமும் தருக்கமும்: பட்ட மேற்படிப்பில் தத்துவம், புராதன தத்துவம், உளவியல் ஆகியவையும், டாக்டர் பட்ட ஆய்வில் உளவியலும் அவருடைய துறைகள் ஆகும்.

1952 முதல் கொல்லம் எஸ். என். கல்லூரியில் உளவியல் துறைத் தலைவர்: 1954 முதல் சென்னை விவேகானந்தர் கல்லூரியின் முது நிலைத் தத்துவப் பேராசிரியர்: 1960 முதல் கொழும்பு வித்யோதயாப் பல்கலைக்கழகத்தின் தத்துவப் பேராசிரியர்: 1963 முதல் தில்லியில் உளவியல் மற்றும் ஆன்மிக ஆய்வு மையத்தின் இயக்குனர்: 1967இல் இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் யோக ஆராய்ச்சி மற்றும் பலவகை உளவியல் ஆய்வுகளுக்கான சிறப்பு ஆய்வு ஒருங்கிணைப்பாளர் ஆகியவை இந்தியாவில் யதி வகித்த பதவிகள். 1971இல் அமெரிக்கா சென்று போர்ட்லாண்ட் பல்கலைக் கழகம், சொனோமா ஸ்டேட் கல்லூரி ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1978இல் ஹவாய் பல்கலைக் கழகத்தில் கவிதைத் துறைச் சிறப்புப் பேராசிரியராக பணியாற்றினார்.

பிதோவன், வான்கா, நிஜின்ஸ்கி, தஸ்தயேவ்ஸ்கி ஆகியவர்களைப் பற்றிய கருத்தரங்குகளை ஓரிகன் போர்ட்லண்ட் பல்கலைக் கழகத்தின் சார்பிலும் வாஷிங்டன் லா சென்டர் (La Centre, Washington) சார்பிலும் நடத்தியுள்ளார். வாடிகன் நடத்திய சர்வதேச மதக்கருத்தரங்கிலும், பிரபல உளவியல் ஆய்வாளரான ஆர். டி. லெய்ங் நடத்திய உளவியலாய்வுக் கூட்டங்களிலும் பங்கேற்றிருக்கிறார். ஆங்கிலத்தில் சுமார் நாற்பது நூல்களையும், மலையாளத்தில் சுமார் நூற்றி ஐம்பது நூல்களையும் எழுதியுள்ளார். மலையாள நூல்களில் பெரும்பாலானவை இலக்கியம், கலை, அறிவியல் துறைகள் பற்றிய அறிமுக நூல்கள். சமீபமாக பிருஹதாரண்யக உபநிடதம் பற்றிய விரிவான ஆய்வு, மூன்று பாகங்களாக மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது.

யதி இப்போது உதகமண்டலத்தில் தங்கியுள்ளார். சமீபகாலமாக ரத்த அழுத்தம் மற்றும் இருதயநோய் காரணமாக அதிகம் பேசமுடியாத நிலையில் உள்ளார்.

குரு நித்ய சைதன்ய யதி என்று பரவலாக அழைக்கப்படுகிறார்.

## கேள்வி பதில்

***பம்பாயில் ஆய்வு மாணவராக இருந்தீர்களல்லவா?***

ஆம். சில வருடங்கள் குருவுடன் ஊட்டியில் தங்கினேன். தொடர்ந்து கற்ற நாட்கள் அவை. குரு என்னை ஐந்துமணிக்கு வந்து கதவைத் தட்டச் சொல்வார். பழைய பெஞ்சு மீது பத்மாசனத்தில் அமர்ந்திருப்பார். நான் பென்சில் தாளுடன் இருப்பேன். சரளமாகச் சொல்லிக்கொண்டே போவார். பல்லாயிரம் பக்கங்கள் எழுதியுள்ளேன். ஒவ்வொரு துறையிலும் அத்துறையின் முறைமை சார்ந்த கல்வி குருவிற்கு இருந்தது. அது அவர் பெர்க்ஸனிடம் பெற்ற பயிற்சி. முறைமையில்லாத மனப் பாய்ச்சல்களை அவர் ஏற்பதில்லை. பிறகு நாங்கள் நடக்கச் செல்வோம். மலைச்சரிவில் இறங்கி டப்பாக்களில் குடிநீர் மொண்டு வருவோம். சமைப்போம். நன்றாக அவியல் வைக்கத் தெரியாத ஒருவனால் நல்ல அத்வைதி ஆக முடியாது என்பார் குரு! விரும்பிச் சாப்பிடுவார். ஆனால் எங்களிடம் பணம் குறைவு. பலசமயம் பட்டினி கிடப்போம். பணத்துடன் யாரேனும் வரும்வரை பேசியபடி இருப்போம்.

ஒருநாள் சார்லஸ் கிங்ஸ்லியின் நூல் ஒன்றில் ∴பிலாமின் எனும் கதாபாத்திரம் தன் குருவைவிட்டுப் பிரிந்து செல்லும் இடத்தைப் படித்தேன். எனக்கு உடனே கிளம்பிவிட வேண்டும் என்று பட்டது. குருவிடம் கூறினேன். எங்கே போக உத்தேசம்? என்றார். பம்பாய் என்றேன். பம்பாய்க்கு ரயில் கட்டணம் ஐம்பது ரூபாய். அவர் ஐம்பது ரூபாய் தந்தார். பிறகு ஒரு ஐந்து ரூபாய். விடைபெறும் போது ஒரு ரூபாய். என் நண்பர் தன் வீட்டுக்குக் கூட்டிச் சென்றார். ஒரே அறை உள்ள வீடு. அதிலேயே சமையல், குளியல், படுக்கை இரவில் கால்களை வெளி வராண்டாவில் நீட்டியபடிதான் தூங்குவார். ஆனால் மகிழ்ச்சியாக வாழ்ந்து

வந்தார். எனக்கு செருப்பு வாங்கித் தந்தார். பகலில் அருகேயுள்ள மடத்திற்குப் போவேன். அங்கு துறவிகளுக்கு உணவும், ஒரு அணாவும் தருவார்கள். ஒருமுறை வெளியே வந்து பார்த்தபோது என் செருப்பு தொலைந்து விட்டது. நண்பரை எண்ணி மனம் கலங்கினேன். ஒரு பணக்கார வியாபாரி தன் செருப்புகளைத் தர முன்வந்தார். நான் விளையாட்டாக இன்னொருவர் ஷூவிற்குள் கால் நுழைப்பது என்றால் என்ன தெரியுமோ என்று கேட்டேன். நான் ஆங்கிலம் பேசுவதைக் கேட்டு அவருக்கு வியப்பு. என்னை அவருடன் தங்க வைத்தார். படிக்க ஏற்பாடு செய்து தந்தார். டாடா இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்தேன். பார்வையற்றோரின் உளவியல் பற்றி மூன்று வருடம் ஆய்வு செய்தேன். மகத்தான அனுபவம் அது.

**பார்வையற்றோரின் உலகம் வித்தியாசமானது அல்லவா?**

தவறான புரிதல் இது. அதை உணர நேர்ந்ததையே நான் மகத்தான அனுபவம் என்றேன். உலகை நாம் புலன்களால் அறிவதில்லை. மனதால் தான் அறிகிறோம். உதாரணமாக நான் ஓர் இளைஞனை பேட்டி கண்டேன். அவன் தன் எதிர்கால மனைவி பற்றிச் சொன்னான். முதல் தகுதி அழகு, ஆம்: உடலழகுதான். எப்படி அவன் அழகை அறிகிறான்? அவன் தன் மீதி நான்கு புலன்களால் பெண்களின் அழகை அறிகிறான், மதிப்பிடுகிறான், மகிழ்கிறான் என்று தெரிந்தது. எப்படி? நாம் எப்படி மதிப்பிடுகிறோம் என அவன் அறிவதில்லையே, அதுபோல நாமும் அறியமுடியாது. நாம் அவர்களை வேறுவகையான மனம் உடையவர்களாக எண்ணுவது மிகவும் தவறானது.

விமரிசன ரீதியாக முன்வைக்கப்படும் கொள்கைகளும் வடிவ நிர்ணயங்களும் முற்றிலும் புறவயமானவையாகவும் பொதுவானவையாகவும் இருக்க முடியாது. புறவயமானதாக மாற்றப்படும் தோறும் இலக்கியக் கொள்கைகளும் வடிவங்களும் வரட்டு விதிகளாக மாறி இலக்கியத்திற்கு எதிரானவை ஆகிவிடும். முதல் தர விமரிசகனின் முதல் தர விமரிசனக் கொள்கையை நாலாந்தர விமரிசகன், அபத்தமான படைப்பை வியந்து பாராட்டுவதற்குப் பிழையின்றிப் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம். நான் கூறும் எல்லா விமரிசனக் கொள்கைகளும் என் அந்தரங்கமான வாசிப்பனுபவத்தின் விளைவுகளேயாகும்.

***எப்படி நாராயண குருகுலத்தின் தலைவர் ஆனீர்கள்?***

1980ல் குரு இறப்பதற்கு முன் ஒரு நாள் என்னை அழைத்தார். என்னிடம் குருகுலத்தின் பொறுப்பை ஒப்படைப்பதாகச் சொன்னார். சுதந்திரம் தடைபடலாகாது என்று என் பரம்பரைப் பெரும் சொத்தை உதறியவன் நான். மறுத்துவிட்டேன். பிறகு ஒருநாள் குரு என்னிடம் ஒரு பேனாவைத் தந்தார். சில நாள் கழிந்து அதை திரும்பக் கேட்டார். திரும்ப வாங்கியதும் சிரித்தபடி, இதைப் போல குருகுலத்தை உன்னிடம் தற்காலிகமாக ஒப்படைக்கிறேன் என்றார். என்னால் மறுக்க முடியவில்லை. என் பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்றுவது என் வழக்கம். குருவின் உத்தரவுகள் அனைத்தையும் நான் முடிந்தவரை நிறைவேற்றியுள்ளேன். இறுக்கமற்ற நடை முறைகொண்ட ஒரு ஞானத் தேடலுக்கான அமைப்பாகவே இக் குருகுலத்தை குரு உருவகித்திருந்தார். அப்படியே இன்றுவரை தொடர்கிறது. பல உலகநாடுகளிலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் கிளைகள் உள்ளன. ஈஸ்ட் வெஸ்ட் யூனிவர்சிடி என்ற அமைப்பு பிரம்ம ஞானம் பெற விரும்புபவர்களுக்கு அடிப்படைக் கல்வியை அளிக்கிறது. ஆய்வு நூலகங்கள் பல செயல்படுகின்றன. இச்செயல்களுக்கு அப்பால் என் வாழ்க்கை ஒருதேடலாகவும் அழகனுபவமாகவும் உள்ளது.

என்ன செய்து கொண்டிருக்கிறது இந்த உலகம்? புதிய தெய்வங்களை கண்டுபிடிக்கிறது. புதிய சட்டங்களை உருவாக்குகிறது. பாப்லார் மரங்களில் காற்று ஊடுருவிச் செல்லும் ஓசை. காலையொளியில் ஒரு தேவனைப் போல சுடர்விட்டபடி ஒரு தேனீ இதோ செல்கிறது. அதன் ரீங்காரத்தில் ஓங்கார நாதம். உலகை விடுங்கள். நான் கேட்க விரும்பும் பூமியின் வரலாறு இதில்தான் உள்ளது

–ஹெர்மன் ஹெஸி

(ஊர்சுற்றல்: வசனகவிதை)


*1–1–1996*

(இன்னும் வரும்........)

## சிந்தனைச் செல்வங்கள்.

இரவு நேரங்களில் நிலவைப் பார்த்தவாறே ' என் மனமும் இந்தப் பூரண நிலவைப் போல் களங்கமற்றதாக இருக்க வேண்டும். நிலவிற் கூட ஒரு சிறிதாவது களங்கமுண்டு. ஆனால் என் மனமோ அதுவுமின்றித் தூயதாக இரக்கட்டும்' என்று பிரார்த்திப்பது மிகச் சிறந்த வழி. இவ்வழியை நாம் தினமும் கடைப்பிடித்து எம்முள்ளங்களைத் தூயதாக்கி இறைவன் எம்முள்ளங்களில் குடிபுக முயற்சிப்போம்.

# வேத சிவாகமங்களின் தோற்றமும் வழிபாடும்



தமிழ்நாடு இராமநாத சிவாசாரியார்

ஸகல ஜீவராசிகளுக்கும் அருள் பாலித்து வரும் கயிலை நாதனான இறைவனை வணங்கிய உமாதே வியார், தன் திருமணம் முடிந்து புறப்படும் நேரத்தில் தன் தந்தையார், "அம்மா, இன்றுமுதல் நீ மணவா ழ்க்கை கணவனோடு துவங்க இருக்கிறாய். பெண்கள் தன் கணவன் இல்லத்தில் வாழ்க்கை துவங்குமுன் தன் கணவனின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொண்டு அவர் விரும்புவதை யெல்லாம் தனக்கும் விருப்பமாகவும் அவர் வெறுப்பதையெல்லாம் தானும் வெறுத்து ஒதுக்கியும் வாழ்க்கையை துவங்கினால் அவள் மட்டுமன்றி பிறந்தவீடு புகுந்தவீடு இரண்டுமே பெருமை கொள்ளும்" என்று கூறியதை நினைத்துத் தன் கணவனான சிவபெருமானின் விருப் பங்களை எப்படி அறிவது தாய் தந்தையர்களோ சகோதர சகோதரி களோ இல்லையே, என்று யோசித்த உமாதேவியார் இறைவனிடமே வணங்கித் தங்களுக்கு மிக விருப்பமானதை அறிந்து நடக்க ஆசைப்படுவதாகக் கூறினாள். இறைவன் புன்னகையுடன் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை என உரைத்தருளினார்.

**எண்ணியலாகமம் இயம்பிய இறைவன் தாம்விரும்பும்**
**உண்மையாவது பூசனையென உரைத்தருள**
அண்ணலார் தமை அர்ச்சனைபுரிய
ஆதரித்தெழுந்தார்

பெண்ணில் நல்லவளாகிய பெருந்த வக்கொழுந்து சகல பூஜா சாமான்களுடன் வந்து இறைவனை வணங்கி பூசனைபுரிய அருள் பாலிக்க வேண்டினாள்.

இறைவரோ தேவி பூசனைக்குரிய இடம் இதுவல்ல பூலோகத்தில் பூசனைகள் செய்து அதன் பயனை கயிலாயத்தில் அனுபவிக்க வேண்டு மென்று கூறிட, உமா தேவியார் பெருமானே தங்களை நான் பூலோகத்தில் எங்கு பூசை செய்வது எப்படி பூசை செய்வது அந்தமுறை களையும் அருள்பாலிக்க வேண்டு மென வேண்டினாள். இறைவன் காஞ்சிபுரத்தில் பூஜிப்பாயாக என்று கூறியதுடன் தனது ஐந்து முகத் திலிருந்து, கிழக்கு முகமாகிய தத் புருஷத்திலிருந்து இருக்கு வேதத் தையும் தெற்கு முகமாகிய அகோரத் திலிருந்து யசுர் வேதத்தையும் வடக்கு முகமாகிய வாமதேவத் திலிருந்து ஸாமவேதத்தையும் மேற்கு முகமாகிய ஸத்யோத ஜத்திலிருந்து அதர்வண வேதமும் ஊர்த்துவ முகமாகிய ஈசானத்தி லிருந்து இருபத்தியெட்டு சிவா– கமங்களையும் பல உபாகமங்க ளையும் தேவிக்கு உபதேசித்து அருளினார். **ஆகதம் சிவவக் ரேப்யப் கதஞ்ச கிரிஜமுகே** என்கிறது ஆகம வாக்கியம். தங்களை எந்த வடிவத்தில் பூஜிக்க என்று தேவி கேட்க ஸகல நிஷ்கள வடிவமான லிங்கரூபத்தில் வைத்து வழிபாடு செய்வாயாக. அந்த லிங்க மானது சைலஜும் கருங்கற்களினாலும் லோகஜும் தங்கம் வெள்ளி முதலான லோகங்களாலும் ரத்னஜம் நவரத்னங் களாலும் மற்றும் பன்னிரெண்டு விதமான சாணிகலிங்க பூசை முறைகளையும் (மண், சந்தனம் புஷ்பம் வெண்ணை, ஜலம், ருத்விசரம், விபூதி அரிசி அன்னம் கூர்ச்சம், புத்தகம்) என எடுத்துக் கூறினார்.

தேவி மணலை சிவமாகப் பாவித்துப் பூசை செய்யலானாள்.

அதனை ஞானக்குழந்தையான திரு ஞான சம்பந்த சுவாமிகள் வேதத்தின் மந்திரத்தால் **வெண் மணலே சிவமாக யோகத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே** என்று பாடியுள்ளார். இப்படி தினம் வழிபாடு செய்து வந்த தேவியைச் சோதிக்க எண்ணிய இறைவன், தன் தலையில் உள்ள கங்கையை அவிழ்த்துவிட ஒரே பேரிரைச்சலுடன் வெள்ளம் திரண்டு வரத் தேவி தன்னை மறந்து தான் பூஜிக்கும் இறைவனைப் பாதுகாக்கத் தன்னிரு கைகளால் அணைத்துக் கொண்டாள். இந்தக் காட்சியினை ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சி தேவாரத்தில்

**எள்கள் இன்றி இனையவர் கோலை**
**ஈசனை வழிபாடு செய்வாள்போல்**
**உள்ளத்துள்கி உகந்துமை நங்கை**
**வழிபடச் சென்று நின்றவா கண்டு**
**வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி**
**வெருவி ஓடித்தழுவ வெளிப்பட்ட**
**கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்**
**காணக் கண் அடியேன் பெற்றவாறே**

இதனைக் கண்ட இறைவன் தேவி முன் தோன்றி உனது பூசை வழி பாட்டில் மிக மகிழ்ந்தேன் வேண்டும் வரம் யாது எனக் கேட்க, இறைவா தங்களை என்றும் பிரியாமல் தங் களின் ஒருபாகமாக இருக்க அருள் பாலிக்க வேண்டும். மேலும் தங்கள் பூசை வழிபாடுகள் தடைப்படாமல் சிறப்பாக நடைபெற அருள் பாலிக்க வேண்டுகிறேன் என்றிட இறைவன் தனது ஐந்து முகங்களின்று ஐந்து ரிஷிகளை சிருஷ்டித்தார். அவர்கள் கௌசிகன், காசியப்பர், பரத்துவாசர், கௌதமர், அகஸ்த்தியர் என்ற ஐவர் ஆவர். அவர்களைப் படைத்து அவர்களுக்குத் தீக்ஷை செய்து அவர்களை கர்ஷணாதி பிரதிஷ் டாந்தம் பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம், உத்ஸவாதி பிராயச்சித்தம் செய்து ஆத்மார்த்த பரார்த்த பூசை வழிபாடுகளை ஆகமமுறைப்படி செய்ய வேண்டும் எனக் கூறிட ஆகம முறைப்படி ஆலய நித்ய நைமித்திக காம்ய பூசை முறைகள் நடைபெற்று வரலாயிற்று.

**ஆகமமாகி அன்னிப்பான் தாள்வாழ்க.**
**பூமே லானும் பூமகள் கேள்வனும்**
**நாமே தேவர் எனாமை நடுக்குறத்**
**தீமே வும்உருவாதிரு வேகம்பா**
**ஆமே அல்லற் படவடி யோங்களே.**
**–அப்பர்**

# திருக்கோவில்களில் அர்ச்சனை

முனைவர் கயிலை தவத்திரு குமாரசாமித் தம்பிரான்

திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை செய்யலாம் என்பார் அனைவரும் காட்டும் ஒரே ஆதாரம் **அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்** என்ற பெரியபுராண சொற்றொடரேயாகும். வாதப் பிரதிவாதங்களால் திருக்கோயிலில் பூசை வடமொழியிலா? தமிழ் மொழியிலா? வடமொழிப்பூசை தோன்றியது எப்போது? அதுதான் தமிழர் நெறியா? என்றெல்லாம் சர்ச்சைகள் உண்டாகி விட்டன. எந்தச் சர்ச்சைக்கும் இடமில்லாமலேயே பெரியபுராணப் பாடல்கள் உள்ளன.

**எண்ணில் ஆகமம் இயம்பிய** இறைவா என்றதால் ஆகமங்களை அருளியவன் இறைவன் என்பது தெளிவாகிறது. பூசை எனவுரைத்தருள அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள் என்றதால் பூசை என்பதே அருச்சனை என்பதாகிறது. நீமொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அரச்சனை புரிய என்றதால் இறைவன் மொழிந்த ஆகமத்தின் வழியில் பூசை செய்தல் தெளிவாகிறது. அர்ச்சனை பாட்டே போற்றியல்ல என்ற தெளிவு தோன்றும்போது பாட்டு எது? என்ற ஐயம் எழலாம்.

திருஞானசம்பந்தர் எனதுரை தனதுரை என்றதால் ஞானசம்பந்தர் (முதல் மூன்று) திருமுறை இறைவன் வாக்காகிறது. அப்பர் பெருமானின் பாடல் கேட்ட பெருமான் நாவரசர் என்ற பட்டம் அளித்ததும், அவர் பாடலுக்கு வாசியில்லாக் காசளித்தும் சிறப்பித்தார். எனவே நான்கு, ஐந்து, ஆறாவது திருமுறைகளாகிய திருநாவுக்கரசர் தேவாரம் இறைவன் முத்திரை பெற்றது. ஏழாம் திருமுறையாகிய சுந்தரர் தேவாரம் இறைவனாலேயே அடியெடுத்துக் கொடுக்கப் பெற்றது. மாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறையை இறைவன் கைப்பட எழுதிக் கையொப்பமும் இட்டுள்ளார். ஒன்பதாம் திருமுறை (பல்லாண்டு) இறைவன் தேரை இழுத்தது. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம், **என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே** என்றதால் இறையருளால் தோன்றியதாகிறது. பதினோராம் திருமுறை இறைவனால் அருளப்பெற்ற திருமுகப்பாசுரத்தை முதலாக கொண்டது. பன்னிரண்டாம் திருமுறை உலகெலாம் என்று இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றது. எனவே இறைவனால் அருளப்பெற்ற ஆகம வழி பூசையில் இறைவன் அருள்பெற்ற திருமுறைப் பாடல்கள் பாடுவதே அருச்சனை என்பது தெளிவாகிறது. எல்லா ஐயங்களுக்கும் விடை இவற்றிலேயே அடங்கிவிட்டது. என்றாலும் அன்று ஒரு நக்கீரன், இன்று நக்கீரர் திருக்கூட்டம் வளர்ந்து விட்டது. அதில் யானும் ஒருவனல்லவோ?

வரலாற்றை எண்ணிப் பார்க்கும் போது இதுவரையில் சமய அடிப்படையிலேயே பூசல்கள் எழுந்துள்ளன என்றும், மொழி அடிப்படையில் பூசல்கள் எழவில்லை என்றும் தெரிகிறது. மாற்றுச் சமயத்தவர்களும் இந்த நூற்றாண்டுக்கு முன் நம் தமிழ்மொழியை எவ்வாறு போற்றினர் வளர்த்தனர் என்பதை நாம் மறக்கவியலாது. சமணர்களாலும், பௌத்தர்களாலும் தமிழ் வளர்ந்தது. ஜி. யு. போப் கிருத்துவர். உமறுப் புலவர் இசுலாமியர். பாரதி, உ. வே. சா. போன்றவர்கள் பிராமணர்கள் அவர்கள் தமிழைப் போற்றிய நிலை இருந்தது. எனவே சமயம் மொழிக்குத் தடையாகவோ, மொழித்துவேசம் உள்ளதாகவோ இருந்ததில்லை என்று எண்ணலாம். தம் நெறியைப் பரப்புவதற்காக ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு வருபவர்கள் அந்தந்த பிரதேச மொழியிலேயே அப்பணியை மேற்கொள்வார்கள். விவேகானந்தர் சிகாகோவில் ஆங்கிலத்தில் பேசித் தம் வேதாந்தக் கொள்கையைப் பரப்பியதையும், அருளாளர் குமரகுருபர அடிகளார் காசியில் இந்துஸ்தானி மொழி கைவரப்பெற்று அம்மொழியில் பேசித் தமிழ்ச் சைவத்தை விரிவுரை செய்ததையும் இவை போன்றவற்றையும் இக்கருத்துக்குச் சான்றுகளாகக் கொள்ளலாம். சமணர்கள் தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் படைத்தனர். தம் கொள்கைகளை அவற்றினூடே இயலும் வகையில் பதித்தனர். பௌத்தர்களும் அவ்வாறே செய்தனர். ஒருமொழி வழங்கும் நாட்டினர் தொழில் காரணமாக வேற்று மொழி வழங்கும் நாட்டிற்குச் சென்றால் சென்ற நாட்டு மொழியைத்தான் கற்றுக்கொண்டார்கள். இன்று உலகெங்கும் சென்ற தமிழர்கள் பலரும் அந்நாட்டு மொழி கற்றுத் தொழில் செய்கின்றனர். அவர்கள் பிறப்பால் தமிழராயினும் ஓரிரு தலைமுறையில் தமிழையே மறந்து

அந்நாட்டு மொழியிலேயே பேசியும் வருகிறார்கள். இது உண்மைச் செய்தி. சைவ சமயம் தழைத்த காலத்தில் மன்னர்களால் தருவிக்கப்பெற்ற பிராமணர்கள் வேதம் ஓதுதலைத் தொழிலாகக் கொண்டவர்கள் ஆகையினால் அவர்கள் வந்த பிரதேச மொழியில் (தமிழில்) படைப்புக்கள் செய்யவேண்டிய தேவை எழவில்லை. வந்தவர்கள் தமிழ்மொழி பேசக் கற்றுக்கொண்டனர். ஆனால் இந்நிலத்தில் இருந்த எழுத்து வடிவமாகிய கிரந்தம் அவர்களால் பின்பற்ற இயலாதுபோனது. வந்த அவர்களும் பல்வேறு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்க ளாகையால் ஒரு பொது எடுத்துவடிவாக **நாகரி** எழுத்துக்களைக் கொண்டு வேதாகமங்களை ஒலிபெயர்ப்புச் செய்துகொண்டனர். எனவே இக் குடியேற்றங்கள் மொழிப்பூசல், சமயப்பூசல்களைத் தோற்றுவிக்கவில்லை.

இந்த நூற்றாண்டில்தான் சமயமே அன்றி, மொழி அடிப்படையிலும் பூசல் எழுகின்றது. அதிலும் குறிப்பாக நாடு சுதந்திரம் அடைந்த பின் அது அதிகமாகி உச்சக்கட்டத்தில் உள்ளது. அதன் காரணமாகவே தேசிய உணர்வு கெட்டு வடநாடு, தென்னாடு, இந்தியர், பாக்கிஸ்தானியர், தமிழர், சிங்களர் என்றெல்லாம் மக்கள் அல்லல்படுகிறார்கள்.

ஒரு மொழி பரவ வளரவேண்டுமானால் அம்மொழி யாளர் செய்யவேண்டியது என்ன என்பதை அறிஞர் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன். அது இருவேறு கொள்கையுடையார்க்கும் பொருந்தும். விரிப்பின் நோக்கம் திசைதிரும்பிவிடும். தமிழறிஞர்கள் பாரதியின் வாக்கைச் சிந்திக்கவேண்டும். எதிர்ப்பது வளர்ச்சி குன்றி, எதிர்க்கப்படுவது வளர்வது எல்லாத்துறையினரும் உணரத்தக்கது.

இன்று திருக்கோயில்களில் **வடமொழியா? தமிழ்மொழியா?** என்ற மொழிப்பிரச்சனை எழுந்து உச்சக்கட்டத்தில் உள்ளது.

இன்று நம்மால் வடமொழி என்று குறிப்பிடப்படும் மொழி யாருக்கும் தாய்மொழி அல்ல. அது யாரும் பேசும் மொழியும் அல்ல.

அம்மொழி யாரும் தனித்து உரிமைகொண்டாடத்தக்க மொழியும் அல்ல. யாரும் அது என்னுடைய தாய்மொழி என்று குறித்ததும் இல்லை. அது பிராமணர்களின் தாய்மொழியும் அல்ல. ஆதி சங்கரர் முதல் இன்று உள்ள சங்கராசாரியார்கள் வரை யாருக்கும் பேசும் தாய்மொழியாக வடமொழி இருக்கவில்லை. இவ்வாறிருக்கக் கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? என்று பட்டிமன்றம் நடத்தினால் என்ன நிகழுமோ அதுபோலவே இன்று வடமொழியும் பட்டிமன்றப் பொருளாகிவிட்ட காரணத்தால்தான் மக்கள் உண்மை உணரவியலாநிலை தோன்றிவிட்டது.

தமிழர்கள் வடமொழி எமக்குத் தாய்மொழி அல்ல என்று சொல்வது தவறல்ல. யாருக்கும் தாய்மொழி அல்லாத ஒரு பொது மொழியை (நம் முன்னோர்கள் வழிபாட்டுக்கு என்று வகுத்த மொழியை– நெறியை) யாருக்கோ உரிமைச்சாசனம் எழுதிக்கொடுத்துவிட்டோம். அதன் அடிப்படையிலேயே சர்ச்சை எழுந்துள்ளது.

வழிபாட்டு நெறியினர் மொழியினைச் சிந்தியார். ஒன்றியிருந்து நினைத்தல், தன்னை மறத்தல், இவர்தேவர், அவர்தேவர் என்று இரண்டாட்டாதொழிதல் என்பனவே வழிபாட்டு நெறியின் அடிப்படை. அவர்கள் கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி வீடும் வேண்டா விறலினர்.

மொழியுணர்வு மட்டும் உடையோர் வழிபாட்டு நெறிமுறை, மரபுபற்றிச் சிந்தியார் எதையும் ஏற்கவும் மாட்டார்கள் மொழி உணர்வு, வழிபாட்டு உணர்வு இரண்டும் உடையோர் கேட்பது, படிப்பது இரண்டாலும் குழப்பிச் செய்வதறியாது திகைத்து அல்லல்படுகிறார்கள்.

வடமொழிக்கு வாய் இல்லை, தமிழுக்கு முகம் இல்லை என்று ஒரு பழமொழி உண்டு. அதன் பொருள், வடமொழியில் வாய் என்ற சொல் இல்லை, தமிழ் மொழியில் முகம் என்ற சொல் இல்லை என்பதே ஆயினும் அதனுள் ஒரு தத்துவம் அடங்கியுள்ளது. அது வாயின்றி முகமிருந்து பயனில்லை: முகம் இன்றி வாய் இருக்க முடியாது என்பது போல இரு மொழியும் சைவசமயத்தைப் பொறுத்தவரை இன்றியமையாதது என்பதைக் குறித்ததாகும்.

ஆதிமனிதன் வழிபாட்டு நெறி வேறாக இருந்திருப்பினும் ஆகம வழிபாட்டு நெறி தோன்றி ஆயிரமாயிரம் ஆண்டுளுக்கு மேலாகிவிட்டது. தொல்காப்பியம், சங்க இலக்கியம், சைவத்திருமுறைகள், சாத்திரங்கள், புராணங்கள் போன்றவற்றில் வேதாகம வழிபாடு பிராமணர் பற்றிய செய்திகள் பல உள்ளன. ஆகம நெறி என்பது வேதம் பரப்பப் புலவர்களால் அழைக்கப்பட்ட பிராமணர்கள் வருவதற்கு முன்னரே தமிழுலகத்தில் தோன்றிவிட்டது என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

அரசர்களால் வடபுலத்தில் இருந்து அந்தணர்கள் அழைக்கப்பட்டது பூசைக்காக அல்ல. வேதம் ஓதுவதற்காகவே என்பதுதான் நமது வரலாற்று ஆதாரங்கள். அப்படி வந்த பிராமணர்களில் தெலுங்கர், கன்னடர் போன்ற பல மொழியினரும் இருந்தனர்.

இன்றும் பிராமணர்களின் தாய்மொழி அதுவதுவாகவே உள்ளது.

தில்லைக் கோவிலில் பூசிப்பவர்கள் தீட்சதர்கள். திருப்பெருந்துறையில் சுவாமி, அம்பாள் மூலஸ்தானம், திருவானைக்காவில் அகிலாண்டேஸ்வரி, காஞ்சியில்

காமாட்சி ஆகியகோயில்களில் மட்டுமே பிராமணர்கள் பூசிக்கின்றனர். இவை தவிர எமக்குத் தெரிந்தவரை தமிழ்நாட்டில் ஆகம பூசை செய்யப்பெறும் திருக் கோயில்கள் அனைத்திலும் பூசை செய்துவருபவர்கள் ஆதி சைவர்களே!

ஆதிசைவர்கள்: குருக்கள், முப்போதும் திருமேனி தீண்டுவார், அர்ச்சகர், பட்டர்கள், சிவபிராமணர் என்றெல்லாம் சொல்லப்பெறும் அவர்கள் அனைவரும் தமிழர்களே. அவர்கள் தாய்மொழி பேசும் மொழி தமிழன்றி வேறு இல்லை. இவ்வாறு இருப்பினும் இன்று நமது அணுகுமுறைக் கோளாறால் பட்டிமன்றத்தில் நிகழ்வதுபோல் நிகழ்வுகள் ஏற்பட்டு அவர்களில் சிலர் தங்களைத் தமிழர்கள் அல்லர் என்றும், தங்கள் தாய்மொழி தமிழ் அல்ல என்றும் சொல்லும்படியான சூழலை உண்டாக்கி, வடமொழி யைப் பிறருக்கு உரிமைச்சாசனம் செய்துகொடுத்தது போல் தமிழர்களாகிய குருக்களையும் பிராமணர் என்று உரிமைச் சாசனம் செய்யவும் நாம் தயாராகிவருகிறோம். தவறு தொடரக்கூடாது. வளரவும் கூடாது. தொடருவதும், வளருவதும் யாருக்கும் நன்மை பயக்காது.

வழிபாட்டின் மரபில் புதுமை புகுத்த விரும்பினால் அல்லது மாற்றம் செய்ய விரும்பினால் அந்நெறியைப் புதிதாகக் கோயில் அமைத்துப் புகுத்தலாம். நமது நாட்டில் ஐயப்ப வழிபாடு எவ்வளவு பெருகியுள்ளது? மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாடு எவ்வளவு பெருகியுள்ளது? அதில் யார் தலையிட முடியும்? தமிழகத்தில் இன்று வழிபாடு இன்றி எத்தனையோ கோயில்கள் உள்ளனவே. அங்கெல்லாம் நாம் விரும்பும் புதுமையைப் புகுத்திக் காட்டலாமே.

எல்லாவற்றுக்கும் மோலாகச் சைவத் திருமுறைகளைப் போற்றிவரும் நம்மவர்களே திருமுறைகளில் இல்லாத, தங்கள் கொள்கைகளைத் திருமுறைகளில் புகுத்திப் பேசுவதும், எழுதுவதும் கண்டு நெஞ்சு பொறுக்குதில்லை. அதன் அடிப்படையில் எழுந்ததே கீழே காணும் விளக்கங்கள்.

சுந்தரர் வரலாற்றில் அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும் வாயார் என்பதில் அர்ச்சனை பாட்டே ஆகும் என்று தேற்றேகாரம் கொடுத்துச் சொன்னதைச் சொல்லிக்காட்டி அர்ச்சனை என்பது போற்றி சொல்வது (தமிழ்ப்பாட்டல்ல) என்ற கருத்தில் எவ்வாறு கூசாமல் சொல்லமுடிகிறது?

பெரியபுராணத்தில் கணக்கற்ற ஆகமங்களை அருளிய இறைவன் தாம் விரும்பும் உண்மையாவது பூசை என்று இறைவிக்குச் சொல்ல- இறைவி இறைவனைப் பூசை செய்ய எண்ண- உணர்ந்த இறைவன் இறைவியை அடுத்தென்கொல் நின்பால் என வினவ இறைவி. நீ சொன்ன ஆகம விதிப்படி உன்னைப் பூசிக்க எனக்கு ஆசை மிகுகிறது என்று சொன்னதாக உள்ள பகுதியில்.

**எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம்**
**விரும்பும்**
**உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள**
**அண்ண லார்தமை அரச்சனை புரியஆ**
**தரித்தாள்**
**பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக்**
**கொழுந்து**

**நங்கை உள்நிறை காதலை நோக்கி நாய**
**கன்திரு உள்ளத்து மகிழ்ந்தே,**
**அங்கண் எய்திய முறுவலுந் தோன்ற**
**அடுத்த தென் கொல்நின் பால்**
என வினவ,
**இங்கு நாதநீ மொழிந்தஆ கமத்தின்**
**இயல்பி னால்உனைஅர்ச்ச னைபுரியப்**
**பொங்கு கின்றதென் ஆசைஎன்**
**நிறைஞ்சிப்போக**
**மார்த்தபூண் முலையினாள் போற்ற**
எனவரும் பெரியபுராணப் பாடல்களையும் நோக்கினால் பெரியபுராணத்தை ஆதாரம் காட்டும் எவரும், அர்ச்சனை என்பது வெறும் போற்றி என்றோ, ஆகம நெறிக்கு வேறானதொரு பூசையை இறைவன் விரும்பினான், விரும்புவான் என்றோ எவ்வாறு சொல்ல முடியும்? தண்டமிழ்ச் சொற்களின் ஆற்றல் வடபுலச் சொற்களின் ஆற்றலைவிட மிக்கது எனக் கூறும் பரஞ்சோதியார் தாம் இயற்றிய திருவிளையாடற்புராணம் வலைவீசிய படலத்துள் இறைவன் இறைவிக்கு வேதத்தின் பொருள் உபதேசித்தபோது இறைவி சற்றுக் கவனக்குறைவுடன் கேட்டமைக்காக வலைச்சியாக பிறக்க எனச் சாப மிட்டதையும் சொல்லுவார். வேதம் கேட்பதில் கவனக்குறைவாக இருந்ததற்கே இறைவிக்குச் சாபமெனில்? இறைவன் வேதாகமங்களை எவ்வளவு விரும்புகிறான் என்பதற்கு இவைசான்றாகும்.

அசைவில் செழும் தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல என்ற பொரியபுராணப் பாடல் பகுதிக்கு வடமொழி வழிபாட்டைக் குறித்ததுபோல் பொருள்கொள்ளும்படி பேசிவருகிறோமே! எழுதிவருகிறோமே! அது சரியா? அதுதான் அதற்குப் பொருளா? அவ்வாறு சொல்பவர்கள், சேக்கிழார் பொருமான் திருஞானசம்பந்தர் சீர்காழிக் குளக்கரையில் அழுதது வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலிய என்றுதானே அருளியுள்ளார். அமண் முதலாம் பரசமயப் பவம் பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட என்பதுதானே சேக்கிழார் வாக்கு என்பதனையும் சிந்திக்க வேண்டும்.

**வேத வேள்வியை நிந்தனை செய்துழல்**
**ஆத மில்லி அமணொடு தேரரை**
**வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே**
**வேதமொழி சொல்லி மறையாளர்**
**இறைவன்தன்**
**பாதம் அவையேத்த நிகழ்கின்ற பழுவூர்**
என்பன திருஞானசம்பந்தரின்

திருவாக்குகளாகும்.
**வடமொழியும் தென்தமிழும் மறைகள்**
**நான்கும் ஆயினான்காண்**
**ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்**
என்பன நாவரசரின் திருவாக்குகள்.
**பொய்யாத வாய்மையால் பொடிபூசிப்**
**போற்றிசைத்துப்**
**பூசைசெய்து கையினால் எரிஓம்பி**
**மறைவளர்க்கும் அந்தணர்தம்**
**கருப்பறியலூர்**
**முட்டாமே நாள் தோறும் நீர்மூழ்கிப்**
**பூப்பறித்து மூன்றுபோதும்**
**கட்டார்ந்த இண்டை கொண்டு**
**அடிசேர்த்தும்**
**அந்தணர்தம் கரப்பறியலூர்**
என்பன சுந்தரர் வாக்குகளாகும்
**வேதமோ டாகமம் மெய்யாம்**
**இறைவன்நூல்**
**ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுன்னுக**
**நாதன் உரையவை நாடி லிரண்டந்தம்**
**பேதமதென்பர் பெரியோர்க் கபேதமே**
என்றும்
**ஆரியமும் தமிழும் உடனே**
**காரிகையார்க்குக் கருணைசெய்தானே**
என்றும்
**தமிழ்ச் சொல் வடசொல் எனுமிவ்**
**விரண்டும்**
**உணர்த்தும் அவனை உணரலும் ஆமே,**
என்றும் திருமந்திரம் கூறுகிறது.
**கும்பன் குதத்தில் தமிழ்தோன்றிற் றென்னக்**
**குளறுகின்ற**
**வம்பரும், கொன்றன்றி வாழா மிலேச்சர்தம்**
**வாய்உமிழும்**
**தம்பல மேஷக்கும் ஆரிய மென்னும்**
**சழக்கர்களும்**
**வெம்பகை யால்இகழ் சண்டாளர்**
**தாமென்கை மெய்ம்மொழியே**
என்ற வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய தமிழலங்காரமும், மொழி வெறுப்பைக் களைக என்றது. அன்றுமுதல் (திருமூலர்) இன்றுவரை (வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்) நமது அருளாளர்கள் யாரும் வடமொழியைப் புறக்கணித்ததில்லை. சைவம், சைவத்திருமுறைகள், மொழித்துவேசம் சாதித்துவேசம் கொண்டதில்லை. எவரேனும் தாமாக என்ற அப்பர்பெருமான் வாக்கு அதன் அடிப்படையிலேயே எழுந்தது. அதை எடுத்துக்கொண்டு சாதித்துவேசம் செய்யலாமா? இவையெல்லாம் நம் கையாலேயே நம் கண்ணில் குத்திக் கொள்வதற்கு ஒப்பன்றோ!
**வேதியர் தம்மை வெகுளேன்**
**வெகுண்டவர்க்கும் துணைபோகேன்**
என்ற சுந்தரர் வாக்கையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கருத்தில் நின்ற ஒன்றிரண்டு உதாரணங்களே கூறப்பெற்றன. நமது இலக்கிய, இலக்கணங்களில், சாத்திர தோத்திரங்களில், புராணங்களில் ஆயிரம் ஆதாரம் காட்டலாம்.

நாம் அறிந்தவரை எந்தச் சிவாசாரியாரும் திருமுறையை வெறுக்கவில்லை. தமிழை வெறுக்கவில்லை: போற்றவே செய்கிறார்கள். அதன் காரணமாகவே சிவாசாரியார்களில் சிலர் தேவாரம் பயின்று ஓதிவருகின்றார்கள் என்பதும், சிவாசாரியார்களே நடத்தும் வேதாகம பாடசாலைகளில் இன்று திருமுறை துணைப்பாடமாக கற்பிக்கப்படுகிறது என்பதும் அறிவோம். அத்தகையோரை ஆதரிப்பதா? வெறுப்பதா? அணுகுமுறையால் வந்த நிலைதான் இன்றைய நிலைக்குக் காரணம் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

சித்தாந்த சைவர்கள், சந்தானாசாரியர், சமயாசாரியர் மரபினர், பன்னிரு திருமுறையை ஏற்போர் எவரும் வடமொழியை ஒதுக்கவியலாது. சைவத்திருமுறைகளை ஏற்கும் எவரும் வடமொழி தமிழ்மொழியாகிய இரு மொழிகளில் எதையும் வெறுக்க, ஒதுக்க இயலாது.

(இன்னும் வரும்.........)

## சிந்தனைச் செல்வங்கள்.

1. மனம் பரிசுத்தமாக இருந்தால் எல்லாவற்றையும் பரிசுத்தமாகவே காணலாம்.

2. மனம் அமைதி பெறவேண்டுமானால் பிறரிடம் குற்றம் காணாதே. அதற்குப் பதிலாக உன் குற்றங்களை எண்ணிப்பார்.

3. சுடுவார்த்தைகளால் பிறரைத் துன்புறுத்தாதே. நாவை அடக்கும் சக்தி இல்லாமற் போனால் மன அமைதி இராது.

4. மனதில் குற்றம் இருப்பதாலேயே துன்பப் படுகின்றோம்.

5. இறை நாமத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதால் மனம் அமைதி, தூய்மை அடைகிறது.

6. உலகத்தில் துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆசை.

7. 'நான்' என்னும் அகங்காரம் அற்றுப் போகும் வரை ஆசை இருக்கும்.

8. மனதில் அகங்காரம், ஆசை இருக்கும் வரை அன்பு, பக்தி தோன்றாது.

9. ஆசை வளர்வதும், ஆணவம் பெருகுவதும் மனிதனது அழிவிற்கே அறிகுறி.

10. மரணம் நிட்சயம் என்று தெரிந்தும் மனிதன் ஆசையாலும், ஆணவத்தாலும் அழிந்து போகிறான்.

11. மனமே எல்லாம். மனம் தூய்மையானால் அன்றி ஒரு நன்மையும் விளையாது.

# GNANAM
## T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள்
மலிவு விலையில் வேண்டுமா?

**நிறைவான சேவை!**
**விரைவான சேவை!**
**தெளிவான சேவை!**

இவற்றுக்காக எங்கும் நீங்கள் போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம் தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள் அணுகவேண்டிய முகவரி**

*Gnanam*
**telecom centers**

**180 High Street North**
**East ham London**
**Tel: (+0044) 0181 47 08 84 4**
**Fax: (+0044) 0181 47 08 77 7**

| | |
|---|---|
| **Australia** | **5p** |
| **Canada** | **5p** |
| **France** | **5p** |
| **Germany** | **5p** |
| **India** | **25p** |
| **Italy** | **7p** |
| **Malaysia** | **14p** |
| **Pakistan** | **29p** |
| **Singapore** | **15p** |
| **Sri lanka** | **27p** |
| **U.K** | **3p** |
| **U.K mobile** | **11p** |

**ஞானம் நிறைந்தவர்களே ஞானத்தை நாடுங்கள்**

# திருமூலரும் சைவசித்தாந்தமும்

-சேக்கிழாரடிப்பொடி இராமச்சந்திரன்-

**தாதார் கொன்றை தயங்கு முடியவர் முயங்கு மடவாளைப்**
**போதார் பாகமாக வைத்த புனிதர் பனிமலக்கும்**
**மூதாருலகின் முனிவருடனாய் அறநான்கு அருள் செய்த**
**காதார் குழையர் வேதத்தினர் கயிலை மலையாரே.**

**முன்னியா நின்ற முதல்வா போற்றி**
**மூவாத மேனியுடையாய் போற்றி**
**என்னியா யெந்தை பிரானே போற்றி**
**மன்னிய மங்கை மணாளா போற்றி**
**மந்திரமும் தந்திரமும் ஆனாய் போற்றி**
**கயிலை மலையானே போற்றி போற்றி**

**மந்திரம் ஒன்றறியேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்**
**சுந்தர வேடங்களால் துரிசே செயும் தொண்டன் எனை**
**அந்தர மால் விசும்பில் அழகானை அருள் புரிந்த**
**துந் தரமோ? நெஞ்சமே நொடித்தான் மலை உத்தமனே**

**அங்கி மிகாமை வைத்தான் உடல் வைத்தான்**
**எங்கு மிகாமை வைத்தான் உலகு ஏழையும்**
**தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்**
**பொங்கி மிகாமை வைத்தான் பொருள் தானுமே**

தலைவர் உள்ளிட்ட அனைத்துச் சான்றோருக்கும்
தாய்மார்க்கும் எளியேனின் பணிவான வணக்கங்கள்
சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி
எம்மான் மரகதக் கொடியோடும் விளங்கு வெள்ளி வெற்பு
கற்றவர்கள் சொற்றொகையின் முற்று மொளி
பெற்ற கயிலாய மலையே
அங்கு தங்கிய
விச்சாதரர் இயக்கர் கின்னரர் கிம்புடுடர்
அச் சாரணர் அரக்கரோடு அசுரர் - எச்சாரும்
சல்லரி தாளம் தகுணிதம் தத்தளகம்
கல்லலகு கல்லவடம் மொந்தை- நல்லியத்
தட்டழி சங்கம் சலஞ்சலம் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம்- கொட்டும்
குடமுழவம் கொக்கரை வீணை குழல் யாழ்
இடமாம் தடாரி படகம்- இடவிய

மத்தளம் துந்துபி வாய்ந்த முருகு இவற்றால் எத்திசை
தோறும் எழுந்து இயம்ப- ஒத்துடனே
மங்கலம் பாடுவார் வந்து இறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்கும் கிலு கிலுப்பத்- தங்கிய
ஆறாம் இருதுவும் யோகும் இருந்த வமும்
மாறாத முத்திரையும் மந்திரமும்- ஈறார்ந்த
காலங்கள் மூன்றும் கணமும் குணங்களும்
வாலகிலியரும் வந்தீண்டி
போற்றி சொல உலா வருவான்

இன்ன தன்மையன் என்றறியாச் சிவன் தன்னையே உணர்ந்து ஆர்வம் தழைக்கும் அதத்தியரை அப் பார்ப்பதி காந்தன் மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட அங்குப் போக்கினான். வந்தவரும் நாகமது நாகமுற நாகமென நின்று விந்த வெற்பின் தருக்கடக்கி, மந்தார முந்து மகரந்த மணவாடை மணந்த செந்தமிழ்ப் பொதியில் வெற்பில் சிவயோகச் செந்நெறி ஒளி பரப்பி வருவாராயினர்.

இங்கு அரை நிமிஷ நேரமட்டில் நின்று, ஓர் செய்தி யினை ஆய்வோம். கழகமோடு அமர்ந்து செந்தமிழ் ஆய்ந்த கண்ணுதற் கடவுள், யாது காரணம் பற்றியோ, முகற்கண் வேத ஆகமங்களை எல்லாம் வடமொழியில் வழங்கியருளினான் பின்னால், அவை அனைத்தையும் என்றுமுள தென்றமிழில் நின்று நிலவ பேர் அருளாளர்களை அவதரிக்கச் செய்தான்.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட வாகீசப் பெருமானும், எம் மிறையை, ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய் என்றே நமக்கு இனங்காட்டுகின்றார்.

**அவிழ்க்கின்ற வாறும் அது கிட்டுமாறும்**
**சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்**
**தமிழ்ச் சொல் வட சொல் எனும் இவ்விரண்டும்**
**உணர்த்தும் அவனை உணரலும் ஆமே**

என்று திருமூலரும் அருளியுள்ளார்.

இந்தச் செய்தியை நாம் மறக்கத்தலைப்பட்டாலும், இங்கு வந்து நம் மொழி பயின்று, நம் சிறப்பை மறந்துறங்கும் நம்மைத் தட்டி எழுப்பி இதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள் என்று மேனாட்டு அறிஞர் நமக்குக் கூறத்தயங்கவில்லை. குறிப்பாக நம்முடைய தோத்திரங் களிலும், சாத்திரங்களிலும் பல்கிக் கிடக்கும் வடமொழிச் சொற்கள் என்ன சாற்றுகின்றன என்று பார்ப்போம்.

அந்தம் என்றும் ஆதி என்றும். தனு என்றும், ஆன்மா என்றும், அந்தக்கரணம் என்றும், சகஜமலம் என்றும், காந்தம் என்றும், பசாசம் என்றும், சத்தென்றும், அசத்தொன்றும், சூனியம் என்றும் அந்நியம் என்றும் அபரிமிதமாக வடமொழிச் சொற்களை நம் மெய்கண்டத் தெய்வம் மாரிபோல் வாரி வழங்கியருளியுள்ளார்.

இப்படி ஒரு நெறி- ஒரு வழக்காறு-, இத்தமிழ் மண்ணில் வேரூன்றி நிற்பது கண்டுதான், Gilbert Stater

என்ற மேனாட்டு அறிஞர், The Dravidians were Aryanised in language, while the Aryans were Dravidiannised in culture என்று ஆப்படித்துப் போட்ட புதிராக இருந்ததற்கு விடை கண்டு கூறினார்.

வடமொழியை தேவபாஷை என்கிறார்கள் அதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால் இந்தக் கூற்றில் உண்மையின் ஓர் பாதிதான் உள்ளது. வடமொழி தேவபாஷை என்றால், தமிழ் மகாதேவ பாஷை. இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

தேவபாஷையும், மகாதேவபாஷையும், தமிழரின் சொத்து. ஒன்றுக்கொன்று உறவு உடையது. அந்நியம் இன் மையின் இரண்டுமே அரன் கழல் செல்ல அடிகோலும். யூதர்கள் மதத்தில் ஒரு கோட்பாடு உண்டு. பழைய ஏற்பாட்டைப் படிப் போர்க்கு இது துல்லியமாம். கிறித்துவை மறுக்கும் யூதர்கள் கடவுள் கிறித்துவின் தந்தையாராகிய Jehovah, யூதர்களை ஒரு தெரிவு செய்யப்பட்ட இனம்– a chosen race – என்றே படைத்தார். அதேபோல் பசுபதியால் தேர்ந்து படைக்கப்பட்ட இனம் தமிழர் இனம். எந்நாட்ட வர்க்கும் இறைவனான அவனை தென்னாடுடைய சிவனே போற்றி என்றுதானே வாழ்த்துகின்றோம்! இந்தத் தென்னாடு– தமிழ்கூறும் நல்லுலகு– சாத்திரங்களுக்குத் தாயகம். இதைத்தான் திருமூலர் பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம் என்கின்றார். இதையே பல்விதமாயின சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ்நாடு என்கின்றார் மகாகவி பாரதியார். தங்கி மிகாமை வைத் தான் தமிழ்ச் சாத்திரம் என்ற மூலமந்திரம் மகாகவியும் உச்சரிக் கின்றார். மேலும் மகாகவி, சாத்திரம் கண்டீர் சாதியின் உயிர்த்தலம் என்றும் பறை கொட்டுகிறார்.

அண்டமுதலான் அறஞ் சொன்ன வாறே சமைந்தது சாத்திரம்
பரனாய் பராபரம் காட்டி உலகில்
தரனாய்ச் சிவதன்மம் தானே சொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கி நின்றானே.

இங்ஙனம் திருமூலர் கூறியதை "The ten lamps of fire burning before the throne" are regarded by such Agamas as the Kamika, the Karma and the rest, as indistinguishable from the Lord, may, as ( the lord) Himself" என்று மேனாட்டு கிறித்துவ அன்பர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நன்னோக் கத்தோடு அவர்கள் பரிபாஷையை பயன்படுத்திக் கூறுகிறார் வேதார ணியம் Dr.V.V. ரமணசாஸ்திரிகள்.

**(இன்னும் வரும்......)**




# MARKANDAN & CO

## SOLICITORS

***Empowered to Administer Oaths***

Legal Aid

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters from appeals to European court of human rights * All types of conveyancing* Litigation * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * All D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

# ஆறுமுகநாவலர்

அந்நியராட்சியின் அதிகாரப் போக்காலும்
சிந்தை மயக்குஞ்சில சலுகை உதவியாலும்
மெய்ச் சைவசமயத்தைக் கைவிட்டுச் சிலர்
உய்யவழிதேடி மதம் மாறுங் காலத்தில்
திருவருளால் அவதரித்துத் தமிழோடு ஆங்கிலமும்
பெருமளவு பயின்று பள்ளிகளும் பலநிறுவி
சுகாதாரத்துடனான ஆசாரநெறிகள் பல
சாகாவரம் பெற்ற சைவத்திற் துலங்குகின்றதென்றும்
இலக்கிய இலக்கணப் பத்தியிலக்கியங்கள்
உலகெங்குமில்லா அளவுக்குத் தமிழில்தான்
உண்டென்றுங்காட்டி உரைபல எழுதி
பண்டைய நூல்களைத் தேடிப் பதிப்பித்து
ஈழத்திலன்றித்தன் இனம்வாழும் இடமெங்கும்
வாழவைத்துத் தமிழை வையத்திற் புகழேற்றி
பொதுப்பணிகள் புரிந்து பிரசங்கம் பலவாற்றி
புதுப்புது நூல்கள் பாலர்க்காய் எழுதி
சீடர்பலரோடு செந்தமிழை ஆய்ந்து
தேடற் கரியவற்றைத் தேடி நமக்களித்து
ஒழுக்கத்தின் சீலராய் உத்தமரினுத்தராய்
வழுவற்ற மரபோடு வண்தமிழை வளர்த்து
தன்னிரு கண்களாய்ச் சைவமும் தமிழுமெண்ணி
இன்னரும் உயிராய் இனத்தையும் மதித்துப்பின்
அரசியல் கலந்த மேடைசில ஏறிச்
சிரத்தையுடன் சகலதுறையிலும் ஈடுபட்ட
சொல்லற்கரிய செம்மல் பல்துறையில் வித்தகர்
வல்லவர்க்கும் வல்ல ஆறுமுகநாவலரைப்
போற்றினா மாண்டாண்டும் சந்ததிக்குநினைவூட்டி
ஏற்றி யவர்பெருமை இயம்புதல் எம்கடனே!

**-கவிஞர் செ. நாகேந்திரன்-**





# துளிர்க்கட்டும்

டாக்டர் சங்கரப்பிள்ளை ஜெயநாதன்

(கலசம் 25 ஆவது புத்தக வெளியீட்டின்போது நடைபெற்ற கவியரங்கக் கவிதை இது)

**கருமேகம் கண்டாடும்
கானமயில் போலக்
கலசத்தின் விழாவதனைக்
கண்டுகளித்திடவே
அலையாக வந்திருக்கும்
அனைவர்க்கும் என்
வணக்கம்!**

துளிர்க்கட்டும் எனும் பெயரில் சுவைத் தமிழிற்
சொல்லடுக்கி ஒளிகட்ட வேண்டுமென்று கலசத்தார்
சொல்லிவிட்டார்!
களைகட்டும் கவியரங்கில் சுவைசொட்டும் வார்த்தைக-
ளால் கவிகட்டக் கற்பனைக்காய்க் கட்டிலிலே
சாய்ந்திருந்தேன்.
புகுந்தகத்தின் வளம் பெருக்கி வாழ்வது தான்
முறையென்று
தகுந்தவர்கள் சொன்னபடி தனம் பெருக்கி
வாழ்கின்றோம்! -ஆனால்
எக்குறையும் இல்லை எந்தன் பிறந்தகத்தை
மறப்பதற்கு
அக்கறையோடு அதை நினைக்க அழுகைதான்
வருகிறது!
(கண்ணீர் தான் துளிர்க்கிறது)
(கற்பனை ஏன் வருகிறது?: சிந்தனை ஏன்
துளிர்க்கிறது?)
எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த என்
தமிழ் மண்ணில் - எங்கள்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து சிறந்த
தமிழ்ப் பரப்பில்- அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணங்களாய்த் தோன்றி மகிழ்ந்த
மணற் பரப்பில் சிந்தனையை உடைக்கின்ற சீரழிவு
நடக்கிறது
அல்லற் பட்டு ஆற்றாமல் அழும் ஓசை கேட்கிறது.
இந்த மன நிலையினிலே
கற்பனையும் வரவில்லை: சிந்தனைகள்
துளிர்க்கவில்லை!

தன்வினை தன்னைச் சுடும்:
ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்ற பட்டினத்தார்
வீடோன்றெரித்த கதையுண்டு படித்துண்டு- ஆனால்
இன்று பட்டினத்துப் பட்டாளம் வீடெல்லாம் எரிக்கிறது
(உடைக்கிறது)
வெடிகுண்டு துப்பாக்கி இடுகுண்டோடு ஏவுகணை
மடி கொண்டு பறந்தடிக்கும் வானிலங்கு
படைக்கலங்கள்
துடிதுடிக்க அடிபட்டு நடைப்பிணமாய் வெளிக்கிட்டு
வீடிழந்து நாடிழந்து நடுத் தெருவும் இல்லாமல்
காடே தான் கதியென்று கதிகலங்கி ஓடுகின்றார்!
பிறந்த இடம் தனைத் துறந்து துயரத்தோடோடுபவர்
உறவில்லை! உடையில்லை! உணவில்லை!உறுபிணியோடு
உயிரொன்றைக் கரை சேர்க்க ஓலமிட்டு ஓடுகின்றார்!
முருகா இன்றெமைக் காக்க வருவாயோ என்றலறி
உயிரொன்றைக் கரை சேர்க்க ஓலமிட்டு ஓடுகின்றார்!
பற்றற்ற துறவியர்கள் பயன் கருதாத் தொண்டருடன்
கற்றறிந்த பெரியவர்கள் பண்புடைய சொந்தங்கள்
நற்றவம் செய்தெமைப்புரந்த தாய்க் குலத்தார்
எல்லாரும்
அற்றநிலை அவலத்தோடு அந்தரித்து ஓடுகின்றார்!
வருந்தி இறப்பதற்கே ஈழத்திற் பிறந்தவர்கள்
படும் துயரம் எடுத்துரைக்க வார்த்தையில்லை-
நம்தமிழில்
இந்த நிலையினிலே,
கற்பனை ஏன் வருகிறது? சிந்தனை ஏன்
துளிர்க்கிறது?
அக்கறையோடதை நினைக்க அழுகைதான் வருகிறது.
(கண்ணீர் தான் துளிர்க்கிறது!)
நீந்தி வரும் இந்த நீங்காத நினைவுகளை ஏந்தி
வரும் சிந்தனைகள் எண்ணிக் கிடந்தேன்- நான்
பஞ்சணையில் சாய்ந்திருந்தேன் கற்பனைக்குக் காத்தி
ருந்தேன்!
களைகட்டும் கவியரங்கில் சுவைசொட்டும் வார்த்தைக-
ளால்
கவிகட்ட கற்பனைக்காய்க் கட்டிலிலே சாய்ந்திருந்தேன்.
வண்ண மகளொருத்தி வெட்கமொன்றும் இல்லாமல்
அண்மையிலே எந்தென்னை ஆரத் தழுவி நின்றாள்

தள்ளிப்போ என்றவளைக் கலைக்க மனமிலை
யெனினும்
அள்ளி அணைப்பதற்கும் மனநிலை சரியால் இருக்
கவில்லை!
இந்நிலையில் இன்னொருத்தி சதிராட்டம் ஆடிவந்தாள்
வானக் குயிலாகிக் கானம் இசைத்து வந்தாள்
கிட்டப் படுத்தெனக்குக் கிளுகிளுத்த கதை சொல்லித்
தொட்ட கதை எல்லாம் இனிச்சொல்ல சொல்ல
முடியாது!
(தொட்ட கதை எல்லாம் இனிச் சொன்னால் "ADULTS ONLY" (ஆபாசம், நிர்வாணம்) ஆகிவிடும்)
இருமங்கை ஒரு மஞ்சம் என்ன இது அநியாயம்
பருவத்தின் குழப்பமல்ல பண்பான மனிசன் என்று
விசனப்படுவதை நம் விழிகளிலே காண்கின்றேன்!
நித்திரைத் தேவியோடும் கனவெனும் குமரியோடும்
தூங்கி விட்டேன். கனவு கண்டேன், என்று
சொன்னேன்! அவளவுதான்!
கனவின் உறவினிலே பிறந்த கவி சொல்லிடுவேன்!
துளிர்கட்டிக் குளைகட்டிப் பூவின் குலைகள் கட்டித்
துளிர்க்கட்டும் என வசந்தம் பிறந்த கதை
கூறிடுவேன்!
பூமாமரத்திலொரு கானக் குயிலிருந்து
பூமாதைப் போற்றியொரு பூபாளம் பாடியது!
ஒளிகொண்ட எதிர்காலம் விழிகண்டு தெரியுதென்று
தெளிவான தேனிசையில் தெம்மாங்கு பாடியது!
(வசந்தம் பிறக்குதென்று வளமாகப் பாடியது!)
ஆனந்தம் கொண்டாடும் அந்தக் கரும் குயிலின்
கானாமிருதமதைக் கேட்டு வந்த புள்ளினங்கள்
போன திசை மறந்து மா மரத்தை வந்தணைய!
நானும் ஒரு கிளியாகிப் புள்ளினத்தோடமர்ந்திருந்தேன்
மானத் தமிழருறை ஈழத் தமிழகத்தில்
பரந்தன் எனும் நிலம் வளம் கொளிக்கும் பேரூரில்
மலர்ப் படுக்கையாயிருக்கும் வீடொன்றின் பெருவளவு!
முன்முற்றத் தம்பலவி தாங்கி நிற்கும் மாம்பழங்கள்
தங்கநிற மாங்கனியை அணில் கொந்தி விழையாடும்!
தத்தும் கிளி அவ்விருந்தில் பங்குபற்றி உறவாடும்!
தங்கைச்சி அதைப் பார்த்துச் சித்தம் களிப்பாடும்!
பின் புலத்தில் தோடை பலா எலுமிச்சைப் பழமரங்கள்
வாழைமரத் தோட்டம்: அதில் வளைந்தோடும்
வாய்க் கால்கள் அழகான இடை நிலத்தில் பந்தலிலே
பாவற்காய்
மிளகாயும் கத்தரியும் இலைதெரியாக் காய்க் குலைகள்
கத்தரி வெருளி கண்டு செம்மறி கலங்கியோடும்
(காய்களைக்)
கத்தரிக்கும் குருவிகளும் எழுந்து பறந்தோடும்!

அந்தரத்தில் அவையோடும் அலங்கோல நிலைகண்டு
சுந்தரியின் பசுக்கன்று தாயிடம் தாவியோடும்!
இன்பம் நிறைந்த இந்த இல்லத்தின் நடுவறையில்
அன்பினைக் கூறும் அன்னை அறநெறி காட்டும்
தந்தை
இன்னுயிர் அனைய நண்பர் உடன் பிறப்பாளர் இன்னும்
பண்பினால் இணைந்த பலபேர்கள் கூடி நின்றார்.
முல்லைப் பூமணக்கின்ற கொண்டைமலர் மாலையுடன்
கார்மேகக் கருங்கூந்தற் கன்னியரின் குலமொருபால்
வெள்ளைநிற வேட்டியுடன் சால்வைபுனை ஆடவர்கள்
கள்ளமில் சிந்தைகொண்ட பிள்ளைகள் கூட்டமோர்பால்
செல்விருந்தை ஓம்பி நின்று வருவிருந்தைக்
காத்திருந்து
நல்விருந்தை நல்குவதே நம் தமிழர் பண்பாடு
பக்கத்துக் கோவிலிலே பத்தாம் திருவிழாவாம்:
பக்தர்களின் கொண்டாட்டம்: ஊரெங்கும் விழாக்கோலம்!
மங்காத புகழுடைய தமிழர்களின் குலதெய்வம்
சிங்கார வடிவேலன் ஊர்ப் பவனி வருகின்றான்!
தங்கரதமேலேறித் தனது பெரும் படை சூழ
எங்களது குலம் காக்கச் செந்தூரன் வருகின்றான்
பஞ்சாபிகேசனது நாகஸ்வரம், மேளம்
பண்பாடும் மங்கையரின் பரதமுடன் தாளம்
கண்கொள்ளாத் திருக்கோலம் காட்டி வருகின்றான்

அவனருளால் அவ்வுலகம் ஆனந்தம் பெறுகிறது!
கானக் குயில் அவனை அருள் வேண்டிப் பாடியது!
மீண்டும் வசந்தம் வருமென்று பாடியது!
துளிர்த்துக் குளைகட்டிப் பூவின் குலைகள் கட்டி
களித்திருக்க மீண்டும் வசந்தம் வரவேண்டிக்
கானக் குயில் குகனை அருள் வேண்டிப் பாடியது!
பொங்கார்வத்தோடும் பெரும் பெருஞ்சமரில் விளையாடி
மங்காத போர்க்களத்தும் மாளாத தமிழர் படை!
எங்கள் தமிழ்ச்சாதி இன்னும் பல்லாயிரமாண்டு
திங்களைப் போல் வாழ்ந்து சூரியன் போல் ஒளிவீசி
தங்கி நிலைத்துத் தழைத்தோங்கி வளரட்டும்!
ஈழத்தமிழகத்தில் வளம் கொண்டு சிறக்கட்டும்!
அழகு கலை வளரட்டும்! அறிவு சிறந்தோங்கட்டும்
அச்சம் பறந்தோட ஆண்மை சிறக்கட்டும்
அன்பு துளிர்க்கட்டும் அறம் அதிலே மலரட்டும்
கல்வி சிறக்கட்டும் கலகம் அதில் மாளட்டும்
காதல் துளிர்த்ததிலே கனிவின்பம் மலரட்டும்
அன்பு நெறி வாழ்க! அறம் வாழ்க! மறம் வாழ்க!
சைவ நெறி வாழ்க! தமிழ் வாழ்க! தரணியெங்கும்!
தரணியெங்கும்! தமிழ் வாழ்க!

வணக்கம்

# போலிச் செயற்பாடு போகட்டும் இன்றோடு!

-வேலணையூர்ச் சிவா-

செந்தமிழின் சொல்லெடுத்துத்
தேன் ததும்பும் கவி படைக்கும்
என் அருமைக் கவிஞர்கள்- முன்
இயம்ப வந்தேன் கவிதையொன்று

போலிச் செயல்பாடு போகட்டும் இன்றோடு- ஆம்
போலிச் செயல்பாடு போகட்டும் இன்றோடு

புத்தியற்ற மானிடத்தின்
சத்தியற்ற போலிகளை- இத்
தரணி தனில் காணுகின்றோம்
எத்தனை யுகம் வந்த போதும் அவை
அழிந்திடா வரம் பெற்றது போல்
சத்தியத்தைக் கொல்வதற்கு
தன்மார்பு தட்டியெழும்
வித்தையினை யாம் அறிவோம்- அவை
வீழ்வதையும் கண்டிடுவோம்
புத்தியினைத் தீட்டா மாந்தர்
புகழோடு வாழ்ந்ததில்லை
சத்தியத்தின் நெறிகளிலே- நாம்
கற்றுக் கொண்ட உண்மையிது
நித்திய கருமங்களை
நிலை நிறுத்திச் செய்யும் போது
நிசம் அற்ற செயற்பாடு
நீங்கி விடும் நிச்சயமாய்
புற்றினைக் கறையான் கட்டிய பின்பு தானே
புகுந்தது கொடிய அரவம் அதனுள்ளே
சற்றேனும் வெட்கமில்லாப் பாம்பு
தன்னாட்சி கொண்ட போதும்
கூரிய வாள் முனைகள்- அதனைக்
கூறு போட்டுக் கொல்வதனைப்
பாரினிலே யாம் அறிவோம்- அதைப்
பாவமில்லை என்றும் சொல்வோம்.

வேலிக் கடியினிலே
வேண்டாத புல்லினைப் போல்
நேர்மைக்கு மாறாய் போய்
நினைவிழக்கும் சிந்தையைப் போல்
ஊருக்குள் உலவுகின்ற
ஊமத்தம் குருவி போல் இருக்கும்
போலிச் செயல்பாடு
போகட்டும் இன்றோடு

செய்யும் தொழிற்பாட்டைத்
தெய்வ மெனக் கொண்டோரை
வையகமும் வணங்கிடுமே
வாழ்த்துரைத்துப் போற்றிடுமே
பொய்யினைப் புடைசூழ் மாந்தர்
புவிதன்னில் வாழ்வதற்கு
எள்ளளவும் அருகதையில்லை- அவர்
என்றுமே ஏற்றம் கண்டதில்லை

தெய்வத்தின் சந்நிதிக்கு
நெய் வார்த்து அபிஷேகம்
செய்கின்ற வேளையிலே
பொய்யுரைத்த தாழம் பூவை
பூசையிலிருந்து ஒதுக்கியது போல்
போலிச் செயல்பாட்டைப்
போக்கிடுவோம் எந்நாளும்

**வணக்கம்**

## மனத்தின் பலமே வாழ்வின் பலம்

1. மனஉறுதியும் இனிய சொற்களுமே வாழ்வின் தீபங்கள்.
2. மன அமைதியில் மனிதனது துன்பங்கள் யாவும் மறையும்.
3. கட்டுப்பாடான வாழ்க்கையும், மன அமைதியும்தான் வாழ்வின் வழிகாட்டிகள்.
4. மனம்தான் எல்லாம். அது தனது சுயேச்சையை இழக்குமால் நீயும் உன் சுயேச்சையை இழப்பாய்
5. மனதை வென்றவன் எதற்கும் கலங்கான்.
6. மனதில் தெளிவு இருந்தால் மயக்கங்கள் மறையும். அர்த்தங்கள் யாவுமே தெளிவாகப் புலப்படும்.
7. மனம் குவியும் போது எதை எண்ணுகிறதோ அதன் பாவனையை விரைவில் எடுக்கிறது.
8. வாய்மையே மனஇருள் போக்கும் மாசற்ற விளக்கு.
9. போதும் என்ற மனநிறைவே எப்பொழுதும் பெருவாழ்வைத் தரும்.
10. வாய்மையும் அன்பும் மனதில் ஊற்றெடுத்தால் வாழ்க்கையில் ஒளி வீசும்.

-தொகுப்பு திருமதி க. கந்தசாமி.

# வேதாந்த சித்தாந்த அணு விஞ்ஞானம்

-தனபாக்கியம் குணபாலசிங்கம்-

நாம் காணும் அண்டத்தின் சடப் பொருள் யாவும் மிகச் சிறியதும், இறுதியில் பிரிக்க முடியாததுமான அலகுகளாலானவை என்பதனை நமது முன்னோர் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே வெளியிட்டிருந்தனர். இதனைப் பழந்தமிழ் இலக்கியமான புறநானூறு

**மண் திணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்புதைவரு வளியும்**
**வளிற் தலைஇய தீயும்**
**தீமுரணிய நீரும் என்றாங்கு**

ஐம் பெரும் பூதத்து இயற்கைபோல் (புறம் செய் 2) எனக் கூறும். இதற்குப் பழைய உரை நூலார் அணுச் செறிந்த நில னும், அந்நிலத்தின் ஓங்கிய ஆகாய மும், அவ்வாகாயத்தைக் தடவிவரும் காற்றும், அக்காற்றின்கண் தலைப் பட்ட தீயும், அத் தீயோடு மாறுபட்ட நீரும் என ஐவகைப்பட்ட பூதத்தினது தன்மைபோல எனப் பொருள் கண்டனர். இதுபோன்ற அணுக் கோட்பாடுகள் இந்திய தத்துவங்களில் பரவலாக இடம் பெற்று வந்துள்ளன. எனினும் சடப்பொருள்களின் அணு நிலையை முதன்முதலாக விஞ்ஞான ஆய்வுகளால் எடுத்துக்காட்டியவர் கி.பி. 1792ல் டால்ரன் (Dalton) என்பவரே. காலப்போக்கில் மைக்கல் பரடே (Michale Faraday) மின்னாற்றல் கூட அணு அமைப்பினையுடையது என்பத னைத் தெரிவித்தார். கி.பி. 1865ல் லொஷ்மிட் (Loschmidt) நூறு லட்சம் அணுக்களை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக அடுக்கினால் அவற்றை

1 மில்லி மீற்றர் நீளத்திற்குள்ளே அடக்கலாம் என அணுக்களின் பருமனை விளக்க முற்பட்டார். இவ் வாறு விஞ்ஞானிகளின் அணுவாய் வுகள், இருநூற்றாண்டு களாகியும் அணுவின் உண்மைய-ியல்புகளை இன்னும் முழுமையாக அறிந்து கொள்ளமுடியவில்லை.

ஆனாலும், இன்றுவரை விஞ் ஞானிகள் அவ்வண்டத்தின் சடப் பொருள்கள் யாவும் அடிப்படை மூலகங்களான ஹைட்ரஜன், காபன், நைட்ரஜன், ஒக்சிஜன் ஆகியவற்றின் சேர்க்கையாலான ஏறக்குறைய 105 மூலகங்களால் ஆனவையென்றும், இம் மூலகங்களும் மிகச் சிறிய அணுக்களாலானவை என்றும், இவ்வணுக்களின் கருவில் நேர்மின்னணுக்கள் (Protones) நடுநிலை மின்னணுக்கள் (Neutrons) புறத்தே எதிர் மின்னணுக்கள் (Electrons) இயங்கி நிற்கின்றன என்று மட்டுமே கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். இவ்வாறு அணுவின் அமைப்பு, இயல்பு, உருவம், இயக்கம் என்பன பற்றி ஆராய்ந்தும், இறுதியிற் சடப் பொருள்களின் உண்மைநிலை என்ன? என்ற வினாவிற்கு விஞ்ஞானிகள் ஊகங்களிலேயே தங்கியிருக்கின்றனர். அதனாற் பௌதிகத்தின் உண்மையியல்பைக் காண முடியாதிருப்பதோடு, ஒலி, ஒளி, மின்சாரம், காந்தம், மின் காந்தம் என்பவற்றின் இயல்பு, வியாபகம் பற்றியும் தெளிவில் லாதவர்களாகவே இருக்கின்றார்கள். இத்தகைய பின்னணிகளில், இவற்றின் உண்மைகளைத் திட்ட வட்டமாக அறியமுடியாவிடினும், சடப்பொருளையும் சக்தியையும் புதிதாக உருவாக்கவோ அல்லது அதனை முற்றாக இல்லாமற் செய்யவோ முடியாது, இவை என்றுமுள்ள சடசக்தி என்றும், சடம் ஓய்வு நிலையில் இருக்கையில் சக்தியதனுள் உறைந்திருக்கும் என்பதனைக் கண்டனர். விஞ்ஞானி களின் இந்த முடிவு இறுதியில் எல்லாமே உள்பொருள்கள் என்ற வேதாந்த, சித்தாந்தக் கோட் பாடுகளை உறுதிப்படுத்துவனவாம். சைவசித்தாந்தம் உள்பொருளாகிய காரணமாயையிலிருந்து நாம் காணும் சடஉலகம் விரிக்கப்பட்டது என விளக்கும் இதனையே பௌதீக வியலாளர் ஜன்ஸ்ரின் சக்தியின் பெருக்கம் சடமும் சடத்தின் பெருக்கம் சக்தியும் என்றனர். இவர் சார்புக் கொள்கைப்படி ஒரு பொருளின் பொருளுண்மைக்கும், அதன் ஆற்றலுக்குமிடையே உள்ள தொடர்பினைக்காட்டினார். அணுவில் அடங்கியிருக்கும் இச் சக்தியையே விஞ்ஞானிகள் அணுச்சக்தி என்பர். பிரபஞ்ச விரிவிற்கு அடிப்படையான அணுக்களை 1938ம் ஆண்டு ஜெர்மனிய விஞ்ஞானி ஒட்டாஹான் (Ottohan) யுரேனியத்துடன்இணைத்து வெடிக்க விட்டபொழுது, அது அழிவுசக்தியாக மாறிவெடித்தது. இந்த அழிவுசக்தி, அந்த

அணுக்கருவாகிய நடு நிலைமின் அணுச்சக்தியினின்றும் கிடைக்கப் பெற்ற மின்சக்தியே விண் வெளி ஓடங்களிற் பொருத்தப்பட்டு வானொலித் தொடர்புகளை மேற் கொள்ளக் கூடிய ஆக்கசக்தியாகவும் இருக்கின்றது. இவ்வாறு அணுக் களும் அவற்றின் மின்சக்தியும் எங்கும் பரந்திருந்தும் எமக்கு அவைபுலனாவதில்லை. புலப்படாத நிலையிருக்கின்ற மின் சக்தியைக் கருவிகள் மூலம் தொழிற்படுத்தியே நாம் மின்னாற்றலை உணர்கின்றோம். இவ்விதமே சூரியனைச் சுற்றிக் கோள்கள் சுழல்வதற்கான ஈர்ப்பு விசையும் அருவமானதே எனக் கண்டனர்.

அணுக்களின் இயல்புள், ஈர்ப்பு விசைகள் என்பனபற்றி விஞ்ஞானிகள் இரு நூற்றாண்டுகளாக ஆராய்ந்து காட்டினாலும், பிரபஞ்சப்படைப்பில் இவற்றினைத் தொடர்புபடுத்து கையில், அருவமாயுள்ள இன்னும் சிலவிடயங்கள் அவர்களுக்குத் தெளிவாகவில்லை யென்பதனையும் அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு விஞ்ஞானிகளுக்கு எட்ட முடியாத இடங்களிலிருந்தே வேதாந்த, சித்தாந்த அணு விஞ்ஞானம் ஆரம்பமாகி, இன்றைய விஞ்ஞான அறிவியலடிப்டையில் சில உண்மைகளை விளக்கியிருப்பது அவதானிக்கத்தக்கது. உண் மையில் விஞ்ஞானிகள் சிலர் தமது ஆய்வுகளுக்கப்பாலான, புரிந்து கொள்ள முடியாத சக்தியொன்றை மதித்திருந்தனர். அந்தச் சக்தியை சைவசித்தாந்தம்,

**நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்**
**நிறைகாலம் இவைவிற்றின் நியம மாகிப்**
**பாதியா யொன்றாகி இரண்டாய் மூன்றாய்ப்**
**பரமாணு வாய்ப் பழுத்த பண்க ளாகிச்**
**சோதியா மிருளாகிச் சுவைகளாகிச்**
**சுவைகலந்த அப்பாலாய் வீடாய்வீட்டின்**
**ஆதியாய் அந்தமாய் நின்றான் தன்னை**
**ஆரூரிற் கண்டடியேன் அயர்ந்த வாறே**

அப்பர் – திருத்தாண்டகம்

என்றும், வேதாந்தம்

எது அணுமாத்திரமான சூக்குமப் பொருளோ அதையே ஆத்மாவாகக் கொண்டது இது எல்லாம். அதுவே உண்மை. அதுவே நீயாக உளாய் (சாந்தோக்கிய உபநிடதம் 6–9–2) என்றும் குறிப்பிடுகின்றன. மாணிக்க வாசகரும் இச்சக்தியை அனேகன் ஏகன் அணு அணுவில் இறந்தாய் (திருச்சதகம் வரி 97) என்றார். சைவ சித்தாந்தம் அணு நிலையிலிருந்த மாயை பிரபஞ் சவிரிவில் அறுபது புறத்தத் துவங்களையும், முப்பத்தாறு உள்தத்துவங்களையும் கொண்டு தொழிற்படுவதாகக் கூறும். இத னைத் திருமூலர்

**ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொது என்பர்**
**ஆகின்ற ஆறா றருஞ் சைவர்தத்துவம்**

(திரு மந்திரம் 2138, 2139)

என விபரிப்பர். மேலும் இவற்றின் விரிவு எல்லாமாக நான்கு கோடியே நாற்பத்தெண்ணாயிரத்து ஐந்நூறு (4004800) தத்துவங்களெனவும், அவை யாவும் தொண்ணூற்றாறில் அடங்கிப் பின் முப்பத்தாறில் அடங்கும் என்பர். இவ்வாறான தத்துவச் சேர்க்கையாலான சடஉடல்களுடன் உயிர்களைக் கூட்டுபவன் இறைவனே எனச் சைவசித்தாந்தம் தொடர்பு காட்டும். இத் தொடர்பினைத் திருமந்திரம் அத்தன் அருளின் விளையாட்டிடம் சடம் எனும். இவ்வாறு இவை யெல்லாவற்றிலும் இறைவன் அணுவி ற்கணுவாய் வியாபித்திருப்பினும், அணுவிற்கும், அண்டத்திற்கு மப்பா லாய் வேறாகி நிற்பான் என்பதே சைவசித்தாந்த அணுவிஞ்ஞா னமாகும். இறைவனின் அணு நிலையை மாணிக்கவாசகர்

**. . . வேதங்கள் ஐயாவென வோங்கி**
**ஆழ்ந்தகன்ற நுண்ணியனே**
**நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே (சிவபுராணம்)**

அணுத்தரும் தன்மையில் ஐயோன் (திருவாசகம்– திருவண்டப்பகுதி)

எனவும், சம்பந்தர் நுண்ணியன் (தேவாரம் 61–6) எனவும், அப்பர் பரியர் நுண்ணியர் பார்ப்பதற்கரியவர் (தேவாரம் 141–5)

எனவும் உணர்ந்தார்கள். உமாபதி சிவாசாரியர் இறைவனின் நுண் மையின்

ஒப்பற்ற நிலையை பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின் மையான் (திருவருட்பயன்)

என உணர்த்துவர்.

இனி, வேதாந்தம் பிரம்மத்தின் (பரம்பொருளின்) விரிவே நாம் காணும் அசையும் அசையாப் பொருட்கள் யாவும் எனக் கூறும். அதாவது ஆலம்பழவிதையைப் பிரிக்கையில் எதுவும் காணப்படா ததுபோல அந்தக் கண்ணுக்குப் புலனாகாத நுண்ணிய பொருளின்றே இப்பெரிய ஆலமரத்தின் பூ, நிறம், மற்ற எல்லா இயல்புகளும் அடங்கிமிருத்தல் போல, அணுமாத் திரமாகிய பிரம்மம் எனும் நுண்பொருளினின்றே இவை யெல்லாம் விரிந்து, நிற்பதனால் அதுவே இவையெல்லாவற்றிலும் ஆத்மா என்கிறது. பிரம்மத்தின் வியாபகம் உப்பை நீரில் போட்டால், அது கரைந்து காணமுடியாதது போல், அதுவும் இவை யெல்லாவற்றிலும் வியாபகமாய்க் கண்களுக்குப் புலனாகாமல் இவ்வாறு கரைந்து இருக்கின்ற உப்பினைக் கண்களாற் காண முடியாததுபோல, இவ்வண்ட மெல்லாம் வியாபகமாய் மறைந்தி ருக்கும் அப்பரமபொருள் அணுவுக் கணுவாய் மட்டுமன்றிப் பெரிதிற்குப் பெரிதாயும் வியாபித்திருக்கும் (கடோ பநிடதம் 2–20) என்பதனையும்

வேதாந்தம் வலியுறுத்துகின்றது.

இறைவனைப்போலவே சிற்றுயிர்களும் அணுக்கள் என வேதாந்த, சித்தாந்த அணுவிஞ்ஞானம் தெரிவிக்கும். சித்தாந்தம் உயிர்களின் வியாபகத் தன்மையை, ஆணவம் அணுவாக்கி வைத்திருப்பதனால் உயிர்கள் அணுக்கள் என நியாயப் படுத்துகின்றது அதனாலே திருமூலர் அணுவினோ டெல்லாமாகி யடைந் திடுந் தத்துவங்கள் (திருமந்திரம் 160)

தத்துவந் தன்னிற் சாரு மணுக்கள் (மு.கு. 161)

அணுவா யோரி சேர்ந்திடும்

(மு.கு. 126) என உயிர்களையும் அணுக்கள் என்றனர்.

உமாபதிசிவாசாரியாரும்

அணுக்களிடர்க் கடனின்று மெடுத்தே (சிவப்பிரகாசம் 18)

கன்மாந்த மணுக்க ளியார்க் மாவாரமாய் (மு.கு. 22)

என உயிர்களை அணுக்களாகவே காட்டினார். ஆனால் வேதாந்தம் பிரமத்தின் அணுநிலையிலிருந்தே சராசரங்கள் யாவும் விரிந்த தென்பதனால், உயிர்கள், சடஉலகம் யாவும் அப்பிரமத்தின் பகுதிகள் ஆகின்றன. அதனாலே வேதாந்தம் இதெல்லாம் அந்தப் பிரமமே அதுவே நீயாக உளாய் என்பதனால் பிரமத்தின் அணுத்தன்மை, சிற்றுயிர்களுக்கும், சடஉலகுக்கும் உரியனவாயினும், பிரபஞ்சநிலை, சிற்றுயிர்த் தொகுதி நிலை என்ற பிரகிருதிநிலையில் சாத்வீகம், ராஜசம், தாமசம் எனும் முக்குணங்களின் தாக்கத்தால் தமது ஆதிஇயல்பான சத்-சித்-ஆனந்த நிலையை இவை இழந்து விடுகின்றன. இந்நிலையில் உயிர்த் தொகுதிகள் சத்-சித்-ஆனந்த உடலைக் கொண்ட பிரமத்தினின்றும் வேறுபட்டு இருப்பினும் அணுத்தன் மையையிழந்து விடவில்லை. அதனாலே முண்டக உபநிடதம் (3-1-9) அணுராத்மா என உயிர்களின் அணு வியல்பினைக் குறிப்பிடும். பிரம் மசூத்திரம் (2-3-19) உயிர்கள் சரீரத்தைவிட்டு நீங்குதல், வந்தடைதல் கண்ணுக்குப் புலனாகாத நிகழ்ச்சிகள் ஆதலால், உயிர்கள் அணுக்களே என வலியுறுத்தும்.

உயிர்கள் அணுவாயின் அவை சரீரம் முழுவதும் எப்படி வலியுறுத்தும். உயிர்கள் அணுவாயின் அவை சரீரம் முழுவதும் எப்படி வியாபகமாகுமெனில், விளக்கின் சுடர் ஓரிடத்திலிருந்து கொண்டு அறைமுழுவதும் ஒளிர்விடுவதுபோல உயிர்கள் தம் ஞானகுணத்தால் உடலில் வியாபகமாகும் என்பர் வேதாந்திகள். சைவசித்தாந்தம் உயிர் தான் சார்ந்த அவ்வவ் உடல்களில் வியாபித்துநிற்கும் இயல்புடையதாதலால் வசித்திடவரும் வியாபி எனக் குறிப்படுவதும் ஈண்டு கருத்திற் கொள்ளத்தக்கது இனி, மேலே குறிப்பிட்டது போல சைவசித்தாந்தம் உறுப்புகள் தன்மையில்லாத காரணமாயையிலிருந்தே இவ் வண்டங்கள் யாவும் விரிக்கப் பட்டன (சி.சித்தியார் 33, சிவப்பிரகாசம் செய் 21, 22) எனச் சட உலகத்தின் அணுநிலையை உணர்த்தும். வேதாந்தமும் பஞ்சபூதச் சேர்க் கையாலான சரீரத்தின் நுண்ணுடல் அழிவதில்லை (பி. சூ. 4-2-10) என்பதனால் சடத்தின் அழிவற்ற அணுநிலையை அறிவுறுத்தும்.

இதுவரை நாம் ஆராய்ந்ததிலிருந்து வேதாந்தமும் பிரம்மம், உயிர்த்தொகுதிகள், சடஉலகம் என்ற பிரமத்தின் மூன்று நிலைகளிலும் அணுநிலையை உணர்த்துவதனால், வேதாந்த, சித்தாந்த அணுவிஞ்ஞானத்தில் வேறுபாடுகாணமுடிவில்லை.

அதனால் பரம்பொருள், உயிர்த் தொகுதி சட உலகம் ஆகிய அனாதி அணுக்கள் ஒன்றியைந்து இயங்குவதனாலே இவ்வண்டங்களின் இயக்கம் நடைபெறுகின்றது என்பது புலனாம். இவ்வணுக்களுள் பரமாணு ஆனது அவனன்றி ஓரணுவும் அசையாது என்று போற்றப்படும். பரம்பொருளான இறைவனேயாவன். பரம்பொருளின் அணுத்தாண்டவம் இவையாவற்றிலும் ஒன்றாய், உடனாய், வேறாய் நின்றாடும் தாண்டவமாகும். இந்தவேதாந்த, சித்தாந்த அணுத்தாண்டவத்தினையேமாணிக்கவாசகர்

**அணுவாய் தேய்ந்து தேய்ந்து ஒன்றாகும்**

(திருவாசகம் கோயிற்றிருப்பதிகம்)

என்றும், திருமூலர்

அணுவில் அணுவினை ஆதிப்பிரானை
அணுவில் அணுவினை ஆயிரங்கூறிட்டு
அணுவில் அணுவினை அணுகவல்லார்கட்கு
அணுவில் அணுவை அணுகலாமே

(திருமந்திரம் 1971)

எள்றும் குறிப்பிடுவர். இவ்வாறு வேதாந்த, சித்தாந்தம் உணர்த்துகின்ற அணுமையங்கள் சிற்றறிவுடைய விஞ்ஞானிகளின் அறிகருவிகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் எட்டமுடியா தவையாகின்றன. எனவே அணுக்களின் உள்ரகசியத்தை ஞானக்கண்களே காணலாம் என்பதனை

அருளினா லாகமத்தே யறியலா மளவினாலும்
தெருனலாஞ்சிவனை ஞானச் செய்தியாற்
சிந்தையுள்ளே
மருளெலா நீங்கக் கண்டு வாழலாம்

(சி.சி. செய் 6)

என அருணந்தி சிவாசாரியார் கூறியருளுவதைக் கொண்டு நாம் தெளிவோமாக.

*******



# சிறுவர் கலசம்

வணக்கம்!

## பெற்றார்களே! சிறுவர்களே!

இந்த இதழ் எமது 27ஆவது இதழ். இம் முறை உங்களுடைய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய பல கட்டுரைகளை உமக்குத் தருகின்றோம். இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன. தமிழ்க் கட்டுரைகளைப் புரிந்து கொள்ளாவிடின் உங்கள் பெற்றாரை அணுகிக் கேளுங்கள். அல்லது எமக்கு எழுதுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றோம். நீங்களும் எங்களுக்குக் கட்டுரைகள் அனுப்பவேண்டும். உங்கள் அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதுங்கள். சிறுவர்களே மேலும் மேலும் எழுதுங்கள். தமிழில்தான் எழுதவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆங்கிலத்திலும் எழுதுங்கள். நீங்கள் தமிழர்களாக வாழவேண்டுமென்பதுதான் எமது அவா.

-ஆசிரியர்-

# Itihasa

Itihasa—Iti-ha-sa. "It is so" (it happened thus). The 'ha' in the middle means 'without doubt'. So an 'itihasa' means a true story, also a contemporary account. The word 'itihasa' can also mean "thus spake they", that is "great men say that it must be so". Itihasa, so far as the Indian tradition is concerned, embraces mythology and legend.

The religion of the Vedas constitutes the principles of Shruti or revelations which cannot be analysed, challenged or disputed, since they depend on pure faith.

The laws of Smritis (remembered rather than revealed) suggest a historical continuity which includes development, change,challenge, reform and progress in secular terms.


The laws of Smritis are expressed and depicted by Mahapurushas and Mahajanas (the great leaders) who exert moral influence, as well as legislative authority which is subject to change over the ages, according to the needs of society. Itihasa is therefore remembered, recorded, chronologically transmitted by reason rather than faith.

The two most popular and loved epics are the Ramayana and the Mahabharata.

Ramayana is called the Adi kavya or the First Epic. It was written in Sanskrit by Sage Valmiki, who says that from shoka came "shloka", from the pathos-filled fountain of Valmiki's heart formed the bedrock of Indian aesthetics.



# THE VEDAS



The word 'Veda' comes from the root 'Vid' - to know, leading to 'Vidya' knowledge which leads further to vision, meaning revelation, self-realisation. The Veda is the book of knowledge of Changeless Reality. The four Vedas form a body of religious literature called shruti. 'Shruti' means 'heard', experienced and 'spiritually revealed'. The realised souls, the Rishis, responded to the divine vibrations around them and in their minds and hearts felt and experienced ecstasy. This ecstasy they expressed in the form of Hymns of praise to the glory of nature and later prayers to the gods controlling nature.

The vedas are personal and eternal. Eternal in the sense that the seers intuited pre-existent truths.The knowledge of 'Self' that they acquired was there eternally, they discovered - or rediscovered - this eternal treasure of knowledge.

The texts have come down to us orally from generation to generation of priests with perfection in intonation and rhythm, from memory and by rote.

The Vedas are classified into four groups: the Rig Veda, Yajur Veda, Sama Veda and Atharva Veda. There are Samhitas, Brahmanas, Aranyakas and Upanishads belonging to each of these four Vedas.

1) RIG VEDA

The Rig Veda is the earliest and the most important of all shruti literature. It consists of 1028 hymns of praise. One of the most important ideas that comes out of the Rig Veda is Rta means cosmic and sacred order, an ultimate and harmonic integrated structure of reality. 'Rite' and 'right' both come from the word Rta.
The Rig Veda was not composed during any historically determinable, particular period of time. It is the collective output of

**There is a rhythm in the seasons,
that is native to my blood,
Hint of colour, touch of mood,
In my heart is a poem keeping
time, time, time, time,
To the music and the chime, to
the music
and the chime, to the music and
the chime, chime, chime.**



many sages and visionaries, known as Rishis. They went on adding Mantras, songs and prayers and glorifications of nature, over several centuries. Many of these spontaneous exultations provide inspiring insights into the eternal truths of nature and the universe.

The Vedic poet enunciated the truth by declaring " The Truth is one but the wise call it variously". "Eakam sad Viprah bahudha vadanti."

Song of Creation "Who knows, and who has the courage to say he knows How the world was created, who created the world?

Even gods are later than this world's creation.
Who can say how the world was created?
The primal creator, whose eye controls this world from highest heaven, he surely knows. Perhaps he also does not know."


**2) YAJUR VEDA**
Gives directions for the performance of rituals and cermonies.


**3) SAMA VEDA**
Sets to music many hymns from the Rig Veda, to be chanted at appropriate stages with correct modulations and intonations. Our classical music has its roots in this Veda.

**4) ATHARVA VEDA**
Deals mostly with ethical principles, and also some branches of science like Ayurveda (the science of health and longevity). It has sections dealing with Tantras (literally threads) and other ritualistic esoteric knowlege.


The texts were passed down orally from one generation to the next generation of priests, with perfection in intonation and rhythm from memory and by rote.




HINDULSM - WHAT IS IT
"I am confused, please explain who is a Hindu and what is Hinduism."
"Hinduism is the four Vedas".
"Hinduism is one who is born a Hindu."
"I disagree a Hindu is one who aims at spiritual self-improvement and follows a code of conduct (Dharma) which leads to such fulfilment."
"Hinduism is Sanatana Dharma."


"Hinduism is the Upanishads."
"Hinduism is the Puranas."
"Hinduism is the Dharma Shastras."
"Hinduism is the Itihas – Ramayana & Mahabharata."
"Hinduism is Samskaras."

# Chyavan Rishi and Sukanya




Chyavan Rishi in meditation.

Sukanaya accidentally blinds the rishi who is like an anthill.


She runs back terrified to her father and friends. To her horror she sees the king's men crying, writhing in pain and rubbing their eyes. But no one knew the reason for their plight, and the king was puzzled by this strange affliction.

Sukanya tells her father about her unintentional mistake and how she has blinded chyavan Rishi.

Understanding the reason for the affliction, the frightened king hurried to the Rishi to beg pardon and offer penitence.

The irascible Rishi is adamant- no riches, no servants, no pardon, on penitence. He has been blinded, and the girl who has blinded him must now serve him as his wife.

Sukanya prays to Devi Durga, and vows that she will marry the Rishi and serve him., and asks for her forgiveness and help.




The King's courtiers writhing in pain



Sukanya willingly weds the rishi

# Chyavan Rishi and Sukanya





She runs back terrified to her father and friends. To her horror she sees the king's men crying, writhing in pain and rubbing their eyes. But no one knew the reason for their plight, and the king was puzzled by this strange affliction.


Sukanya tells her father about her unintentional mistake and how she has blinded chyavan Rishi.

Understanding the reason for the affliction, the frightened king hurried to the Rishi to beg pardon and offer penitence.


The irascible Rishi is adamant- no riches, no servants, no pardon, on penitence. He has been blinded, and the girl who has blinded him must now serve him as his wife.

Sukanya prays to Devi Durga, and vows that she will marry the Rishi and serve him., and asks for her forgiveness and help.




Sukanya looks after the blind rishi
As soon as she realises her mistake and her responsibility, the curse is lifted from the kingdom. Sukanya settles down to life in the ashram, and cheerfully and devotedly attends to the well being of her husband.
One day returning after her bath in a forest pond, sukanya is stopped by the Ashwinis, the twin horse deities who are celestial physicians.
Struck by her beauty the Ashwinis say:
"Don't waste your life here. Marry one of us and be happy."
"How dare you!" she snap. "I am a virtuous wife."
The Ashwini Kumars tempt Sukanya .
"No, no," they exclaim. "Don't be angry. We were only testing you. We will restore youth and vision to your husband. He will look exactly like us.
There is only one condition - you must spot him."
"Agreed" says Sukanya.
"Sukanya, lead your husband to the lake.
All three of us will take a dip. When we emerge, you have to tell us, who is who"
Sukanya prays to Durga for guidance.


Sukanya identifies her husband
Sukanya prays to Durga Devi silently. A divine voice whispers to her. "Sukanya, remember: Only mortals blink." Sukanya looks minutely. The central figure has eyes which are blinking. This is my husband," She says.
The Ashwini deities bless her and vanish. Chyavan is united with his wife. king Sharvati visits his wise daughter and handsome son-in-law and blesses them saying: "you have not only made me proud, you have made all womankind proud."
Sukanya lives happily with her rejuvenated Rishi husband


# கரவெட்டி யாக்கரு பதியமர்ந்த வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற நூதன பரிபார மூர்த்திகளின் குடமுழுக்குப் பெருவிழா!

எமது சொந்த மண்ணின் ஆலயங்கள் பற்றி கலசம் இதழ்களில் எங்கள் மண்ணில் எத்தனை ஆலயங்கள் என்கின்ற தலைப்பில் வடமராட்சி ஆலயங்களின் பட்டியல் விபரம் வெளியிடப்பட்டிருந்தது. பின்பு ஏனோ அது தொடரவில்லை. அதனைத் தொடர வேண்டும் என்பதே எமது எண்ணமாகும். ஐரோப்பா நகரின் இளைய தலைமுறையினர் எமது பாரம்பரிய ஆலய நிலைமைகளை விரிவாய் அறிய அது ஒரு வரப்பிரசாதமாய் அமையும். அந்த வகையில் யாழ் வடமராட்சி கரவெட்டி கிழக்கு யாக்கரு வரசித்தி விந–ாயகர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற நூதன பரிபார மூர்த்திகள் கும்பாபிஸேகம் மற்றும் மஹோற்சவம் பற்றிய விபரங்களை இங்கே தருகின்றோம்.

யாழ் வடமராட்சியின் இயற்கை வளங்களாம் நெல் வயல்களும் தலவிருட்சங்களும் பொலிந்து நிற்கும் கரவெட்டி யாக்கரு பதியிலே வரசித்தி விநாயகனாய் வேண்டும் வரங்கள் சாலப்பரிந்து தரும் திருக்கோவிலாய் இவ்வாலயம் மிளிர்கின்றது. யாக்கரு பிள்ளையார் என இவ்வூர் மக்களால் அழைக்கப்படும் இவ்வாலயம் மிகவும் பிரசித்தி பெற்றது. ஆதி காலத்தில் விநாயகர் சுயம்புவாக தோன்றிய ஸ்தலம் என்பது கர்ண பரம்பரைக் கதை. சாவகச்சேரியில் இருந்து சரசாலையூடாக வரும் பிரதான பாதையின் வடமராட்சி எல்லை ஆரம்பமாகிவரும் முற்பகுதியிலேயே இவ்வாலயம் எழிலாய் மிளிர்கின்றது. ஆரம்பத்திலே தொட்டு இவ்வாலயத்தில் மூல மூர்த்தியாக கருவறையிலே ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானும் பரிபார மூர்த்தியாய் பைரவப்கடவுளுமே பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் பலகாலமாய் விநாயகர் மூஸிக, தம்பம் பலிபீடம் மற்றும் பைரவ மூர்த்தியோடு மஹேரற்சவ விழாக்களும் நடைபெற்று வந்தது.

தற்போது அறங்காவலர் சபையும் இரத்தினம் சிவனேசன் குடும்பத்தாரும் ஞானசுந்தரம் செல்வநாயகி குடும்பமும் சாத்திரியார் வீட்டுக் குடும்பமும் மற்றும் தெடுத்தனைபதி மக்களும் பக்த அடியார்களும் கொண்ட ஊக்கமும் திருப்பணிக் கொடுப்பனவுகளும் ஆலயத்தைப் புதியதொரு பரிமாணத திற்கு மாற்றியிருக்கின்றது. தற்போது பரிபார மூர்த்திகளாகவும் நூதன ஆலயங்களாகவும் ஸ்ரீ மஹாலட்சுமி நாகதம்பிரான், கிருஸ்ணர், முருகன், நவக்கிரஹம் சண்டேஸ்வரர் முதலிய ஆலயங்கள் அமைத்து 19–03– 99 இலன்று மஹா கும்பாபிஸேக விழா இனிதே நடந்தேறியது.

**-துன்னையூர் ராம் லோகேஸ்வரக் குருக்கள்-**



# கலசம் சஞ்சிகையோடு கருத்துப் பரிமாறல்

அன்புடன் கலசம் ஆசிரியர் நற்குணதயாளனுக்கு நலம் நாடலும் அதுவே.இத்துடன் இரு Cheques £10 இற் குரியது–சந்தா மற்ற £25- எனது நன்கொடை.

எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. நான் இதைச் செய்வது. காரணம் சமய சம்மந்தமாக இதுவே 25 வருட காலத்தில் நான் செய்யும் முதல் நன்கொடை. மக்களுக்காக பாடசாலைகளுக்கு தமிழுக்கு செய்வதில் நான் தயங்குவதில்லை. சமயம் செய்வதற்கு நம்பிக்கை யுடையோர் ஆயிரமாயிரம் இருக்கிறார்கள். இவர்கள்செய்வதில் நம்பிக்கைக்கு மேலாக ஒரு பயம் ஒரு தன்னலம். ஆனால் மற்றவர்க ளுக்கு உதவுவதில் இவர்கள் ஏனோ தயக்கம்.

கலசம் ஆரம்பித்த காலத்தில் நண்பர் அசோகன் தமிழ்ப்பாடசாலையில் என்னை அணுகி சந்தா கேட்ட போது. சமயத்திற்காக அல்ல நண்பரை முகம் கோண மனத்துனிவில்லாததால் சந்தா கட்டினேன் இப்போது கட்டி யதின் மகிமையை உணர்கிறேன். கலசம் இது இன்னெரு சமய மலர் என்ற எனது உணர்வை நீங்கள் மாற்றிவிட்டீர்கள். சமய மலர் என்ற பீடத்தைப் பாவித்து நீங்கள் செய்யும் சேவை அளப்பரியது. ஆனால் எனக்குத் தெரியும் என்னைப்போல் பாராட்டுபவர்கள் மிகக்குறைவாகவே இருக்கும். சமயத்தின் பேரால் அதை அவதூறு அவமதிப்பதாகவே சமயத் தை முற்றாக விளங்காத சமய வாதிகள் உங்களை விமர்சிப்பார்கள் ஜனநாயக தர்மப்படி அவர்கள்– பெரும்பான்மை என்போன்றோர். சிறுபான்மை. இதன் பொருட்டும் மனிதர்களுடைய நம்பிக்கையை மதிக்கும் பொருட்டும் சமயம் பற்றி யாருடனும் வாதாடுவதில்லை. சித்திரையில் இல் வரும் புத்தாண் டிலும் முதலாவதாக கோவிலுக்குப் போக வேண்டும் தைமாதம் வரும் புத்தாண்டிலும்(புத்தாண்டு) முதலா வதாகக் கோவிலுக்குப் போக வேண்டும். இப்படியாக வழிதடுமாறி எல்லாமே சுயநலத்திற்காக வாழும் எம் மக்களிடையே அவர்களின் அறிவீனங்களை தட்டி எழுப்பும் உங்கள் சேவை தொடர (பல்லாண்டுகள்)எனது வாழ்த்துக்கள்.

இறுதியாக எனது பால்ய நண்பன்– பரமநாதன் எழுதிய கவிதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

**கல்லாய்ப் படைத்தே உன்னை**
**காவல் என்றே வைத்தாக**
**பொல்லாப் பாவம் செய்தே**
**பொழுதும் நின் சன்னதி வந்து**
**எல்லாம் நீங்கும் என்று**
**ஏங்கிக் கண்ணீர் மல்கும்**
**வல்லோர் வாழும் உலகில்**
**வணங்கேன் வந்துன் கோயில்**

அன்புடன்
ப. நவேந்திரன்

---

ஆசிரியர் கலசம், இலண்டன்

**அன்புடையீர்**

வணக்கம். கலசம் 25 சிறப்பு மலர் பார்த்தேன். அதில் எம். எஸ். கீரன் அவர்கள் எழுதிய அறுகரிசியும் வாய்க்கரிசியும் என்ற கட்டுரையில் மங்கள கருமங்கள் காலில் ஆரம்பித்துத் தலை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற கூற்றை ஒப்புக் கொள்ள இயலாது.

நித்திய கன்ம அனுஷ்டானத்தில் விபூ தியைத் திரிபுண்டரமாக அணியும் போது ஈசானம் முதலான பஞ்சப் பிரம மந்திரங்களை உச்சரித்து சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ் முழந்தாள் என்ற முறையில் அணிகிறோம் அணிய வேண்டும். அபரக் கிரி கையில் பிரேதத்துக்கு விபூதி தரிக்கும் போது சத்தியோ ஜாதம் முதலான மந்திரங்களை அடிதலை மாற்றி உச்சரித்து முழந்தாள், கொப்பூழ், மார்பு, நெற்றி, சிரம் என்ற முறைப்படி அணியவேண்டும்.

இதனை நோக்கும் போது அறுக ரிசியை முழந்தாள், தோள், சிரம் என்ற முறையில் தூவி மணமக்களை ஆசீர்வதிப்பது தவறு என்பது புலனாகும்.

பொதுவாக ஆசீர்வாதம் செய்யும் போது சிரசில் திருக்கரம் வைத்தே பெரியோர்கள் ஆசீர்வதிப்பர். ஏன் கோவில்களில் உபய தாரர்களையும், திருமணத்தில் மண மக்களையும் குருக்கள்மார் **மஹாந்தோ அனுக்ரஹ ணந்து ததாஸ்து** என்று ஆசீர்வாதம் பண்ணும் போது அட்சதையை சிர சில் போட்டுத்தான் செய்வது யாவ ரும் அறிந்ததே. எனவே மண மக்களை ஆசீர்வதிப்போர் அவர்க ளின் சிரசிலேயே மும்முறை அறுகரிசி தூவி ஆசீர்வதிப்பதே தகும். அறிஞர் இம்முறையே கைக்கொள்வர்

**அன்புடன்**

**மு. சிவராசா. யாழ்ப்பாணம்**

ஐயா!

நான் சென்றகிழமை London வந்த

போது ஒரு தமிழ் கடையில் தங்களின் ஆன்மீக வழிகாட்டியான கலசம் இதழை தற்செயலாக கண்டபோது ஒன்றை வாங்கி வந்தேன் அவ்விதழ் 25வது சிறப்பிதழாக வெளியிடப்பட்டதாகும். அவ்விதழின் உள்ளடக்கம் நோர்வே வாழ்மக்களின் சார்பில் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. அன்னிய கலாச்சார சூழ்நிலையில் வாழும் இந்து மக்களுக்கு முக்கியமாக சிறார்களுக்கு இவ்விதமான மலர்கள் ஓர் ஊன்று கோலாக அமைந் துள்ளது. கடவுள் நம்பிக்கை குறைந்து வரும் அன்னிய வாழ் இந்து மக்களுக்கு உங்களின் மலர் ஓர் வரப் பிரசாதமாகும் உங்களின் நிர்வாகத்தின் சேவை மென்மேலும் வளரவேண்டும் என்றும் மலர் ஆசிரியர் திரு.மு நற்குணதயாளன் துணை ஆசிரியர் திரு.கஜெக தீஸ்வரன் அவர்களுக்கும் எமது வாழ்த்தைக் கூறுவதோடு, உங்களால் இது வரை காலமும் வெளியிடப்பட்ட மலர்கள் அனைத் தையும் தயவுசெய்து எமக்கு உடன் அனுப்பிவைக்கவும் நோர்வே நாட்டில் அரொண்ணியம் நகரில் இயங்கும் இந்துமன்றம் மாதத்தில் ஒரு முறை பூஜையும் பஜனையும். சிறுவர்களுக்கு சமய வகுப்பும் நடாத்துவதோடு சமயபெருநாட்களில் பூஜையும் சமய விழாக்களையும் கொண்டாடி வருகின்றோம்

இங்ஙனம்

த. தியாகலிங்கம

பொறுப்பாளர். இந்துமன்றம், நோர்வே

---

இறை அருள் முன்னிற்க

டாக்டர் நவநீதராசா அவர்கட்கு!

வணக்கம்.

ஐயா!

எமது தாய் நாட்டில் யுத்த நெருக்கடியால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில்– விசேடமாக யாழ்ப் பாணம், வன்னி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள மக்களில் பெரும்பாலோர் தமது வீடு வாசல், பொருள் பண்டங்களை இழந்து, மரநிழல்களிலும், பாடசாலை கோவில்களிலும் தஞ்சம் அடைந்து, அவலவாழ்க்கை வாழ்வது நெஞ்சை உறுத்தும் செய்தி. ஒரு நேர உணவிற்கே வழியில்லாது அல்ல லுறுகின்றனர் சொல்லொணாத் துன்பம் அனுபவிப்பவரில் பெண்களும், குழந் தைகளுமே அனேகர்.

கலசம் மூலம் வேண்டுகோள் விடுத்துப் பணம் சேகரித்து இராமகி ருஷ்ணமிஷன், விவேகானந்தசபை இந்து மன்றத் தலைவர்களில் ஒருவருக்கு அனுப்பி அகதிகளின் துயர் துடைத்தால் பேருதவியாக இருக்கும். உங்கட்குள்ள பலபணிகளுடன் இதையும் பொறுப்பேர்த்துச் செய்யும்படி கேட்பதற்கு மன்னிக் கவும். கலசம் (சித்திரை வருடப் பிறப்பு) இதழில் இயலுமானால் வெளியிடவும். இதை எழுதியது பிழை என்றால் மன்னிக்கவும். என்னைச் சார்ந்த அளவில் எம்மால் இயன்றது சேகரித்து இடையிடையே இராமகிருஷ்ண சாரதா சமிதிக்கு அனுப்புகிறோம். அவர்கள் வன்னிப் பக்கம் சென்று இம்மாதம் பார்வை யிட்டுத் திரும்பியுள்ளனர். மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் எழுத்திலோ, சொல்லிலோ கூற அருள் கிடைக்கப் பிரார்த்தித்து நினைக் கின்றேன்.

வணக்கம்.

இப்படிக்கு

நன்றி மறவாத க. கந்தசாமி

## காலத்தின் அருமை

காலங்களே தருகின்றன. அவையே பறிக்கின்றன காலங்களே சிரிக்கின்றன. அவை அழவும் வைக்கின்றன.

காலம் பார்த்துக் காரியம் செய்தால் பூமியையே விலைக்கு வாங்கலாம்

காலங்களிலே காரியங்களின் வெற்றி தோல்வி அடங்கியிருக்கின்றன.(கண்ணதாசன்)

காலங்கள் கடவுள் பாடுகின்ற இராகங்கள். அவை வீணடிக்கப்பட்டால் திருப்பக் கிடைப்பதில்லை. நேரம் பொன்னுக்குச் சமன்.

அறிவும் உணர்ச்சியும் தாமதித்தே வருகின்றன. ஆனால் காலம் முந்திக் கொண்டு வருகின்றது.

காலத்தின் அருமை, பெருமையை உணர்ந்தவன் தான் காரியத்திலும் பெருமை பெற முடியும்.

காலங்களே தருகின்றன. அவையே பறிக்கின்றன. காலங்களே சிரிக்கச் செய்கின்றன. அவையே அழவும் செய்கின்றன.

ஞாலம் கருதினும் கைகூடும், காலம் கருதி இடத்தாற் செயின் (குறள்)

அதிர்ஷ்டம் என்பது வேதொன்று மில்லை வருகின்ற காலத்தை ஒழுங்காகப் பிடித்துக் கொள்வதே.

காகத்திற்கு இரவில் பார்வை இல்லை. கோட்டான்களுக்கு இரவில் பார்வை உண்டு. அதனால் காகம் கோட்டான்களை இரவில் தவிர்த்து பகலில் சண்டையிடும். பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல் வெல்லும்.

வேந்தர்க்கு வேண்டும் பொழுது என்றார் வள்ளுவப் பெருந்தகை. இக்குறளிலிருந்து நாம் நேரம் பார்த்துக் கருமத்தைத் தொடங்கினால் வெற்றி பெறுவோம். இது அரசர்க்கு மாத்திரமன்றி சகலருக்கும் உதவும் பொன்மொழியாகும்.

# பெண்கள் உலகம்

பெண் என்பவள் சக்தி. அவளின் அசைவுகள் நிறுத்தல்கள் உலகின் அசைவையும் நிறுத்தல்களையும் தீர்மானிக்கும் என்பது நிதர்சனமான உண்மை. இந்த உண்மையினைப் பக்கபலப்படுத்தும் சமய ஆதாரங்களை வெளிக்கொணர்வதும் அவற்றின்மூலமாகப் பெண்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நோக்கி நகர்வதும் இப்பகுதியின் நோக்காகும். இப்பகுதியினை எங்கள் சஞ்சிகையின் பெண்கள் பகுதிகுப் பொறுப்பான திருமதி தமிழரசி சிவபாதசுந்தரமவர்கள் தொகுத்து வழங்குவார். இது சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களை அன்போடு வரவேற்கின்றோம்.

–ஆசிரியர்–

## கற்பகத்தின் பூங்கொம்பு

அழகனாகப் பிறந்து, அரச போகத்தில் வளர்ந்து ஆடம்பரமான வாழ்வையே விரும்பி, ஒன்றுக்கு இரண்டு பெண்களை மணந்து, தனக்குத் தேவையான பொருட்களை இறைவனிடம் கேட்டுப் பெற்று வாழ்க்கையின் இன்பத்தை நன்கு சுவைத்தவர் சுந்தரர்.

ஆசைகளை அறுக்க முடியவில்லை. அதனால் உண்டாகும் கோபத்தால் எல்லோரையும் பகைத்துக் கொள்கிறேன் பொய்யே பேசுகின்றேன் என்றாலும் புகழையும், பொருளையுமே பெரிதும் விரும்புகின்றேன். பிறரை வருத்துவதும், பிரித்து வைப்பதும் என்வேலை. துன்புற்றவர்க்கு உதவி அறியேன். உறவினர்க்கும் துணை செய்யமாட்டேன். எந்த ஒரு நல்லகுணமும் என்னிடம் இல்லை எனத் தன்னைப்பற்றிக் கூறி திருவாரூர் இறைவன் தன்னை ஆள்வரோ கேளீர் என 73ம் பதிகத்தில் கேட்பவர், 100வது பதிகத்தில்

**வாழ்வை உகந்து நெஞ்சே**
**மடவார் தங்கள் வல்வினைப்பட்டு**
**ஆழ முகந்த அன்னை**
**அது மாற்றி அமரர் எலாம்**
**சூழ அருள் புரிந்து (7.100.4)**

என்று பாடி இறைவன் தன்னை ஆட்கொண்டு அருள் செய்த திறத்தை வியக்கின்றார். சுந்தரரின் வாழ்வை அவரது தேவார துணை கொண்டு நோக்குவோர் இறை என்ற பயம் அற்று நினைத்ததை எல்லாம் இறைவனிடம் கேட்டுப் பெறலாம்.

இதனாற்றான் என்னவோ திருக்குற்றாலக் குறவஞ்சி பாடிய திரிகூடராசப்பக் கவிராயர்

ஆதிநாட் சுந்தரருக்கு தூது போனவர் முன்னே
தூது நீ சொல்லி வாராய்

எனப்பாடினார்.

இறைவனையே தன் மனைவியிடம் தூது அனுப்பும் சுந்தரரின் செயலை என்ன என்று சொல்வது. இறைவன் சுந்தரருக்கு தூது நடந்தது உண்மை என்பதை நிரூபிக்க திருவாரூர் கோயிலில் உள்ள கல்வெட்டில் 2ம் குலோத்துங்கன் தூது நடந்த தெரு என ஒரு தெருவைக் குறித்துள்ளான்.

தனக்கு தோழனாகி, தான் செய்த குற்றங்களைப் பொறுத்து, எளியவனாய் இறைவன் தனக்கு தூது போனார் என்று சுந்தரர் தமது தேவாரத்தில் பாடுகின்றார்.

. . . .விமலனை அடியேற்கு எளி வந்த
தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறானை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே (7.68.8)

யாரிடம், எதற்காக இறைவனை சுந்தரர் தூது அனுப்பினார்? சுந்தரர் செய்த குற்றம் என்ன? திருவாரூர் கோயிலுக்குச் சென்ற சுந்தரர் தோழியரிடையே நின்ற பரவையாரைக் கண்டார். பரவையாரின் அழகு சுந்தரர் மனத்தைக் கொள்ளை கொள்கின்றது. கற்பகத்தின் பூங்கொம்போ என வியக்கின்றார். திருவாரூர் இறைவன் திருவருளால் இருவருக்கும் திருமணம் முடிந்தது. இல்வாழ்வும் தொடர்ந்தது.

வினை– விதியாகச் சதிசெய்ய திருவொற்றியூர் சென்ற சுந்தரர் சங்கிலியாரைக் கண்டு மோகிக்கிறார். அங்கும் இறைவன் துணை போக சங்கிலியாருடன் கூடி வாழ்கிறார். சங்கில–யாரின் மோகத்தில் பரவையாரையும் பரவையாரை திருமணம் செய்துவைத்த ஆரூர் இறைவனையும் மறந்தார். மோகம் தணிந்ததும் அவர்கள் ஞாபகம் வர

**ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக்கு இடனாகி**
**மாழை ஒண்கண் பரவையைத்தந்து ஆண்டானை மதியில்லா**
**ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே**
**(7.51.10)**

எனப்பாடி வருந்தினார். பின்னர் சங்கிலியாரை திருவொற்றியூரிலே விட்டுவிட்டு பரவையாரை நாடி வந்தார். ஆனால் சங்கிலியாருடன் கூடி வாழ்ந்ததை அறிந்த பரவை–

வயார் சுந்தரரை ஏற்க மறுத்துவிட்டார். சுந்தரர், பரவையாரிடம் இறைவனையே தூதாக அனுப்பினார். சிவனும் தன் தூது வேலையை மிகச் சிறப்பாகச் செய்து அவர்கள் இருவரையும் மறுபடியும் இணைத்து வைக்கின்றார்.

இதனை தூதனை என்றனையாள் தோழனை எனும் தேவார அடி எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இறைவனே தூதனாகப் போக பரவை என்ன புண்ணியம் செய்தாளோ? பரவையாருக்காக சுந்தரர் எத்தனை தேவாரப்பாடல்களை பாடி பரிசுகள் கேட்டுப் பெற்றிருக்கிறார்?

குண்டையூரில் பெற்ற நெல்லு மூட்டைகளைத் தூக்கி வர ஆட்கள் கேட்டுப் பாடிய கோளிலிப் பதிகத்தில்

**நீளநினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன் வாளன**
**கண்மடலாள் அவள் வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெருமான் குண்டையூர் சில நெல்லுப் பெற்றேன்**
**ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தர பணியே(7. 20. 1)**

வாள் போன்ற கண்களை உடைய பரவை பசியால் வாடி வருந்தாதிருக்க நெல்லை கொணர்ந்து சேர்க்க ஆள் இல்லையே என்றவர்

**பாதியோர் பெண்ணை வைத்தாய்**
**படருஞ்சடைக் கங்கை வைத்தாய்**
**மாதர் நல்லார் வருத்தம் அது**
**நீயும் அறிதி அன்றே (7. 20. 3)**

உனது உடலில் பாதியில் உமையை வைத்து, கங்கையை சடையில் வைத்தி ருக்கின்றாய் ஆதலால் நல்ல பெண்களின் மனவருத்தம் எப்படி என்பதை நீயும் அறிவாய் என்கிறார்.

**குரவமருங் குழலாள் உமை**
**நங்கை ஓர் பங்குடையாய்**
**பரவை பசிவருத்தம் அது**
**நீயும் அறிதியன்றே**

என்றும்
பரவையாவள் வாடுகின்றாள்
எனவும் பாடி இறைவனிடம் பரவை யாருக்காக நெல்லை வீட்டிற்கு எடுத்துவர ஆள் கேட்டு பெற்றிருக்கின்றார். அது மட்டுமல்லாமல் திருமுதுகுன்றத்து இறைவனிடம் வாங்கிய பசும்பொன் முழுவதையும் மணிமுத்தாற்றில் போட்டுவிட்டு வீடுவந்து சேர்ந்தார். ஒரு நாள் அந்தப் பொன்னின் ஞாபகம் வந்து பரவையாரிடம் நான் முதுகுன்றத்து இறைவனிடம் பெற்ற பொன்னை மணிமுத்தாற்றில் போட்டுவந்தேன். அதனை இங்குள்ள கமலாலயக் குளத்தில் எடுப்போம் வா எனக் கூறி, அவருடன் கமலாலயத்திற்கு வந்தார். சுந்தரர் குளத்தில் இறங்கித் தேடினார், தேடினார், தேடிக் கொண்டே இருந்தார்.

சுந்தரரை பரவையார் நம்புவதாக இல்லை. ஆற்றில் போட்ட பொன்னை யாராவது குளத்தில் தேடுவானா? அதுவும் மணி முத்தாற்றில் போட்டதை திருவாரூரில் தேடுவது என்ன வேடிக்கையான செயல். பரவையார் வேதனையுடன் சிரித்தார். பரவையின் நமட்டுச்சிரிப்பு சுந்தரருக்கு பிடிக்கவில்லை.

**மின் செய்த நுண்ணிடை**
**பரவையிவள் தன்முகப்பே**
**என் செய்தவாறடிகேள். . . (7. 25. 1)**

அடிகளே! மின்னல் போன்ற இடையுள்ள பரவைக்கு முன் என்ன செய்திருக்கின்றாய் என்று கேட்டவர்

**உம்பரும் வானரும் உடனே நிற்கவே எனக்குச்**
**செம்பொனைத் தந்தருளித் திகழும் முதுகுன்றமர்ந்தீர்**
**வம்பம ருங்குழலாள் பரவை இவள் வாடுகின்றாள்**
**எம்பெருமான் அருளீர் அடியேன் இட்டளங்கெடவே(7. 25. 2)**

இறைவனுக்கும், பரவையாருக்கும் சேர்த்தே சொல்கிறார் எனக்குச் சாட்சியாக உம்பரும் வானவரும் நிற்கவே செம்பொன்னை எனக்கு தந்து திருமுதுகுன்றில் அமர்ந்தாய். நல்லமணம் வீசும் கூந்தலையுடைய பரவை இவள் வாடுகின்றாள், ஆதலால் எனக்கு அருள் செய் என்கின்றார். இப்பதிகத்தில் பரவையின் மன வாட்டத்தை மூன்று தேவாரங்களில் குறிப்பிட்டு பொன்னைத் தரும்படி கேட்கிறார். ஆறு தேவாரங்களில் பரவையின் முன்னிலையில் தந்தருளுமாறு வேண்டுகின்றார்.

**கொங்கை நல்லாள் பரவை**
**குணம் கொண்டிருந்தாள் முகப்பே**
**அங்கணனே அருளாய் (7. 25. 4)**
**படியாரும் இயலாள்**
**பரவை இவள் தன்முகப்பே**
**அடிகேள் தந்தருளீர் (7. 25. 6)**

**பந்தணவும் விரலாள்**
**பரவை இவள் தன்முகப்பே**
**அந்தணனே அருளாய் (7. 25. 7)**
**விசை சேருங் குழலாள்**
**பரவை இவள் தன்முகப்பே**
**அரசே தந்தருளாய் (7. 25. 8)**

என எட்டுப்பாடல்கள் பாடியும் சுந்தரருக்குப் பொன் கிடைக்கவில்லை ஒன்பதாவதில்

**பூந்தாருங் குழலாள்**
**பரவவை இவள் தன்முகப்பே**
**கூத்தா தந்தருளாய்**
**கொடியேன் இட்டளங்கெடலே (7. 25. 9)**

தன்னைக் கொடியேன் எனப்பாடி இறைஞ்சி பொன் பெற்று பரவையாருக்கு கொடுத்திருக்கிறார். கற்பகத்து பூங்கொம்பும் பொன்னை விரும்பி இருக்கின்றதே.

**—சாலினி—**



# முருகப் பெருமான் தோற்றமும், ஏற்றமும்

Dr P.S.S. கிருஸ்ணமூர்த்தி

**முருகனே செந்தில் முதல்வனே**
**மாயோன் மருகனே**
**ஈசன் மகனே ஒரு கைமுகன்**
**தம்பியே**
**நின்னுடைய தண்டைக்கால்**
**எப்பொழுதும்**
**நம்பியே கைதொழுவேன் நான்.**

தமிழினம் உலகில் மூத்த இனம் தொன்மையும் மேன்மையும் கொண்ட இனம். உலகம் தோன்றிய காலம் தொட்டே மேம்பட்டு நின்ற மேன்மைக்குரிய இனமாகும்.

இந்தஉலகம் தொடக்க காலத்தில் கற்பரப்பாக இருந்து பிறகே மண் பாங்காக மாறியது என்பது அறிஞர்களின் ஆய்வு முடிவாகும். இதனையே முதற் காலம் என்பதை (Stone Age) கற்காலம் என்றும் கற்கால மனிதன் என்றும் கூறி வருகின்றனர்.

இதனையே நம் தமிழ் இலக்கியம் அழகாகக் குறிப்பிடுகின்றது. தமிழர்கள் எப்போது தோன்றினார்கள் என்றால்

**கல்தோன்றி மன்தோன்றாக்காலத்தே**
**வாளொடு**
**முற்றோன்றி மூத்த குடி**

என்ற புறப் பொருள் வெண்பா மாலை பேசுகின்றது.

எனவே உலகில் முன்தோன்றிய கல்பரப்பாகிய நிலப்பகுதியை நம் தமிழர்கள் குறிஞ்சி என பெயரிட்டு அழைத்தார்கள்

**பெயர் விளக்கம்**

மலையைச் சார்ந்த குறிஞ்சியை முன்வைத்தே நிலப்பெரும்பிரிவைத் தொல்காப்பியம் பேசும். அதில் சேயோன் மேயமை வரை உலகம் என்று பேசப்படும் குறிஞ்சி நில மக்கள் போற்றிய தெய்வமே முருகன் ஆவான் தொன்மையான மக்கள் தமிழர்கள் அவர்களின் தொன்மையான வழிபாடு முருக வழிபாடாகும் ஏனைய முல்லை, நெய்தல், மருதம், பாலை போன்ற நிலப்பரப்பைவிட எழிலும் ஏற்றமும் கொண்ட நிலப்பகுதியே குறிஞ்சி நிலப் பகுதியாகும்.

எழில் கொண்ட மலைத் தோற்றம் மலையில் உறங்கும் முகில் கூட்டம் அதனைக் கண்டாடும் மயில் கூட்டம் மலைகளோடு சிறு மலைகளாக இலங்கும் யானைகள் இப்படி விளங்கும் குறிஞ்சி மக்களின் வழிபாட்டுத் தெய்வம் அழகான அணி மயில்மீதில் அமர்ந்திருப்பது வியப்பில்லை அல்லவா?

அழகுத் தெய்வமாகவும் இளமைத் தெய்வமாகவும் காவல் தெய்வமாகவும் விளங்கும் முருகப் பெருமானின் தோற்றம் இணை துணையற்ற ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது

**தொன்மையும் வழிபாடும்**

முருகன் என்ற சொல்லே முற்றிலும் இனிய, உயர்ந்த தமிழ்ச் சொல்லாகும். இச்சொல்லிற்கு வெவ்வேறு விளக்கங்கள் வழங்கப் படுகின்றன. இளமை நிறைந்தவன் என்றும் அழகு நிறைந்தவன் என்றும் மணம்கமழ் மேனியன் என்றும் தெய்வ நலத்தவன் என்றும் முருகனைப் போற்றி வருவது குறிப்பிடத்தக்கதாம். முருகு என்ற சொல்லில் முருகு என்பதே பகுதியாகும் அச்சொல் அன் என்ற ஆண்பால் ஒருமை விகுதியை பெற்று முருகன் என ஆயிற்று.

மகர மெய்யில் உகர உயிர் மருவி–மு
ரகர மெய்யில் உகர உயிர் மருவி-ரு
ககர மெய்யில் உகர உயிர் மருவி–கு
என்றாயிற்றாம். மூன்று உகர உயிர்கள் அமைந்ததால் முருகு என்ற சொல் ஒப்பற்ற பைந்தமிழ்ச் சொல்லாகவே விளங்கி வருகிறது. எனவேதான் பத்துப்பாட்டில் முருகன் புகழை முன்வைத்தே திருமுருகாற்றுப்படையைப் போற்றி வருவதாயினர்.

முருகனே முதற் பொருளாக முதற்கடவுளாக இருந்து மெய்யடியார்களுக்கு இன்பம் அருளி வருகின்றான். முருகனே குறிஞ்சிக்கு அதிபதியாக மலைநாயகனாக இன்றுவரை இருந்து வருகின்றான். எனவே அவன் சங்க இலக்கியத்தில் அரும்பெறல் மரபின்
பெரும் பெயர் மருகனாகவே
இருந்து வருகின்றான்
முழுமுதற்கடவுளாகிய ஆதிபரம் பொருள் சிவபெருமான். ஆறுமுகம் கொண்டு தோன்றி அருள்புரிவதானோன்.

**ஊரிலான் குணங்குறியிலான்**
**செயலிலான் உரைக்கும்**
**பேரிலான் ஒரு முன்னிலான்**
**பின்னிலான் பிறிதோர்**
**சாரிலான் வரல் போக்கிலான்**
**மேலிலான் தனக்கு**
**நேரிலான் உயிர்க்கடவுளாய்**

**என்னுளே நின்றான்**

என்று கச்சியப்பர் அந்த சிவபெரும் பரம்பொருள் விளங்குவதானார். அந்த ஒப்புயர்வற்ற பரம்பொருள் ஆன ஆறுமுகமாக முருகப் பெருமானாக உலகில் தோன்றிற்று என்பதை விளக்க வந்த– கச்சியப்பர்

தன்னை நேரிலாப் பரம் பொருள்
தனி யுருக் கொண்டது
என்ன காரணம் என்றியேல்
ஐந்தொழில் இயற்றி
முன்னை ஆருயிர்ப் பாசங்கள்
முழுவதும் அகற்றிப்
பின்னை வீடு பேறருளும்
நினைந்த பேரருளே!

சிவனே முருகன்

ஐம்முகம் கொண்ட அருட்பெரும் சிவமாகிய சிவபெருமான் அதாவது தேவர்கள் குறை நீக்கமும் சூரபதுமனை திருத்தி ஆட்கொள் ளவும் ஆறுமுகமாகத் தோன்றலா னான்

**அந்திக்கு நிகர் மெய்யண்ணல்**
**அருள்புரிந்து அறிஞராயோர்**
**சிந்திக்கும் தனது தொல்லைத்**
**திருமுகம் ஆறுங் கொண்டான்**

என்பது கச்சியப்பரின் குறிப்பாகும். திருப்புகழ் தந்த அருணகிரியாரும் பழைய வடிவாகிய வேலா என்று திருப்புகழில் கூறுகின்றார். முருகன் என்ற பெயருக்கே ஆறு முகங்கள் மட்டுமன்றி ஆறு விளக்கங்களை நம் ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். அவை

**தெய்வத் தன்மை, இனிமை,**
**இளமை,**
**மணம், மகிழ்ச்சி, அழகு**
**என்பனவாம்**
**முருதுகள் இளமை நாற்றம்**
**முருகவேள் விழா வனப்பாம்**

என்று பிங்கல நிகண்டு பெருமையுடன் போற்றுகின்றது. இந்த ஆறுமுகத்தையே வட புலத்தார்கள் சண்முகன் என்று விவரிக்கலானார்கள்.

இந்த எழுதறிய ஆறுமுகத்தை அருணகிரியார் எழுதிய

ஆறுமுகமும் அணி நுதனும்
வயிரமிடை இட்டுச் சமைத்த
செஞ்சுட்டிக் கலன்களும் குங்க
நீள்பன
இரு கருணை விழி மலரும்
இலகும் இரு குழையும்
ரத்னக் குரம்பையும் பத்தம்
கரங்களும்
செம்பொன் நூலும்
மொழிபுகழும் உடைமணியும்
அரைவடமும் அடியினையும்
முத்துச் சதங்கையும் சித்ரச்
சிகண்டியும் செங்கைவேலும்
முழுதும் அழகிய குமரா

என்று விளக்குவதில் அமையாது

ஆதி அருணாசலமாகிய தெய்வமே சிவனே அவன் என் விளக்குகின்றார். கந்த புராணத்தில்

ஆதலின் நமது சக்தி அறுமுகன்
அவனும் யாமும்
பேதகம் அன்றால் நம்போல் பிரிவிலன்
யாண்டும் நின்று
எதமில் குழவி போல்வான்
யாவையும் துறந்தான்
போதமும் அழிவில் வீடும்
போற்றினர்க்கருள வல்லான்
ஈசனே அவன் ஆடலால் மதுவை
ஆயினன் காண்
ஆசிலா அவன் அறுமுகத்
துண்மையால் அறிநீ
பேசில் ஆங்கவன் பரனோடும் பேதக
மல்லன்
தேசுலா அகல்மணியிடை கதிர்வரும்
திறம்போல

என்ற பாடல்கள் இந்தப் பேருண் மையைப் பெருமையுடன் விளக்கக் காணலாம். எனவே முருகசமயம் என்பதும்கூட சரவணச் சமயம் என்பதைவிட சிவசமயம் என்பதே முற்றிலும் பொருந்தும்.

சிவசமய அறு முகவ
திருவேரகத்தில் உறைபெருமானே

என்பதும் அருணகிரியாரின் வாக்கே ஆகும். எனவே பேதகமற்ற பெரும்பரம்பொருளே நம் முருகப் பெருமான் ஆவான்

ஏற்றமும் எழிலும்

குறைவிலா கருணையால் குவல யத்தை ஆட்கொள்ளும் கந்தப் பெருமான் ஏற்றமும் எழிலும் கொண்ட இணைதுணை அற்ற தெய்வமாகவே அன்று முதல் இன்றுவரை போற்றப்பட்டு வரு கின்றான். அறுமுகன் நெறியே அன்பு நெறியாக விளக்கப்பட் டுள்ளது.

தெய்வம் சான்ற திறன்விளங்கு
உருவின்
வான்தோய் நிவப்பின் தானவன்
செய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப்
பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம்
காட்டி

அருளுகின்ற முருகப் பெருமானின் ஏற்றமிக்க எழில் நலத்தை ஆற்றுப்படையில் நக்கீரர் அழகுபடி விளக்கியுள்ளார். அன்புருவான அறுமுகச் செவ் வேளை அன்பு வழியில்தான் அடைய முடியும்.

முருகப் பெருமான் எவ்வுருவில் ஏற்றங்கொண்டான் என்பதைச் சொல்லவந்த கச்சியப்பவர் கரு ணையின் உருவே கந்தன் என்பதானார்.

அருவமும் உருவமாகி அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்
பிரம்மனாய் நின்ற போதில்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்ட
ஒரு திருமுருகன் வந்தாங்
குதித்தனன் உலகம் உய்ய

பகை கொண்டு உலகிற்கு துன்பம் நல்கும் தீயசக்திகளை வீழ்த்தவே இறைவனின் வருகை நிகழ்கின்றது. இவ்வகையில் முருகப்பெருமானுக்கு எதிர் நிலை பகைவனாக நின்றவன்

சூரபதுமன் ஆவான். இவன் ஆற்றல்கள்யாவும் சிவபெருமான் வழங்கியது. இதனால் இவர் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு அதிபதியாகவும் நூற்றெட்டு யுகங்க ளுக்கு அழியாத வரம் பெற்றான்

என் சக்தியிலா உனக்கு அழிவில்லை என்று முக்கண்ணன் மொழிந்தவண்ணம் சூரனின் கொடுமைகளை மாற்ற சிவசக்தி வேளாக சிவகுருவாக சிவவடி வேலாக தோன்றலானார்.

முருகப் பெருமான் சூரபதுமனை போருக்கழைத்தபோதும் போதம் அருளினார் என்றாலும் முனைப் பாகிய ஆணவ வடிவத்தில்நின்ற சூரனை நெறிவழிபடுத்த ஆயுதங்களைவிட அன்பையே பயன்படுத்தினார். எனவேதான் முருகப் பெருமானைக் காணாமல் அவனை இழித்தும் பழித்தும் பேசிய கொடியனாகிய சூரபன்மன் அடியவனாகி நின்று ஆறுமுக வேளை அஞ்சலி செய்வதானான். அகமுருகி நின்று போற்றி வழிபட்டு புளகமுறலானான்

ஆயிரம் கோடி காமர் அழகெல்லாம்
திரண்டொன்றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலாமாம் சரணந்தன்னில்
தூய நல்எழிலுக் காற்றா என்றிடில்
இனைய தொல்வோன்
மாயிரு வடிவிற்கெல்லாம் உவ
மையில் வகுக்கவல்லார்

என்று கந்தவேலின் காணறிய பேரழகில் களித்தனன் அதன் பயன் அவன் செருக்கும் சினமும் சேர்ந்தழிந்தன. அதன் வெளிப் பாட்டை அவன் வாக்காகவே காணலாம்

போயின அகந்தையோதம்
புகுந்தன வலத்த தான
தூயதோர் கண்ணும் தோளும்
துடித்தன புவன மெங்கும்
மேயின பொருள்கள் முற்றும்
வெளிப்படுகின்ற விண்ணோர்
நாயகன் வடிவங் கண்டேன்
நற்றவப் பயனிதன்றோ?

என்று தன்னிடமிருந்த தீய பண்புகள் அனைத்தையும் அழித்துக் கொண்ட நிலையில் தூயவனாகி நின்றான் அத்தகைய பரிபக்குவ நிலையை பகைவனுக்கு அருளுதல் என்பது இயலா நிலையாகும் வெறுப்பும் பகைமையும் மேவி நிற்கின்ற போர்க்களத்தை இத்தகு நிலையால் புனிதப்படுத்திய தெய்வம் முருகன் ஒருனே ஆவான். தீமைக்குத் தண்டனை கொலை என்பதும் அழித்தல் என்பதுவே உலகில் கால்கொண்ட கருத்தாக இருக்கும்போது கந்தவேள் ஒரு வனே கருணையில் எதிரியைக் காத்தருளுகின்றான்

இதனையே வேறு வகையில் பார்ப் போமா?

இராமாயணத்தில் இராம. இராவணன் போர்

பாகவதத்தில் கண்ணன். கம்சன் போர்

கந்தபுராணத்தில் கந்தன் சூரன் போர் இதில்

இராமாயணத்தில் இராமன் இரா வணனை அழித்தான். அவனது ஆணவத்தையும் அழித்தான். பாக வதத்தில் கண்ணன் கம்சனையும். கம்சனது ஆணவத்தையும் அழி த்தான். ஆனால் நமது கந்தனோ, சூரனை அழிக்காமல் சூரனது ஆணவத்தை மட்டும் அழித்து சூரனை தனக்கு மயில் வாகனமாகவும், சேவல் கொடி யாகவும் ஆக்கிக்கொண்டு கருணையைச் செய்தான் ஆகவே இதனை சூரஸம்காரம் என்கிறோம். வதம் என்கின்ற வார்த்தைக்கும். ஸம்காரம் என்கிற வார்த்தைக்கும் பொருள் வேறுபாடு உண்டு.

இராவண வதம் உண்டு இராவண சம்காரம் கிடையாது. கம்ச வதம் உண்டு கம்ச சம்ஹாரம் கிடையாது. சூரஸம்ஹாரம் உண்டு சூரன் வதம் கிடையாது. வதம் என்று சொன்னால் ஆணவத்தையும் அழித்து ஆணவத்தோடுகூடி யவனையும் அழிப்பது அந்த வகையைச் சார்ந்தது இராவணன் கம்சன் போன்றோரின் முடிவுகள். ஆனால் சூரனை முருகப் பெருமான் சம்காரம் செய்தான் என்கிறோம் அதாவது. சூரனை அழிக்காமல் ஆணவத்தை மட்டும் அழித்தது அவனது கருணையைக் காட்டு கிறது. சூரனோடு போர் செய்த செயல் கடுமையானது. ஆனால் வாகனமாக ஆக்கிக்கொண்டு கொடியாகவும் செய்து கொண்ட செயல் நன்மையானது. செயல் கடுமை முடிவு நன்மை ஆகவே இது மறக் கருணை.

இராமன் கோயிலுக்குச் செல்கிற வர்கள் இராவணனை வணங்கு வதில்லை கண்ணன் கோவிலில் கம்சனை வணங்குவதில்லை. குமரன் கோயிலுக்குச் செல்கிறவர்கள் குமரனை வணங்குவதோடு குமரனது வாகனம் மயில் அதாவது சூரனையும் வணங்குகிறார்கள். இத்தகைய உயர்வை தன்னை எதிர்த்தவனுக்கும் வழங்கியது தன்னிகரற்ற கருணை அல்லவா? சூரபதுமனை ஆட்கொண்ட முறையால் முருகப்பெருமானின் முழுக் கருணை நலத்தையும் நாம் நன்கு காணமுடியும் இதனை உணர்த்தவே கச்சியப்பர்

தீயவைபுரிந்தாரேனும் குமரவேள்
திருமுன் உற்றார்
தூயவராகி மேவைத் தொல்கதி
அடைவர் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ –

என்று கச்சியப்பர் வினா எழுப்புவதன் நோக்கமும் இதுவே ஆகும். அருளையும் அன்பையும் வான மழை என வழங்குகின்ற

வள்ளலாகிய முருகப் பெருமானின் ஏற்றமிக்க இந்தப் பெருநிலைக் காட்சியைப் பேருலகில் காண்பதோ அறிதாம்.

இறைவனிடம் நாம் செலுத்தும் அன்பையே பக்தி என்கின்றோம். இறைவன் அடியார்க்கு அன்பு செய்வதையும் செலுத்துவதையும் உலகின் கண் நாம் கண்டாலும் பகையாகிய ஒருவனுக்கு பாலன் என்றும் சிறுவன் என்றும் பழித்த ஒருவனுக்கு அன்பு செய்து ஆட்கொண்ட செவ்வேள் பரமனின் கருணைத்திறம் அவனை மிக்குயர்த்தி வைத்துள்ளது

இதனையே நக்கீரர் பெருமான் இன்றைய உலகிற்கு நன்குணர்த்த வேண்டி திருமுருகாற்றுப்படையில் நலம்புரிகொள்கை என நவில்வதானார். உலகிற்கும் எல்லாரும் நலம்புரிய வேண்டுமாயின் அதற்கு அடிப்படையாக வேண்டும் பணியே அன்பாகும்

வேற்றுமையைக் காணா வியனன்பில் இவ்வுலகம்
ஏற்றமுடன் கொள்ளும் எழில்
அன்பதுவே வையகமாகும்.
அன்பதுவே வானகமாம்
அன்பதுவே எல்லாம் ஆம்: இங்கு

என்பதற்கேற்ப முருகப் பெருமான் கலகத்தை அன்பால் ஆட்கொண்டு அகங்கவர்கின்றார். அன்பின் வடிவாகவே உண்மையில் அவர் உயிர்களை ஆட்கொள்ளுகின்றார். அவனே அன்பாம். அவனே அருளாம் எனவே அவனிடத்தில் அவைகளையே வேண்டித் தொழுது அன்பர்கள் இம்மை-மறுமை நலத்தை எய்துகின்றார்கள். இதனை பரிபாடல் என்ற நூல் அழகாக உணர்த்துகின்றது. முருகப் பெருமானே அன்பின் வடிவாகவும் அருளின் வடிவாகவும் அவனிடம் அவனிடம் அவைகளையே வேண்டி நின்றார்கள்

. . . யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பா
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதாராயே
-பரிபாடல் 5-

முருகப் பெருமான் அன்பின் கடலாக அருள் மழை பெய்து உலகை ஆட்கொள்ளும் தனிப்பெரும் தெய்வமாக விளங்குகின்ற ஏற்றத்தைக் கருதியே வாணர்கள்

.

. . . சேவலங் கொடியோன் காப்ப
ஏமவைகல் எய்தின்றால் உலகே

என்று போற்றிப் புகழ்வதாயினர்.

புன்னெறி அமனில சென்று அழியும் போக்கினை
விலக்கிவைத்து நன்னெறியருளும் கந்தவேள்
அன்பின் திறனையும் அருள்வ ளத்தையும் எண்ணியே

அவனுடைய அருள் நலத்திற்கு இணை இல்லை என்பதால்

ஒருதிருமுருகன்

என்றே கூறுவதாயினர்

முருகப்பெருமானின் கொள்கையும் குணமும் அன்பும் அருளுமாம் இதனையே

நின்குணம் எதிர் கொண்டோர்
அறங் கொண்டோர்

அறவாழ்வினர் என்போரும் அன்பு வாழ்வினர் என்போரும் அறுமுகச் செல்வனின் நலம்புரி கொள்கையில் நடப் போராகின்றார்.

அருளின் வழி அன்பின் வழி இவ்வுலகம் இயங்க தோன்றியவன் முருகன். தோற்றம் என்ற சொல் தோன்று: அம் தோற்றம் தோன்றுதல் என்ற வகையில் முருகப் பெருமான் தோற்றமும் ஏற்றமும். உலகிற்கு நலம்புரியும் கொள்கையில் நிறைவு பெறுதலால் அன்புக் கடவுளாய் ஏற்றங் கொண்டு எழில் கொண்டு முருகப் பெருமான் மூவுலகங் கவர்ந்து நிற்கின்றான்.

*******

# எப்படி மறப்போம்!



நினைக்கும் போதெல்லாம் மனம் அழுகின்றது. சிரித்த முகமும் சிந்தனை நிறைந்த பார்வையும் கொண்ட திரு இரத்தினசி ங்கம் அவர்கள் மறைந்தமை சேவை உள்ளம் கொண்ட எல்லோருக்கும் ஒரு பேரிழப்புத்தான். மறைந்து ஓராண்டாகியும் அவரோடு கதைத்த காலங்கள் நேற்றுப்போல் இருக்கின்றன. எப்படி மறப்பது? எதனை மறப்பது? அவர் பெயர் என்றென்றும் நிலைத்துவாழ வேண்டும். இறைவா! இதனை மட்டும் எங்களுக்காக அவருக்குச் செய்துவிடு.

ஓம் நமசிவாய

– ஆசிரியர்

# பிச்சர் நச்சரவர்

தில்லைக்கு இறைவன், பிச்சாடனர் வடிவாக யானையின் மேல் இருந்து மங்கல வாத்தியங்கள் முழங்க அரச மரியாதைகளுடன் வீதிவலம் வருகின்றார். அப்போது அங்கே வந்த காளமேகப்புலவர் வீதிவலம் வரும் பிச்சாடனரை நன்கு இரசித்துப் பார்த்தார். பாடல் முகிழ்ந்தது.

நச்சரவம் பூண்ட தில்லை நாதரே! தேவரீர்!!
பிச்சை எழுத்துண்ணப் புறப்பட்டும் – உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்கடல் போற்றான் முழங்கும்
மேளமேன் ராயாங்கமேன்

நஞ்சுள்ள பாம்பை மாலையாக அணிந்த தில்லை நாதனே எம்பெருமானே! பிச்சை எடுத்து உண்ணத் தானே இப்போது வீதிவலம் புறப்பட்டிருக்கின்றீர், அதற்கு எக்காளம் ஏன்? யானை ஏன்? முழ்ககம் செய்யும் மேளம் ஏன்? குடை, ஆலவட்டம், சாமரை போன்ற அரச மரியாதைகள் ஏன் என வினவுகின்றார்.

பிச்சைக்காரனுக்கு இந்த ஆர்ப் பாட்டங்கள் தேவை தானோ என்ற கேள்வியுடன், நச்சுப்பாம்பை அணிந்து கொண்டு தில்லைநாதனே, பிச்சைக்குப் போனால் எத்தனை பேர் பிச்சை இடுவார்கள் என்ற கேலியும் கலந்திருக்கின்றது.

காளமேகப்புலவர் போலவே எமது சைவப்பெரியாரும் பிச்சாடன வடிவை நகைச்சுவையுடனே அணுகியிருக்கிறார்கள்

மாணிக்கவாசகர் திருச்சாழலில்
அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று
நண்ணன் அது ஏன்னேடி

பொன்னம்பலத்தில் கூத்தாடுகின்றார். ஆனால் உண்பதற்கு பிச்சைக்கு திரிகின்றார் அத்தகைய சிவனை தலைவன் என்று அணுகுவது பொருந்துமா? எனக் கேட்கிறார்.

நாவுக்கரசரும் தேவாரத்தில்
கடிகமழ் கொன்றையானே
கபாலங்கை ஏந்தினானே

தலையிலோ நறுமணங்கமழும் கொன்றைமாலை சூடி கையிலோ கபாலம் ஏந்தித் திரியும் வினோதனை

தலையே நீ வணங்காய்
தலைமாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேரும் தலைவனை
தலையே நீ வணங்காய்

எனத் தனது தலைக்குக் கட்டளையும் போடுகின்றார்.

தலை ஓட்டுமாலையை தலைக்கு அணிந்து கொண்டு தலையோட்டை கையில் ஏந்தி பிச்சைக்கு வரும் தலைவன், என்னே தலைவனின் திருக்கோலம். இப்படி பிச்சைக்கு வருபவனுக்கு யார் பிச்சை போடுவார்கள்?

சம்பந்தரும்
ஆடல் மாமதி உடையார்
ஆயின பாரிடம் சூழ
வாடல் வெண்தலையேந்தி
வையம் இடுபலிக்கு உழல்வார்

அழகிய சந்திரனை உடையவர். பூதங்கள் சூழ உலர்ந்த வெண்தலையோட்டை கையில் ஏந்தி உலகோர் இடும் பிச்சைக்கு அலைந்து திரிபவர் என்றும்

ஏழைமார் கடைதோறும் இடுபலிக்கு என்று
கூழை வாள் அரவு ஆட்டும் பிரான்

பெண்களின் வீட்டு வாசலில் பிச்சைக்காக குறுகிய கொடும் பாம்பை ஆட்டும் பெருமான் எனவும் நகைச்சுவை இழையோட பாடியுள்ளார்

இவர்களுக்கு எல்லாம் ஒருபடி மேலே சென்று சுந்தரர்

பிச்சை உண்ணி உலகங்களை எல்லாம் உடையான்
எனவும்
உணங்கல் தலையில் பலி கொண்டலென்ன
உலகங்கள் எல்லாம் உடையீர் உரையீர்.

எனக் கூறி நகைத்து (உணங்கல்– ஊண் உலர்ந்து) கருத்த நஞ்சை உண்டு இருண்ட கழுத்தனே! தலையோட்டை கையில் எடுத்துக் கொண்டு ஊரெல்லாம் திரிந்து என்ன பெறப்போகிறீர்? பாம்பு தானா உமது முத்துவடம். காட்டில் வாழும் அழகரே! உமது கையில் ஒரு பாம்பு, அரையில் ஒரு பாம்பு, கழுத்தில் ஒரு பாம்பு, அவை ஊரும் உமது உடம்பு முழுவதும் திருநீறு பூசியுள்ளீர், அத்துடன் வேதம் ஓதுகிறீர். நளினமாக நின்றுகொண்டு யான் திருப்பைஞ்ஞீலியில் உள்ளவன் பிச்சை இடுங்கள் என கீதம் இசைக்கின்றீர். பிச்சை எடுக்க இது என்ன கோலம்?

கையொர் பாம்பு அரை ஆர்த்தொர் பாம்பு
கழுத்தோர் பாம்பவை பின்பு தாழ்
மெய்யெலாம் பொடிக் கொண்டு பூசுதிர்
வேதம் ஓதுதிர் கீதமும்
பையவே விடம் காகநின்று பைஞ்
ஞீலியேன் என்றீர் அடிகள் நீர்
ஐயம் ஏற்கும் இது என்கொவோ சொலும்
ஆரணீய விடங்கரே

எனக் கேட்டதுடன் நிற்காமல் அவரது நண்பன் என்ற முறையில் இறைவனுக்கு

பலிக்கு நீர் வரும்போது நுங்கையில் பாம்பு வேண்டா
என்று புத்திமதியும் சொல்லியிருக்கின்றார்.

இவர்கள் மட்டுமல்ல கருவூர்தேவரும் தமது திருவிசைப்பாவில்

ஐந்தலை நாகம் மேகலை அசையா
அகந்தொறும் பலி திரி அடிகள்

எனப்பாடி திருஞானசம்பந்தர் இறைவனுக்கு சூட்டிய பிச்சர் நச்சரவர் (நச்சுப்பாம்பு பிச்சைக்காரர்) எனும் நாமத்தை தியானிக்கிறார்.

பின்குறிப்பு:–

பிச்சாடனர் வடிவமும், கங்காள வடிவமும் பிச்சை எடுக்கும் வடிவங்களே. இவை இரண்டிற்கும் இடையில் சிறிய வேறுபாடு உண்டு. பிச்சாடனர் நிர்வாணமாக இருப்பார். கங்காளர் கையில் கங்காள தண்டத்தை (கை, கால் எலும்புகளை கோர்த்து வைத்திருக்கும் தடி) வைத்திருப்பார்.

**–தமிழரசி–**

# ஞானக் கவிதைகளும் மோனச் சிலைகளும்
## கொந்தணவும் மலர் கொடுத்தான்



பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
எனச் செந்தமிழால் தமிழ் குமரனை விழிக்கும் ஔவை இறைவரோ தொண்டர்தம் பெருமை சாற்றவும் பெரிதே என தொண்டர்களின் பெருமையை பெருமைப்படுத்துகின்றார்.
இத்தகைய தொண்டர்களின் தலைவனாகும் பெருமை பெற்று, பெருமைக்கு பெருமை சேர்க்கின்றான் விசாரசருமர் என்னும் சிறுவன். இவன் சோழநாட்டின் மண்ணியாற்றங் கரையிலுள்ள சேய்ஞலூரில் எச்சதத்தன், பவித்திரை என்போருக்கு மகனாக அவதரித்தான். இவன் மண்ணியாற்றங்கரை மணலால் சிவலிங்கம் அமைத்து, தான் மேய்க்கும் பசுக்களின் பாலால் அச்சிவலிங்கத்தை திருமுழுக்காட்டி வணங்கி வந்தான்.

இதனை அறிந்த விசாரசருமரின் தந்தை அவ்விடம் வந்தார். மகன் பசுப்பாலை மணலில் ஊற்றுவதைக் கண்டு கோபங்கொண்டு அடித்தார். அத்துடன் நில்லாது பால் குடத்தை காலால் உதைந்தார். தன் சிவபூசைக்கு இடையூறு விளைவித்த தந்தையின் காலை விசாரசருமர் மழுவால் வெட்டினார். இறைவன்வெளிப்பட்டு

**நம் பொருட்டால் ஈன்றதாதை வீழ**
**எறிந்தாய் அடுத்த தாதை இனி உனக்கு நாம். . .**

என விசாரசருமரை தன் மகனாக ஏற்றுக்கொண்டு, அவருக்கு சண்டிகேசுவர பதவி அளித்தமையை சண்டேசுவர நாயனார் புராணம் கூறுகின்றது.
நாம் உண்டகலமும் உடுப்பனவுஞ் சூடுவனவும் உனக்காகச் சண்டீசனுமாம் பதந்தந்தோம் என்று இறைவன் தன் சொத்துக்கள் யாவற்றையும் விசாரசருமருக்குக் கொடுத்தான். இதனால் கோயில் சொத்துக்கள் கூட சண்டீகேசுவரர் பெயரில் வாங்கப்பட்டும், விற்கப்பட்டும் வந்தமைக்கு கல்வெட்டுச் சான்றுகள் கூட உள்ளன. இது சண்டீசப் பெருவிலை என அழைக்கப்பட்டது. இதனாலேயே எல்லாச் சிவாலயங்களிலும் சண்டிகேசுவரருக்கு எனத் தனித் திருமுன் அமைக்கப்படுகின்றன.
அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராக எண்ணப்படும் இவர் பெருமையை சமயகுரவர் நால்வரும் போற்றிப் பாடியுள்ளனர். மேலே எழுதிய விசாரசருமர் கதையை மிக நளினமாக நான்கு அடிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார் சம்பந்தர்.
வந்த மணலால் இலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டும் சிந்தை செய்வோன் தன்கருமந் தேர்ந்து சிதைப்பான் வருமத் தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீசனென்றருளிக் கொந்தணவும் மலர் கொடுத்தான் கோளிலியெம் பெருமானே
சண்டீச பதங்கொடுத்து தன் தலைக் கண்ணியான கொன்றை மலர்மாலையையும் இறைவன் சூடினான் என்னும் ஞான சம்பந்தரின் கூற்றை நாம் நேரில் காண்பதற்கு சோமீசுவரர் கோயிலுக்கு செல்லவேண்டும் இந்த ஞானக் கவிதைக்கு ஏற்ற மோனச்சிலை அங்கு இருக்கின்றது.
இந்தச் சிற்பத்தில் உண்மையான பக்தனின் நிலை எப்படி இருக்க வேண்டும் என்பதனை சண்டிகேசுவர் முகத்தில் காணப்படும் பக்தி கலந்த அடக்கமும், இருகரம் கூப்பி இருக்கு நிலையும் எடுத்துக் காட்டுகின்றன. இறைவன் பின்கரமிரண்டிலும் மான், மழு ஏந்தி இருக்க முன்கரமிரண்டால் சண்டிகேசுவரருக்கு மாலை அணிவிக்கின்றார். இறைவனின் அருள்பாலிக்கும் பாங்கு இதில் தெரிகின்றது. அன்னையோ சாந்தசொரூபியாக இருந்து தன் குழந்தையின் புகழில் பெருமை கொள்ளும் ஒரு தாயின் நிலையில் இருக்கின்றாள். இறைவனதும், சண்டிகேசுவரரினதும் மூக்கு சிதைக்கப்பட்டிருப்பினும் உணர்வுகள் முகங்களில் பிரதிபலிக்கின்றன. மலர் மாலையில் உள்ள ஒவ்வொரு மலரின் இதழின் அமைப்பிலும் கூட சிற்பி தன் கைவண்ணத்தைக் காட்டத் தவறவில்லை. பார்க்கப்பார்க்கப் பரவசமூட்டும் இந்த மோனச் சிலையை

சிற்பி, சம்பந்தரின் தேவாரத்தை பாடி இரசித்தே படைத்திருப்பான்போல் தோன்றுகின்றது. ஏனெனில் இச்சிலைக்கு அருகே உள்ள சுவரில் சண்டேசுவர் பூசை செய்வது தந்தையின் காலை மழுவால் வெட்டுவன போன்ற சிற்பங்களும் இருக்கின்றன.

ஞானசம்பந்தர் மட்டுமல்ல சுந்தரரும் சண்டிக்கு உன் சடைமிசை மலர் அருள் செயக்ககண்டு தான் சிவனை வணங்குவதாகக் கூறுகின்றார்.

**தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்**
**சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டுஞ்**
**சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்**
**பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம்**

என மணிவாசகரும் மணித்தமிழால் பாடிப் பரவசப்படுகின்றார் பி.கு. கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழீசுவர் கோயிலில் இச்சிலை இருக்கின்றது.

## பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றிய சைவ மாநாட்டு தீர்மானம்

சமயம் என்பது சமூகத்தின் வழிகாட்டி என்பதற்கிணங்க சைவ மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட இத்தீர்மானம் காலத்திற்கேற்ற ஒரு தீர்மானம் என்பதால் கலசமும் அதன் சமூகமும் மகிழ்வெய்துகின்றது. இத்தீர்மானத்தை நிறைவேற்றிய மகாநாட்டு ஏற்பாட்டாளர்களையும் தீர்மானத்தைக் கொண்டு வந்த அன்பர்களையும் இறைவன் என்றென்றும் வாழவைப்பான். தீர்மானம் வருமாறு:

பிரித்தானியாவிலுள்ள சைவக்கோயில்கள் மாதாமாதம் தமது வருமானத்திலே செலவுகள் போக மீதியின் கணிசமான தொகையை ஈழத்திலே அல்லலுறுகின்ற சைவக் குழந்தைகளுக்கு உதவுமுகமாகவும் இடிபாடுகளிடையே அகப்பட்டுப் பாதிக்கப்பட்ட சைவக் கோயில்களைத் தேவையான அளவோடு மட்டும் திருத்துவதற்கு உதவுமுகமாகவும் அனுப்புவதைக் கட்டாய கடமையாகக் கொண்டு, யாப்பிலே மாற்றத்தை ஏற்படுத்தி உறுதி செய்து நடைமுறைப்படுத்துமாறு வேண்டிக் கொள்கின்றது. இத்தீர்மானத்தை முன்மொழிந்தவர் திரு.கு. சிதம்பரப்பிள்ளை, வழி மொழிந்தவர் திரு.க.இராஜமனோகரன் ஆலயங்கள் இத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுதல் சாலச் சிறந்தது என்பது எம் எண்ணம்.

ஆசிரியர்

# ராஜ்குமார் பாரதியுடன் ஒரு செவ்வி

**சாலினி:** ***பாரதியார் தமது சங்கீத விஷயம் என்ற கட்டுரையிலே வரமுலொஸகி என்ற பட்டணம் சுப்பிரமணிய ஐயரின் பாடலில்— இசை சண்டைத்தாளம் போடுகின்றது எனக் குறிப்பட்டுள்ளார். இதனை விளக்க முடியுமா?***

ராஜ்குமார் பாரதி பாரதியின் கருத்து என்ன என்பது எனக்குப் புரிகிறது. எப்படி என்றால் தியாகராஜர் கீர்த்தனையில் நன்னுப்ரோவ நீகிந்த தாமசமா இந்தப் பாட்டின் கருத்துக்கும் இராகத்திற்கும் ஒரு உறவு இருக்கின்றது, கீர்த்தனையின் கருத்தை எடுத்துச் சொல்லக் கூடிய விதத்தில் அந்த ராகம் அமைந்திருக்க, அது தாளத்திற்கு ஏற்ப போகவேணும். என்னைக் காப்பாத்த உனக்கு இவ்வளவு நேரமா? அந்த ஒரு குணம் பட்டணம் சுப்பிரமணிய ஐயரின் பாடலில் இல்லை என்பது அவரது கூற்று.

**சாலினி:** ***இசைக் கலைஞர்கள் சங்கதிகளைப் பாடும் பொழுது பாடல்களின் கருத்துக்களை கொலை செய்கிறார்களே ஏன்?***

ராஜ்குமார் பாரதி இந்தக் கருத்துக் கொலை எந்த பாஷை என்றாலும் உண்டு. அப்போ என்ன சொல்ல வருகிறோம் என்பதற்கு என்ன முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்தது.

**சாலினி:** ***அதை இசைவல்லுனர்கள் புரிந்து கொண்டு பாடலாம் தானே?***

ராஜ்குமார் பாரதி ஆம். உங்களின் கருத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன்

**சாலினி:** ***ராகம் தாளம் பல்லவியில் தாளத்தை விதம் விதமாக இசைப்பது பற்றி கொஞ்சம் விளக்கம் கூறமுடியுமா?***

ராஜ்குமார் பாரதி எனது குருநாதர் டி வி கோபாலகிருஷ்ணன் கற்றுக் கொடுத்தது தான் அது சில சில சத்தங்களில் இருந்து தாளத்தை இசைக்கலாம். இயற்கையின் சத்தங்களைக் கேட்டு மனிதன் கற்றுக் கொண்டவையே அவை. உதாரணமாக மண்டுகத் தாளம் என்பது தவளையினது சத்தத்தை ஒத்தது. ம்மும் ம்மும் ம்மும் அந்த மாதிரி அஸ்வதானம் என்பது குதிரையின் நடையைப் போன்றது. தத்தர தத்தர தத்தர அந்தமாதிரி சக்கர தாளம் சுழன்று சுழன்று வரக்கூடியது. மந்தி தாளம் என்பது குரங்கு போல் தாவுவது. ஒரு ஸ்வரத்திலிருந்து இன்னொரு ஸ்வரத்திற்கு தாவுவது போல் சொல்வது. அப்புறம் வாத்தியத் தாளம் வாத்தியம்

போல் ஒலித்தல்– வீணைமாதிரி. அடுத்து கஜதாளம் இப்படிப் பலவிதமான தாளங்கள் இருக்கின்றன.

சாலினி நீங்கள் இந்த இசைத்துறையில் புகழ் அடைய யார் காரணம்?

ராஜ்குமார் பாரதி ஆண்டவன் எனது தாய் தந்தையரின் ஆசிகள்

***சாலினி: இங்கு கர்நாடக சங்கீதம் படிக்கும் தமிழ் குழந்தைகள் பாடல்களை ஆங்கிலத்தில் எழுதி படிப்பது பற்றி தங்கள் கருத்து என்ன?***

ராஜ்குமார் பாரதி எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது என்னவென்றால் இங்கு படிக்கக் கூடிய குழந்தைகள் தெலுங்கு சமஸ்கிருத பாடல்களைக் கூட மிக இலகுவாகக் கற்கிறார்கள். தமிழ்ப் பாடல்கள் வரவே மாட்டன் என்கிறது. இதற்கு காரணம் வீட்டில் தமிழ் பேசுவது கிடையாது என்பது என் சொந்த அபிப்பிராயம். வீட்டில் பெற்றோர்கள் தமிழில் பேசிவந்தால் வெளியில் சந்திக்கும் தமிழ் குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் தமிழில் பேச முடியும். அப்படிப் பேச பெற்றோர்கள் ஊக்குவித்தால் இந்த நிலை ஏற்படாது. அதாவது குழந்தைகளுக்கு தமிழை புகுத்த வேண்டும். எப்படி என்றால் தமிழ் எங்கள் தாய்மொழி, தமிழ் கலாச்சாரம் இப்படி என்று மெல்ல மெல்ல சொல்லி புரியவைத்து அவர்களை கற்பிக்க வேண்டும்

***சாலினி: இசை பயில்வோர் மொழியைக் கற்க வேண்டுமா?***

***ராஜ்குமார் பாரதி:*** ஆம் மொழி கற்க முடியாவிட்டாலும், படிக்கப்போகும் பாடல் என்ன கருத்தை கூறுகிறது என்பதை அறிந்து படித்தால்தான் பாடலை அனுபவித்து பாட முடியும்.

***சாலினி: நீங்கள் கூறவிரும்புவது ஏதாவது இருந்தால் கூறுங்கள்.***

ராஜ்குமார் பாரதி கர்நாடக இசையை பயில வரும் போது அரங்கேற்றம் என்ற ஒரு கட்டுக் கோப்பில் இல்லாமல் இசையை ஒரு வாழ்க்கை முறையாகப் பாவித்துப் பயின்றால் இசையால் பெரும்பயன் அடையலாம்.

**SHIPPING - AIR FREIGHT - TRAVEL**

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR AIRLANKA**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

**GLEN CARRIERS LIMITED**

**14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

**Tel: 0181 740 8379/ 0181 749 0595**

**Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G**

**BONDED WAREHOUSE**

**LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576**

சிவமயம்

# பேர்லினில் ஒரு விழா. ஆம் அதுவே
# அருள்மிகு மயூரபதி முருகனின் தேர்த்திருவிழா

அஞ்சுமுகந்தோன்றில் ஆறுமுகந்தோன்றும்
வெஞ்சமரில்
அஞ்சேல் என வேல் தோன்றும் — நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந்தோன்றும்
முருகா என்று ஓதுவார்முன்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் கந்தப்பெருமான் தன் அடியார்களைக் கருணை கூர்முகங்கொண்டு கனிய நோக்கி இனிய அருள் செய்வதில் ஈடு இணையற்றவன். நிலம் பெயர்ந்தாலும் புலம் பெயர்ந்தாலும், நிலைகுலையாமல் மக்களைத்தன் அருள் கொண்டு காக்கும் சிவவடிவேலன். வில்லை ஒடித்தவீரராமன் மருகனாய், வரிசிலைக்கையில் எடுத்தே விளையார்புரம் மூன்றெரித்தோன் மகனாய் தினைக் கொல்லைக் கொடிவள்ளி மணாளனாய், நல்லைப்பதிநாயகனாய் பேர்லின் எல்லையில் எல்லையில்லாத பேரருளாளனாய், வணங்கிடும் அடியார் தொல்லை எல்லாம் தீர்த்தருளும் கருணைக் கடலாய், கலைவடிவக் கவின் கோயில் கொண்ட அழகால் சிறந்தது பேர்லின் என்றால் அது, மிகையே இல்லை. அருளொடும், பொருளும் தரும் நமது அருள்மிகு மயூரபதி முருகப்பெருமானுக்கு, நிகழும் சுபமங்கள பிரமாதி வருடம் ஆடி மாதம்31 16.8.99 திங்கள் கிழமை தொடங்கி 11.9.99 வரை ஒவ்வொரு நாளும் காலையில் ஸ்நபன அபிஷேகமும், மாலையில் ஸ்ரீ ஷண்முகப்பெருமானுக்கு அலங்காரப் பூசையும், அதனைத் தொடர்ந்து ஆன்மீக பக்திச் சொற்பொழிவும் வெகு விமரிசையாக நடைபெறும்.

## திருவிழாத் தொடக்கம்

15.08.99 ஞாயிறு காலை அனுக்ஞை, விக்னேசுவரபூசை
ஸ்ரீ தனபூசை ஸ்ரீ கணபதி ஹோமம்
ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கு நவகலச அபிஷேகம்
தூபதீபத்திருவமுது பிராத்தனை, ஆராதனை

16.8.99 திங்கள் முதல் தினமும் ஸ்ரீ மருகப் பெருமானுக்கு ஸ்நபன அபிஷேகம்,
மாலை ஷண்முகப் பெருமானுக்கு அலங்காரப் பூஜை

08.9.99 புதன்கிழமை திருத்தேர் உற்சவம்
ஆறுமுகப் பெருமான் வள்ளிதெய்வயானையுடன் மயில் வாகனத்தில் திருவீதி உலா

09.9.99 வியாழக்கிழமை தீர்த்த உற்சவம்

10.9.99 வெள்ளிக்கிழமை திருக்கல்யாண உற்சவம்

11.9.99 சனிக்கிழமை ஸ்ரீ வைரவர் சாந்தி

திருவிழா நிறைவு:

குறிப்பு: திருத்தேர் விழா அன்று பக்தப்பெருமக்களால், திருவீதியுலா சமயம், தேவார திருவாசக பாராயணமும், திருப்புகழ் பஜனையும், நாதஸ்வர மேள வாத்ய கோஷத்துடன் காவடியாட்ட நிகழ்ச்சிகளும் நடைபெறும். ஈழம் நல்லூர்க்கந்தசுவாமி திருவிழாவை அனுசரித்து, அதே நாட்களில் இங்கு திருவிழா நடைபெறுவது தனிச்சிறப்பாகும்.

விழாக்காலங்களில் ஆன்மீக பக்திச்
சொற்பொழிவு நிகழ்த்துபவர்
சிவனருட் செல்வர்
திருச்சி.சிவஞானசுந்தரம் அவர்கள்

திரு விழாவை முன்னின்று நடத்துபவர்
ஆகமப் ரவீணர் தேவார இசை மணி
K.இராமநாத சிவாச்சாரியார் அவர்கள்

இங்ஙனம்

**பேர்லின் இந்துமஹாசபை** E.V

அருள்மிகு மயூரபதி ஆலய நிர்வாகம் 176 பேர்லின் 10961 ஜேர்மனி

# சிவசக்தியைக் கொண்டாடும் நவராத்திரி



அகண்டு விரிந்து பரந்துள்ள இந்த பூமியின் அனுதினம் பல்வேறு நிகழ்வுகள். அவற்றிற்கு பல்வேறு காரணங்கள். காரணமின்றி யும் பல காரிய ங்கள். இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக இருப்பது ஒரு சக்தி.

பிரம்மாவின் படைக்கும் சக்தி. விஷ்ணுவின் பரிபாலன சக்தி. ருத்திரனின் சக்கார சக்தி. சூரியனின் பிரகாசிக்கும் சக்தி. அக்னியின் தகிக்கும் சக்தி. வாயுவின் வீசும் சக்தி. பூமியின் சுமக்கும் சக்தி. இவை அனைத்திற்கும் ஆதி காரணமாக ஒரு சக்தி உண்டு. அவளே பராசக்தி. அவள் சக்தியாக வீற்றிருக்கின்றார். அவள் இல்லையேல் சிவமும் சவமாவார்.

புழு முதல் பிரம்மா வரை எந்த ஒரு உயிருக்கும் ஒரு காரியத்தை செய்ய முழயாத நிலை வரும் பொழுது அதற்கு சக்தி இல்லை என்றே கூறுவர். எங்கும் வியாபித்திருக்கும் அந்த சக்தியே பிரம்மம் எனப் போற்றப்படுகின்றது. அவளே மும் மூர்த்திகளாக விளங்குபவள். பற்பல பிரம்மாண்டங்களைப் படைத்துத் தனக்குள் ஒடுக்குபவள்.

**போகியாய் இருந்துயர்க்கு போகத்தைப் புரிதன் ஓரார்**
**யோகியாய் யோக மூர்த்தி உதவுதலும் ஓரார்**
**வேகியினாற் போல் செய்த வினையினை விட்டன் ஓரார்**
**ஊகியர மூடர் எல்லாம் உம் பரின் எருவன் என்பார்.**

**– சிவ ஞான சித்தியார்**

அருள் வடிவம். பொருள் செல்வம் இரண்டினையும் அளிப்பது அன்னையின் போக வடிவம். ஞானத்தை அளிப்பது அவளது யோக வடிவம். துன்பங்களைப் போக்குவது அவளது வேகம் என்கின்ற உக்ர வடிவம். பொருளையும் ஞானத்தையும் நமக்கு அளிக்கின்ற பராசக்தி நம்முடைய தாங்க முடியாத துன்பங்களை அகழிபோல் (துர்க்கம்) நின்று தடுக்கும் பொழுது துர்க்கை எனும் திரு நாமம் கொள்கின்றாள்.

**இதனையே ஸ்ரீ துர்க்கா ஸுக்தம்**
**ஜாதவேதஸே ஸுநவாமஸோம**
**மராதீ யதோ நிவஹாதிவேத**
**ஸந: பர்ஷதத துர்க்காணி விஸ்வா**
**நாவேவ ஸிந்தும் துரிதாத் யக்னி**

என்று சக்தியைப் பிரார்த்திக்கின்றது. நமக்கு ஏற்படுகின்ற சத்ரு, துக்க ங்களை நவர்த்தி செய்ய வேண்டுகின்றது. நமக்கு சத்ரு எங்கே இருக்கின்றான்? துக்கம் எவ்வாறு ஏற்படுகின்றது? இவை எல்லாம் எ ங்கோ வெளியிலிருந்து வருவதாக எண்ண வேண்டாம். நம்முடனேயே, நம் உள்ளத்திலேயே காமன்,மோகம், மதம், மாத்சாயம், அகந்தை, அசூயை இவ்வாறாக பல எத்ரிகள் இருக்கின்றார்கள்.

துக்கம் எப்படி ஏற்படுகின்றது? ஒரு பொருளைப் பார்த்ததும் ஏற்படுவது ஆசை. அது கிடைக்கவில்லை என்றால் ஏமாற்றம். அது கிடைத்து விட்டாலோ அதனை இழக்கும் போது நேர்கின்ற சோகம்.

இம்மாதிரியான சக்தி, துக்கங்களைப் போக்கிக் கொள்ள அம்பிகையின் அருள் வேண்டும்.

அதனை அவளிடம் இருந்து பெற வேண்டிய நிலை எப்பொழுது ஏற்படும். முதலில் அவளின் புகழ்பாட வேண்டும். அவளைப் போற்றி ஏத்த வேண்டும். பாடிப் பணிதல் வேண்டும். உடலை வருத்தி அவள் உள்ளத்தை குளிர்விக்க வேண்டும்.

இதற்காக நம் முன்னோர்கள் பல்வேறு விரத ங்களையும் திருநாட்களையும் வகுத்துத் தந்திருக்கின்றார்கள்.

இவற்றில் அன்னையைப் போற்றுமுகமாக உள்ளவற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது சாரதா நவராத்திரி திருவிழா ஆகும். அன்னை பார்வதிதேவியை வருடத்தில் சரத்குதுவில் புரட்டாசி மாதம் அமாவாசை தொடங்கி ஒன்பது நாட்கள் துர்க்கையாகவும், இலக்குமியாகவும், சரசுவதியாகவும், உருவகித்து உபசார ஆராதனைகள் செய்து பத்தாவது நாள் விஜய தசமியன்று சக்தியானவள் சிவத்துடன் ச ங்கமித்து சிவசக்தியாக ஸ்வ ரூபம் எடுக்கின்ற பொழுது அவ்வெற்றித் திருநாளை கொண்டாடும் முகமாக அஸ்திரப் பிரயோகங்கள் செய்து அன்று தொடங்கப்படும் எந்தவொரு காரியமும் வெற்றியாக முழுமையாக நிறைவேறும் என்பதற்காக பிள்ளைகளுக்கு அட்சர அப்பியாசம் (ஏடு துவக்கல்) செய்வித்து கொண்டாடுகின்றோம்.

அன்னையின் இந்த உன்னதத் திருவிழாவை அனுஷ்டிக்க பல்வேறு நூல்களில் பலமுறை ஏடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் விட இக் காலத்திற்கேற்ப அந்த ஒன்பது நாட்களும் கஞ்சி வடிக்காத சுத்த அன்னம் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே சாப்பிட்டு மாலை நேரங்களில் ஆலயங்களில் நடைபெறும் பூசை, வழிபாடுகளில் கலந்து வழிபட்டு 10வது நாளன்று நடைபெறும் கன்னி வாழை வெட்டுதல், ஆயுதப் பிரயோக விழாக்களில் கலந்து கொண்டு அன்னை பராசக்தியின் அருளைப் பெற்று உய்வோமாக.

கலைமகள் சீர்கேளாத செவி என்ன செவியே திருமகள்
திருவுருவம் காணாத கண்ணென்ன கண்ணே
மலைமகள் மாண்பினை ஏத்தாத நாவென்ன நாவே
கலை போற்றும் பராசக்தி பதம் போற்றுமணமே

**சைவத்திரு ஆர் சோமநாதசிவம் குருக்கள்.**

# ஆலயங்களின் மகத்தான சிறப்புக்கள்

## ஈலிங் நகரில்



ஆன்மாக்களாகிய நமக்கெல்லாம் தாயாக விளங்கக்கூடிய அன்னை ஆதிபராசக்தியானவள் பார்வதி பவானி தாக்ஷாயணி காளி துர்க்கை மாரி இப்படியாக பல்வேறு தோற்றங்களில் காட்சி தந்து அருள் புரிகின்றாள். வழிபடும் பக்தர்களுக்கு அரணுச் நின்று கஷ்டங்களை நெருங்கவிடாமல் தடுத்து துஷ்ட நிக்தஹ சிஷ்ட பரிபாலனம் செய்து அருளை வாரி வழங்குபவளே ஸ்ரீ துர்க்காதேவி.

இந்துமதம் செழித்தோங்கும் இடமெல்லாம் துர்க்கை வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. கைகளில் ஆயுத ங்களை ஏந்தி துன்பங்களை தடுப்பதோடு கருணை ததும்பும் கண்களால் இன்பமளிக்கும் தாய் வடிவமே துர்க்காதேவி.

இங்கிலாந்து நாட்டு இந்து சைவ ஆலயங்களில் துர்க்கா வழிபாடு முறையாக நடைபெறுகிறது. ஆயினும் ஈழத்து தெல்லிப்பளையைப் போன்று துர்க்கைக்கு தனி ஆலயம் இல்லாத குறையை நீக்க எண்ணி அன்னை வழிகாட்ட அன்பர்கள் சிலர் சேர்ந்து ஸ்ரீ கனகதுர்க்காதேவி ஆலயத்தை அமைத்துள்ளார்கள். முதலில் சித்ர ரூபத்திலும் பின்னர் ப ஞ்சலோக தேவி வடிவத்திலும் நடைபடிற்று வந்த விசேஷ பூஜைகளில் பலனாக புதிய ஆலயம் சிற்ப சாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்டு மிகச் சிறப்பாக மஹா கும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது.

ஆலய குருமார்களோடு லண்டன் வாழ் சிவாசாரிய பெருமக்கள் அனைவரையும் இணைத்து சிவாகம முறைப்படி வழுவாது இந்த கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.......

சிவஸ்ரீ ஸர்வேஸ்வரகுருக்கள் அவர்கள். ஸ்ரீதுர்க்கையா–கத்தில் ஒன்பது குண்டங்களும் பரிவார மூர்த்திகளுக்கு 6 குண்டங்களும் அமைக்கப்பட்டு 6 கால யாக பூஜைகள் வேத மந்திர ஒலியுடன் நடைபெற்றது. தேவார பண்ணிசை பாராயணமும் பஜனைப் பாடல்களும் நாதஸ்வர கான மழையும் பக்தர்களை பரவசப்படுத்தின. ஓம்சக்தி ஓம்சக்தி என்ற அன்னை நாமங்களை பக்தர்கள் உணர்ச்சியோடு உச்சரித்தபோது நாமே நம்மை மறந்து நின்றோம். மஹாபிஷேகம் முடிந்து மஹா தீபாராதனையின் போது திரை விலக்கப்பட்டவுடன் தேவீ துர்க்கா ஸ்ர்வாலங்கார பூவிதையாக ஜொலித்தபோது சொல்லமுடியாத மன நிறைவு ஏற்பட்டது. கும்பாபிஷேக ஏற்பாடுகளை நிர்வாக சபையினர் சிறப்பாகச் செய்திருந்தனர். தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 1008 சங்காபிஷேகத்தோடு பூர்த்தியாகி நிறைவு பெற்ற போது நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அன்னை அங்கு வந்து அருள் புரிவாள் என்பது திண்ணமாகியது.

இவ்வுலக இயக் கத்தில் நடைபெறும் ஸ்ருஷ்டி முதலான ஐந்தொழில்களில் காத்தல் பணியேற்றி

## பர்லிங்காம் நகரிலும் அவுஸ்திரேலியாக் கண்டத்திலும்



கருணை புரிந்து வரும் கார்மேக வண்ணனும் திருமாலுக்கு இந்தியா, இல ங்கை மற்றும் உலக நாடுகள் பலவற்றில் ஆலயங்கள் உள்ளன. திருப்பதி ஸ்ரீரங்கம் முதலான பெரும் ஆலயங்களைப் போல் யாழ்ப்பாணம் வல்லிபுரத்தாழ்வார் கோமிலும் மகிமை வாய்ந்தது. முற்காலத்தில் தமிழர்கள் ஆட்சி கடல் கடந்து விரிந்திருந்த காலத்தில் கட்டப்பட்ட இந்தொனேசியா, கம்போடியா விஷ்ணு ஆலயங்கள் இன்று வரலாறு சிறப்போடு விளங்கி வருகின்றன. கடந்த 50

ஆண்டுகளாக மேலை நாடுகளிலும் பெருமான் கோயில்கள் கட்டப்பட்டு வழிபாடு நடத்தப்படுகிறது. பரந்த தேசமான அமெரிக்காவில் பிட்ஸ்பரக் என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ள வெங்கடேஸ்வரர் கோயில் திருப்பதி கோயில் சூழ்நிலையைப் போலவே மலைகளும் இடையே அமைந்து காண்போர் மனதை கவருவதாக அமைந்துள்ளது. ஆஸ்திரேலிய நாட்டில் சிட்னி நகர அருகே ஹலன்ஸ்பர்க் என்ற இடத்தில் அமைந்துள்ள வெ ங்கடேஸ்வரர் கோயிலும் புகழ் வாய்ந்தது. இதேபோல் ஐரோப்பிய நாட்டில் விஷ்ணு ஆலயம் இல்லாத குறையை போக்குவதற்காக பக்தர்கள் பலர் ஒன்றுகூடி ஸ்ரீ வெங்கடேஸ்வரர் கோயில் அமைப்பைத் துவங்கி பர்மிங்ஹாம் நகரில் கீதாபவன் என்ற வடஇந்திய பாணி திருக்கோயிலில் விக்ரஹ பிரதிஷ்டை செய்து மாதந்தோறும் சிறப்பாக பூஜை நடத்தி வந்தார்கள்.

மஹாலக்ஷ்மியை மார்பில் தா ங்கும் மணிவண்ணன் திருவருளால் பக்தர்கள் நாளுக்குநாள் அதிகரித்து பர்மிங்ஹாம் அருகிலுள்ள டிவிடேல் என்ற இடத்தில் பெரிய இடம் வாங்கப்பட்டு கலையழகோடு கூடிய அபூர்வமான ஆலயம் அமைக்கப்பட்டு வருகிறது. சிற்ப கலைகளில் அனுபவமிக்க சிற்பிகளால் உருவாக்க ப்படுகின்ற இந்த ஆலயத்தின் இருபுறமும் திருமாலின் மருமகன்களாகிற கணபதிக்கும் கந்தப் பெருமானுக்கும் ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. ஸ்ரீ மகாகணபதி கோயில் முதலில் கட்டப்பட்டு சென்ற அன்று விக்ரஹ பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலய அறங்காவலர்கள், நிர்வாக குழுவினர் மற்றும் பக்தர்கள் இவர்களுடைய அயராத ஒத்துழைப்போடு கூடிய பக்தியினால் மிககோலாகலமாக நடத்தப்பெற்ற இந்த கும்பாபிஷேக வைபவத்தில் சீர்காழி திருக்கோலக்க சிவஸ்ரீ இராமநாத சிவாசாரியார் சௌந்தராபாத் ஸ்கந்தகிரி சிவஸ்ரீ பரமமேஸ்வர சிவாசாரியார் மற்றும் லண்டனில் புகழ்பெற்ற பல சிவாசாரிய பெருமக்களும் கலந்து யாக பூஜைகளையும் கும்பாபிஷேகத்தையும் சிவாகம முறைப்படி வெகு விமரிசையாக நடத்தி வைத்தார்கள். இதே தினத்தில் நடைபெற்ற ஸ்ரீ வெ ங்கடேஸ்வர பெருமான் உற்சவர் ஸ்ரீ பத்மாவதி ஸ்ரீதேவி பூதேவி தயார் உற்சவர் இவர்களுக்கும் பிரதிஷ்டை நடைபெற்றது ஸ்ரீவில்லாப்புத்தூர் ஸ்ரீமான் அனிந்த சயன பட்டாச்சாரியார் அவர்கள் வைஷ ்ணவ முறைப்படி இவற்றை சிறப்பாக செய்து வைத்தார்.

தொடர்ந்து மஹாபிஷேகமும் திருக்கல்யாண உற்சவமும் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேகத்தை காண வந்த பக்தப் பெருமக்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. குறிப்பாக இளைஞர்கள் அதிகமாக பக்தி ஈடுபாட்டுடன் தொண்டாற்றியது அனைவரையும் கவர்ந்தது தொடர்ந்து நடைபெற்று வரும் வெங்கடேஸ்வரப் பெருமான் ஆலய திருப்பணி மிக விரைவில் நிறைவேறி மஹாகும்பாபிஷேகம் நடை-பெற பிரார்த்திப்பதோடு திருப்பணிக்கு தாராளமாக பொருளதவி புரிந்து வெங்கடேஸ்வரசுவாமி அருளைப் பெற்று மகிழ்வோம்.

## தவறுக்கு வருந்துகிறோம்

The Editor
"Kalasam"

I am writing this letter,in response to an article by an author whose name I understand was inadvertantly omited titled "Plight of Saiva temples in Sri Lanka", in your 25th issue of "Kalasam" magazine. I was also saddened to note the plight of Saivaism and the state of the temple priests.

I was surprised at the writer's perception of Sri Sathya Sai Baba Organistion. The writer labels Sathya Sai Baba organisation as a heretic faith and a cult. If, such labelling was supported by serious examination, and study, it would merit inclusion in your esteemed magazine. A group termed "Hawaism Saivaism" mentioned in the article in issue, I presume, refers to a group whose revered leader is Satguru Sivaya Subramaniyaswami whom I hadd the good fortune to meet, in East London at a function arranged by your Sangam.

I believe this Swami is doing laudable service to the cause of Saivaism the same cause for which your magazine stands. His group too has been branded as a heretic faith and also as mirage of varying dimension , by the article in issue.

***I feel it opportune, to state that the Sathya Sai Organisation is not a heretic faith, a cult or a heretic organisation.***

The word "heretic" in the Oxford Dictionary means "one advocating an opinion contrary to an accepted doctrine". The Sathya Sai Organisation is neither a Faith nor a religion, but a Spiritual and service Organisation. It, in no way acts contrary to any doctrine of any faith, but inspires a Hindu to be a good Hindu, a Christian to be a good Christian and so forth. May God's grace be upon you for your continued good work.

Yours Faithfully
B. Balaraman

# கலசம் 25 ஆவத விழாவின் முதலாவது நாள் நிகழ்வின் சிலகாட்சிகள்










# இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில்
# சிவயோகம்
# திருமணமண்டபம்

**இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.**

**500 இருக்கைகள்**
**அழகிய மணவறைகள்**
**அலங்கார ஜோடனைகள்**
**இசைக் கருவிகள்**
**உணவு வசதிகள்**

சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள
இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்
தொடர்புகட்கு:
நிர்வாகி
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
சிவயோகம்

**தொலைபேசி: 0181 767 9881**

**தொலைநகல்: 0181 767 9881**

P.S. Ragu

# WELCOM CENTRE

# STAR MUSIC

## தரமான ஒலி ஒளிகள்

**FOREVER AND EVER GOOD QUALITY**

**OPEN 7 DAYS A WEEK 11.00AM-11.00PM**





திரை, இசை நட்சத்திரங்களின் புதிய– பழைய திரைப்படப் பிரதிகளையும், சீடி, சீடி வீடியோ, ஓடியோக்களையும், வார மாத தமிழ், ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**TEL: 0181 552 2727 / FAX: 0181 692 7759**

**209 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E6 1GH**

**TEL: 0181 472 6084**

**247, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SJ**

KUMARANS

# குமரன்ஸ்

**Exports & Inports**

உங்களுக்குஅன்றாடம் தேவையான லீலா தயாரிப்புகளை மொத்த விற்பனை விலைக்கு தொகையாக வாங்கி உங்கள் பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

# KUMARANS

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை
Specialist in 22 ct. Gold Jewellery

Western Jewellers



Creates the New Woman

230 UPPER TOOTING ROAD,
LONDON SW 17 7EW

Tel : 0181 767 3445

வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருக்கும்

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைப்பு செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 27.08. 99 அன்று வெளியிடப்பட்டது.